# பிரபாவம்



## உவெஸ்லி உயர்தர பாடசாலை - கல்முனை

(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவம்

கல்முனை உ வெஸ்லியின் ஓய்வு பெற்ற அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்களின் பிரியாவிடை நிகழ்வின் போது அகமகிழ்ந்து வெளியிடப்பட்டது

## ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் செய்தி

கிழக்கிலங்கையின் கல்வி அபிவிருத்தியில் கல்முனை உ வெஸ்லி உயர்தர பாடசாலைக்கும் ஒரு முக்கிய இடமுண்டு. தற்போது இது 138வது வருட புகழ்மிக்க நீண்ட வரலாற்றில் காலடி எடுத்து வைத்துள்ளது. இக் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர்களை கௌரவிக்கும் முகமாக, ஒழுங்கு செய்யப்படும் பிரியாவிடை நிகழ்வின் போது, அவர்களின் உயரிய சேவையினை நன்றியுடன் நினைவு கூரும் விதத்தில், சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிடுவது உணர்வு பூர்வமாகவும் பாரம்பரியமாகவும் பின்பற்றப் பட்டுவருகின்ற ஒன்று. காற்றில் கலைந்த கரவோசையாக அன்றி அழியாத பொக்கிசமாக அவர்களின் பெறுமதிமிக்க சேவை, நினைவு கூரப்படவேண்டும் என்பதே கல்லூரியின் எதிர்பார்ப்பாகும்.

இவ்வகையில் இப் பாடசாலையில் ஆசிரியர், உதவி அதிபர், பிரதி அதிபர், அதிபர் என்ற பொறுப்புமிக்க பதவிகளை வகித்து 26 வருடங்கள் மனநிறைவான சேவையாற்றி, எல்லோரது இதயங்களிலும் நீங்காத இடம்பிடித்து, ஓய்வு பெற்றுச் சென்ற, பேரன்புக்கும் மதிப்புக்கும் உரிய அதிபர் திரு.வ.பிரபாகரன் அவர்களின் ஆளுமையினை 'பிரபாவம்' என்ற இந்த மலர் சுமந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரபந்தம் - 96 வகைப்பட்ட நூல்
பிரபலம் - புகழ், வலியுள்ளது
பிரபஞ்சியம் - பிரபலம்
பிரபாகரன் - சூரியன், மீமாம்சமதக் கொள்கையைப்பரப்பிய ஆசிரியன்
பிரபாகீடம் - மின்மினி
பிரபாசன் - அட்டவசுக்களுள் ஒருவன்
பிரபாவம் - கீர்த்தி, ஒளி
பிரபிதாமகன் - பாட்டனின் தகப்பன்
பிரபு-பெருமையிற் சிறந்தோன், கொடையாளன்
பிரபுசத்தி - பொருள்படைகளால் அரசர்க்கு அமையும் ஆற்றல்
பிரபுத்தன் - யௌவன பருவமடைந்தவன்
பிரபுத்துவம் - பிரபுவின் தன்மை
பிரபுமோடி - பெருமிதம்
பிரபுலிங்கலீலை - சிவப்பிரகாச சுவாமிகள்செய்த அல்லமப்பிரபுவின் சரித்திரம்-1652
பிரபை - ஒளி, திருவாசி
பிரயோகசந்திரோதயம் - மாணைத் திருவேங்கட வாதரியத்திய வேதாந்த நூல்

"பிரபாவம்" என்ற சொல்லுக்கு மேன்மை, கீர்த்தி, வலிமை, புகழ் போன்ற பல கருத்துக்கள் உண்டு. திரு.வ.பிரபாகரன் அவர்கள் இப் பாடசாலையின் மேன்மைக்கும் கீர்த்திக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஒருவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் எதுவும் இருக்கமுடியாது, அதேநேரம் அவர் தனது தூய்மையான எண்ணங்களாலும், வலிமை மிக்க செயற்பாடுகளாலும் இப்பாடசாலையில் மட்டுமன்றி இப் பிரதேசத்திலும் மேன்மையுடன் மதிக்கப்படும் ஒருவராக விளங்குகின்றார். அத்துடன் இச்சொல் அவரது நாமத்தின் முன் ஒலியையும் இணைத்துள்ளது. இதனால் இம் மலருக்கு "பிரபாவம்" என்று பெயர் சூட்டியுள்ளோம்.

உலகத்தையே இன்று 'கொவிட்-19'வைரஸ் என்ற கண்ணுக்குப் புலப்படாத நெம்புகோல் புரட்டிப் போட்டுள்ளது. இன, மத, தேச வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து மக்களினதும் இயல்பு வாழ்க்கையினையும், இருப்பினையும் கேள்விக் குட்படுத்தியுள்ளது. இதுவே இம்மலர் வெளியீட்டையும், பிரியாவிடை நிகழ்வினையும் இவ்வளவு தூரம் தாமதப்படுத்தியமைக்கான பிரதான காரணமாகும். இதனை அன்புக்குரிய ஓய்வுபெற்ற அதிபர் திரு.வ.பிரபாகரன் "சேர்" அவர்கள் புரிந்துகொள்வார் என நம்புகின்றோம்.

இந்த மலரில் அவர் பற்றிய நினைவுகளை, அவரது நிருவாக ஆளுமையை, அவரின் சிறந்த குண நலன்களை பலர் தமது கட்டுரைகள், கவிதைகள் மூலம் மனந்திறந்து முன்வைத்துள்ளனர். அத்தனை உள்ளங்களுக்கும் இப் பாடசாலையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இந்நூல் நல்ல முறையில் வெளிவருவதற்கு எங்களோடு துணை நின்ற இப்பாடசாலையின் பழைய மாணவனும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான திரு. சிவ-வரதராஜன் அவர்களுக்கும் இதனை அழகான முறையில் அச்சிட்டு வழங்கிய "விக்டரி" அச்சகத் தாருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தொவித்துக் கொள்கின்றோம். நன்றி.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
உவெஸ்லி உயர்தர பாடசாலை,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரபாவம்

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின்
ஓய்வுபெற்ற அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்களுக்கான
பிரியாவிடை நிகழ்வின்

## சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி தக்ஷஜானந்தர் அவர்களின் ஆசிச்செய்தி


கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையானது, அங்கு கடமையாற்றி ஓய்வு பெறும் அதிபர்களைக் கௌரவித்து மலர் வெளியிடும் பாரம்பரியம் கொண்டது. அந்த வகையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற திரு. வ. பிரபாகரன் அவர்களின் சேவையைப் பாராட்டி வெளியிடும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி.

மாணவர்களின் மன இயல்புக்கு ஏற்றபடி அவர்களின் நிலைக்கு கீழ் இறங்கி போதிப்பவரே நல்லாசிரியர். இத்தகைய பணியை ஆசிரியராக, உதவி அதிபராக, அதிபராக பதவி வகித்து நீண்டகாலம் பணியாற்றி, அப் பணியிலிருந்து ஓய்வு பெறும் திரு. வ. பிரபாகரன் அவர்களின் சேவை பாராட்டுக்குரியது. அதுமட்டுமல்லாமல், எமது பாடசாலையான சிவானந்தா வித்தியாலயத்தில் அவர் மாணவராக இருந்துள்ளார். இராமகிருஷ்ண மிஷனை வழிநடத்தும் ஆன்மீகக் கலாசாரத்தை அறிந்துள்ளார் என்பது இரட்டிப்பு மகிழ்ச்சி அளிப்பதாகும்.

தன்னலம் கருதாது மக்களுக்குச் சேவை புரிகின்றவர் ஒருவர் கடவுளுக்கே சேவை செய்கின்றார். மலர் வெளியீடு இனிதே நடைபெற அனைவருக்கும் இறைவன் அருள்புரிய வேண்டுமென தெய்வத் திருமூலரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை சேகர முகாமைக்குரு அருட். திரு. S.D. வினோத் அவர்களின் ஆசிச்செய்தி



கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உவெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபரும், கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் சேகர உக்கிராணக் காரருமான திரு. வடிவேல் பிரபாகரன் அவர்களைக் குறித்து எழுதக் கிடைத்த தருணத்திற்கு இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

நான் மெதடிஸ்த திருச்சபை கல்முனை சேகரத்திற்கு குருவானவராக வருவதற்கு முதலே திரு. வ. பிரபாகரன் அதிபரை எனக்கு தெரியும். இவர் எமது இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் முக்கிய பொறுப்பாக உள்ள உப தலைவர் என்ற பொறுப்பை கடந்த காலங்களிலே ஏற்று இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவராக ஒரு வருடம் பணியாற்றியுள்ளார். இவர் அனைத்து மக்களுடனும் நல்லுறவை வளர்ப்பதிலும் சினேகத்துவத்தை உருவாக்குவதிலும் சிறந்து விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது கல்முனை மெதடிஸ்த திருச்சபையில் திரு.வ.பிரபாகரன் அவர்கள் சிறந்த வழிகாட்டியாகவும், கடவுளுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் சிறந்த பிரசங்கியாளராகவும், உண்மைத்துவம் நிறைந்த, நேர்மையுள்ள ஒரு சிறந்த உக்கிராணக்காரராகவும் பணியாற்றுகின்றார் என்று சொல்வதில் கல்முனை மெதடிஸ்த திருச்சபை மகிழ்ச்சியடைகின்றது. இவரை சிறந்த ஒரு சேவையாளராக நான் காண்கின்றேன். திருச்சபை வாழ்வோடு இணைத்து பார்க்கும் பொழுது எமது மெதடிஸ்த திருச்சபையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். மற்றும் இவர் திருச்சபையின் அனைத்து மக்களையும் உள்வாங்க வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டவராகவும் விளங்கினார். அதாவது கடவுளின் பணியில் சகலரையும் உள்வாங்கி பணியாற்ற வேண்டும் என்பதிலே அதிக அக்கறை கொண்டவர்.

யார் ஒருவர் தன்னால் இயலாது என்று தன் மனதில் நினைக்கின்றாரோ அவரை முன்கொண்டு வருவதில் ஆர்வம் காட்டிய ஒருவர். திருச்சபையில் குறிப்பாக சிறுவர்கள், முதியவர்களை இவர், அவரது மனதிலே அதிகம் உள்வாங்கியவராக அவர்களை பணிகளில் பயன்படுத்த வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டவராக விளங்கினார்.

திருச்சபை வாழ்வில் அனைவரையும் சமமாக கருத வேண்டும் என்ற மனநிலை கொண்டவர். எமது சபை கூட்டங்களில் ஐயா அதிகம் பேசமாட்டார். ஆனால் அவர் கூட்டங்களில் பேசினால் அது பெறுமதியுள்ள கருத்தாகவும், ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகவும் காணப்படும். மற்றும் பாடசாலையில் இவரது சேவை குறித்துப் நோக்கும் போது இவரது அதிபர் சேவை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் போற்றப்பட வேண்டிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆசிரியருடனும், மாணவருடனும் அன்போடு கூடிய கண்டிப்பை இவரது நிர்வாகத்தில் நான் கண்டுள்ளேன். திரு.வ.பிரபாகரன் ஐயா அவர்கள் பிள்ளைகளின் நிலைகளை பாடசாலை மட்டத்தில் மட்டும் பார்க்காது குடும்ப சூழல்களையும், அவர்களது பின்னணிகளையும் நன்கு அறிந்து முடிவுகளை எடுப்பவர். இதை அவரது சிறப்புப் பண்பாக நான் காண்கிறேன்.

இதே வண்ணமாக ஆசிரியர்களின் நிலைகளையும் அறிந்து அவர்களுக்கு ஏற்ற விதமாக சேவையாற்றக் கூடியவர் திரு. வ. பிரபாகரன் அவர்களை அதிபராக கண்ட நாட்களில் இருந்து பாடசாலையில் அதிக நேரத்தைச் செலவிட்டு பாடசாலை அபிவிருத்திக்கு அக்கறை காட்டிய ஒருவராகக் காண்கிறேன்.

இவரது குடும்பத்திலே தனது மகனை ஒரு வைத்தியராக உருவாக்கியது சமூகத்திற்கு செய்த தொண்டாகக் கருதுகிறேன்.

எனவே திரு. வ. பிரபாகரன் ஐயா அவர்கள் உவெஸ்லி உயர் தர பாடசாலைக்கும், கல்முனை மெதடிஸ்த திருச்சபைக்கும், இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்கும் திருச்சபைக்கும் கிடைத்த கொடையாக கருதி, இறைவன் இவர் குடும்பத்தை ஆசீர்வதிக்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை உலமா சபை செயலாளர் அவர்களின் ஆசிச்செய்தி





**அஷ் - ஷெய்க்: U.L.S. ஹமீட் (ஹாமி)**
பிரதி அதிபர்
கமு/சது/ சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்,
(தேசிய பாடசாலை).

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் ஓய்வு பெற்ற அதிபர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருவது மிகவும் மகிழ்ச்சிகரமான செய்தியாகவும், பாராட்டுக்குரியதாகவும் உள்ளது.

கடந்த 2019-08-10ம் திகதி அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற கண்ணியத்துக்குரிய திரு. பிரபாகரன் அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவின்போது வெளிவரவுள்ள சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். அதிபர் பிரபாகரன் அவர்கள் நல்ல குடும்பத்தில் பிறந்த கண்ணியமான மனிதர் ஆவார். கற்பித்தல் பணியில் கண்ணியமும் கடமையில் நாணயமும், செயற்பாடுகளில் நேர்மையும் கொண்ட இவர் நல்லாசான்களுக்கும், திறமையான அதிபர்களுக்கும் ஒரு முன்மாதிரியாகவும், உதாரண புருஷராகவும் திகழ்ந்த ஒரு முதுஷமாவார்.

ஆசிரியராகக் கடமைபுரிந்த காலத்தில் மாணவர்களைக் கவரும் விதத்தில் கற்பித்தல் பணிபுரிந்த இவர், அதிபர் பதவியில் இருந்தபோது நிருவாகத்தை செம்மையாகவும் நேர்மையாகவும் செய்து சகலரின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டவர். இப்புனிதமான பணியில் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உதவி, பிரதி அதிபராக, அதிபராக பல பதவிகளிலும் பணி புரிந்த கண்ணியவானவர். சமூக பொதுப் பணிகளில் ஈடுபட்டு சமூகத்திற்குத் தொண்டுபுரியும் இவர் ஆத்மிக பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். இவர் ஓய்வு பெற்ற பின்பும் பல சமூகப் பணிகளைச் செய்து நீடூழி காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஏற்றம் மிக்க கல்விப் பணிக்காக தன்னை அர்ப்பணித்தவர்

**கௌரவ. த. கலையரசன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
திகாமடுல்ல மாவட்டம்.

கல்முனை மாநகரத்தின் மத்தியில் கல்விச் செல்வத்தை வழங்கி வரும் சீரிய நற்பணியில் நீண்டதொரு வரலாற்றைக் கொண்ட பழம் பெரும் பாடசாலையான கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் சிறப்பான அதிபராகக் கடமையாற்றி, சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திரு. வ. பிரபாகரன் அவர்களது சேவையினைப் பாராட்டி கௌவிக்கும் விழாவில் வெளியிடப்படும் இந்த சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

திரு. பிராபாகரன் அதிபர் அவர்கள் தனது 34 வருட சேவைக் காலத்தில் 26 வருடங்களை இப்பாடசாலையின் ஏற்றம் மிக்க கல்விப் பணிக்காக தன்னை அர்ப்பணித்திருக்கின்றார் என்பது பாராட்டுக்குரியதாகும். சிறந்த ஆளுமையும், தனித்துவமும், நிர்வாக ஆற்றலுமுள்ள அதிபர் என்பதை நன்கறிவேன். சிறந்த அதிபர்களுக்கு வழங்கப்படுகின்ற ஜனாதிபதி விருதான "குரு பிரதீபா பிரபா" விருதினை தொடர்ந்து ஆறு தடவைகள் பெற்று சாதனை படைத்திருக்கிறார். இது கல்விச் சமூகத்திற்கு முன்மாதிரியான ஓர் அதிபர் என்பதையே எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

தனக்கென தனித்துவமான தரிசனத்தைக் கொண்டு விளங்கும் இப்பாடசாலையில் இன, மத, மொழி வேறுபாடுகளின்றி பல்வேறுபட்ட சூழல்களிலிருந்து வருகின்ற மாணவர்களை உள்வாங்கி அவர்களின் கல்வி மேம்பாட்டுக்குத் தேவையான வளங்களைத் தேடிப்பெற்றுக் கொள்வதில் பெரும் பங்கினை வகித்தார். உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் சேவையாளர்களைத் தேடிக் கண்டறிந்து இப்பாடசாலையின் உயர்ச்சிக்காய் வளங்களைக் கொண்டு வந்து சேர்ப்பதில் இவர் எடுத்த முயற்சிகள், தியாகங்கள் என்பன பாராட்டுக்குரியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூளையில் சில விடயங்களைத் திணிப்பது மாத்திரம் கல்வி ஆகாது" என்பது சுவாமி விவேகானந்தரின் வாக்கு. தன்நம்பிக்கையை வளரச் செய்வதும் சுய ஆற்றலை வெளிக் கொணரச் செய்வதுமே உண்மையான கல்வியாகும். அந்த வகையில் இவர் அதிபராகக் கடமையாற்றிய இறுதிப் பத்தாண்டுகளில் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் உயர்ச்சியும், கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவுகளிலிருந்து பல துறைகளுக்கும் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகின்ற மாணவர் தொகை அதிகரிப்பும் சிறப்புக்குரியதாகும். அத்தோடு இப்பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கங்களையும் வெற்றிக் கேடயங்களையும் பெற்று வெற்றிவாகை சூடியிருக்கின்றது. இவையனைத்தும் திரு. பிரபாகரன் அதிபர் அவர்களின் கடமையுணர்வுக்கும், சிறந்த முகாமைத்துவத்துக்கும், ஆளுமைக்கும் கிடைத்த பரிசாகவே கருதுகிறேன்.

தனது கல்விப் பயணத்தினை ஓய்வில்லாமல் கொண்டு சென்றது போன்றே சமூகப்பணியிலும், புனித ஆன்மீகப் பணியிலும் தன்னை அர்ப்பணித்து சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர். சமூகத்திற்கு சேவை செய்பவர்களை வாழும் பொழுதே வாழ்த்த வேண்டும் என்ற முனைப்புடன் அவர்களைப் பாராட்டிய அவரின் மகத்தான பண்பு என்றும் போற்றுவதற்குரியதாகும்.

பாடசாலையின் மகுட வாசகத்திற்கேற்ப 'முற்றாய் உயர்ச்சிக்காகத்' தன்னை அர்ப்பணித்து உவெஸ்லி உயர்தர பாடசாலையை மேலும் ஒருபடி உயர்த்திய அதிபரின் சேவையினைப் பாராட்டி தொடர்ந்தும் நீண்ட ஆயுளுடன் சமூக நலன் கருதி தொண்டுகளைச் செய்து சமூகத்தில் ஓர் ஒளி விளக்காகத் திகழ வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. எஸ். புவநேந்திரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்,
கல்முனை.

# தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவகர்

கல்விக்கு கலங்கரையாய் விளங்கும் கல்முனையில் கல்வியில் பலரை கரைசேர்த்த பழம் பெரும் வரலாற்றைக் கொண்ட பாடசாலைகளுள் உவெஸ்லி உயர்தர பாடசாலையும் ஒன்றாகும். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வளம் சேர்த்த பல அதிபர்களுள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவராக திரு. வ. பிரபாகரன் அவர்கள் திகழ்கின்றார். அவரின் சேவைகளைப் பாராட்டி வெளியிடப்படும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு பாடசாலையை முகாமைத்துவம் செய்வதென்பது இலகுவான காரியமல்ல. பல சவால்களுக்கு முகம் கொடுத்து அர்ப்பணிப்புடன் சேவை புரிந்தால் மட்டுமே சிறந்த பாடசாலையைக் கட்டியெழுப்ப முடியும். அவ்வாறு பல சவால்களை எதிர்கொண்டு, தன்னலமற்ற சேவை புரிந்து, அனைவரது மனங்களையும் கவர்ந்து கொண்ட ஒரு சிறந்த அதிபராக நான் திரு.பிரபாகரன் அவர்களைக் பார்க்கிறேன்.



பல்வேறு இடங்களிலிருந்து பல்வேறு சமூக பின்னணிகளைக் கொண்ட மாணவர்கள் இந்தப் பாடசாலைக்கு அதிகளவில் வருகிறார்கள். அவர்களின் குடும்ப நிலைகளையும் முன்னேற்றங்களையும் மனதில் கொண்டு திருப்திகரமான ஒரு சூழலை உருவாக்கி, பலரையும் கட்டிக்காத்து கண்ணியமான ஒரு சேவையினை வழங்கிய உன்னதமான ஒரு அதிபராக திரு. பிரபாகரன் அவர்களை அறிகின்றேன்.

சரியானவர்களை இனங்கண்டு, பாடசாலை நிர்வாகக் கடமைகளைப் பகிர்ந்தளித்து, சிறந்த சேவைகளை முன்னெடுப்பதில் வல்லவராக இவர் விளங்கினார். அது மாத்திரமின்றி பேச்சாற்றல், கவிதை புனைதல், பாடல் வரிகளை இயற்றுதல் போன்ற பல்வகை ஆளுமைகள் படைத்த ஒரு சிறந்த சிந்தனையாளரும் படைப்பாளியும் ஆவார்.

இவர் அதிபராக கடமையாற்றிய காலத்தில் இப் பாடாசலையானது கல்விச் செயற்பாடுகளில் மட்டுமின்றி, இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் தேசிய ரீதியில் பல வெற்றிகளைப் பெற்று, எமது கல்முனைக் கல்வி வலயத்திற்கு புகழையும் பெயரையும் ஈட்டித் தந்திருக்கின்றது. அத்தோடு இப்பாடசாலையின் ஆசிரியர்கள் பலர் இவரது காலத்தில் சிறந்த ஆசிரியருக்கான விருதுகளை (குரு பிரதீபா பிரபா) பெற்று கௌரவிக்கப்பட்டிருக்கின்றார்கள். திரு. பிரபாகரன் அவர்களும் பல தடவைகள் சிறந்த அதிபருக்கான விருதைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவ்வாறாக சிறந்த ஆளுமை கொண்ட அதிபராக விளங்கிய இவர், தமது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றுச் செல்லும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவரின் சேவையை வாழ்த்துவதோடு நீண்ட காலம் வளமுடன் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய அதிபர்

**திரு. செல்லத்தம்பி கலையரசன்**
அதிபர்,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

கிழக்கிலங்கையில் 137 வருடங்களையும் தாண்டி அறிவொளி பரப்பும் எமது உவெஸ்லி உயர்தர பாடசாலை கல்வியோடு இணைந்ததாக பல்வேறு விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் பேணி வளர்க்கும் வழக்காற்றைக் கொண்டுள்ளது. அதன் வழியே இப்பாடசாலையில் பொறுப்பு அதிபர்களாக கடமையாற்றி தமது சேவையை நிறைவு செய்யும் அதிபர்களை கௌரவிக்கும் முகமாக மலர் ஒன்றினை வெளியிடுவது எமது மரபாகும். இந்தவகையில் 2019-09-15 ஆந் திகதியுடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற மதிப்பிற்குரிய முன்னாள் அதிபர் திரு. வடிவேல் பிரபாகரன் அவர்களுக்கான இம்மலரின் ஊடாக எனது மனதிலிருந்து கிடைத்த இப்பதிவுகளை உங்களோடு பகிர சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்வடைகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் 2004 ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்த வேளையில் அதிபராக அமரர். பொன். முருகையா அவர்களும் பிரதி அதிபராக திரு. வ. பிரபாகரன் அவர்களும் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். 2009 இல் திரு. வ. பிரபாகரன் அவர்கள் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட வேளையில் அவருடன் இணைந்து பிரதி அதிபராக பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதிபரான திரு. வ. பிரபாகரன் அவர்கள் தனக்கே உரித்தான பாணியில் மாணவர்களின் பாடவிதான இணைப் பாடவிதான அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தியதுடன் பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையேயும், பாடசாலை, கல்வி அலுவலகம், ஏனைய திணைக்களங்கள் போன்றவற்றுக்கிடையேயும் உறவை மேம்படுத்த வலுவான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், மாணவர்களின் அடைவு மட்ட மேம்பாட்டிற்காகவும் பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் அவரது வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டன. அதில் மாலை நேர வகுப்புகளும் தவணை விடுமுறைக்கால மேலதிக செயற்பாடுகளும் முக்கியமானதாகும். ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம் வரையில் தனது மேற்பார்வைத் திட்டத்தை விஸ்தரித்த அவர் இப் பாடசாலையில் இயங்குவதற்கு விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வியை வழங்குவதிலும் அதிக அக்கறை காட்டினார்.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை பிரதான நோக்காகக் கொண்டு பாடசாலைக்கு வெளியே இருந்து பாட நிபுணத்துவம் பெற்ற வளவாளர்களை அழைத்து விசேட கருத்தரங்குகளையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டார். இவ்வாறான சந்தர்பங்களின் போது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினதும் நலன் விரும்பிகளினதும் ஒத்தழைப்பு பெறப்பட்டமை முக்கிய அம்சமாகும். இச் செயற்பாடுகளின் பிரதிபலிப்பால் பொதுப் பரீட்சை பெறுபேறுகளில் அதிகரிப்பு ஏற்பட்டது. இதனால் பாடசாலையில் புதிதாக இணைகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இணைப் பாடவிதான மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அவரின் செயற்பாடுகளால் பாடசாலை மாணவர்கள் அகில இலங்கை மட்டம் வரை சென்று பங்குபற்றி இருந்தனர். இதற்கு மகுடம் வைத்தாற்போல் கடந்த வருடம் அகில இலங்கை மட்டத்தில் இரு மாணவிகள் தங்கப்பதக்கங்களை பெற்றமை பாடசாலை வரலாற்றின் முதல் பதிவாகும்.

மேலும் கடின பந்து "கிரிக்கட்" அணி ஒன்றை உருவாக்குவதில் அதிக அக்கறை செலுத்தியதால் கடந்த வருடம் அம்மாணவர்கள் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்தில் பங்குபற்ற காத்திருக்கின்றனர். அது மட்டுமன்றி "கிழக்கின் கரையோரச் சமர்" எனும் தலைப்பிலே கடின பந்து கிறிக்கட் தொடர் ஒன்றை காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியுடன் இணைந்து நடாத்தியமையும் முக்கிய விடயமாகும்.

மேலும் வித்தியாசமான தனது சிந்தனைகளை ஆசிரியர் கூட்டங்களில் முன்வைத்து ஆசிரியர்களிடமிருந்தே அதற்கான செயல் வடிவத்தை வடிவமைப்பதில் கை தேர்ந்தவர். இதனால் அவரை நாம் "சிந்தனைச் சிற்பி" எனவும் அழைப்போம். ஆசிரியர் கூட்டங்களின் போது இறுக்கமாக நடந்து கொண்டாலும் கூட்டம் முடிவடையும் தறுவாயில் சிறிதொரு நகைச்சுவையான விடயத்தைக் கூறி அல்லது ஒரு விடயத்தின் ஆரம்பத்தைக் கூறி இறுதியை அல்லது முடிவைக் கூறாது வெளியேறி மற்றவர்களைச் சிந்திக்க வைப்பதில் சிறந்து விளங்கினார்.

எமது பாடசாலையின் ஆசிரியர்களை இணைத்து ஒரு மேலைத்தேய "பேண்ட்" அணியை உருவாக்கி, அதன் மூலமாக நிகழ்வுகளையும் நடாத்தியதுடன் பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகளுக்கென தனித்துவமான சீருடையையும், கழுத்துப்பட்டியையும், உருவாக்கிய செயல்வீரன்.




எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தை மீள் உருவாக்கம் செய்து, அதற்கென யாப்பு ஒன்றினையும் உருவாக்கியது மட்டுமின்றி உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளில் கல்முனை உவெஸ்லியின் பழைய மாணவர் சங்கக் கிளைகளை நிறுவுவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டார். இக் காலகட்டத்தில் இங்கிலாந்து நாட்டில் வசித்த அமரர் ஸ்ரான்லி ஜெயராஜா எனும் போதகர் மூலமாக வெளிநாட்டிலும் இலங்கையிலுமிருந்த அவரது நண்பர்களின் பங்களிப்பின் மூலம் எமது பாடசாலையில் சாரணர் அறை ஒன்றும் உருவாக்கப்பட்டதுடன். 1978 ஆம் ஆண்டு கல்வி கற்ற பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலையின் பிரதான வீதியில் உள்ள முகப்பு வாயிலை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றி கண்டார். அது மட்டுமின்றி மாகாணமட்ட விவசாய கண்காட்சியின் ஓர் அம்சமாக வாடிவீட்டு வீதிப்புறமாக ஒரு வாயிலும் அமைக்கப்பட்டது.

எமது பாடசாலையின் 135ஆவது ஸ்தாபகர் தினத்தினை நினைவுகூரும் முகமாக உவெஸ்லி நடைப்பயனம்" (Wesley Walk) என்னும் தலைப்பில் பழைய மாணவர்களையும், பாடசாலை சமூகத்தையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் ஒன்றிணைத்து விழிப்பூட்டும் விதத்தில் அந்நிகழ்வினை நடாத்தினர். அத்தோடு பழைய மாணவர் சங்கத்தினால் "T shirt & Cap" என்பன உவெஸ்லியின் பெயரால் தயாரிக்கப்பட்டு, விநியோகத்தினை மேற்கொள்வதற்காகவும் கைகொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008ம் ஆண்டு விசேட கல்விப் பிரிவை நடாத்திச் சென்ற -Deatlink- நிறுவனம் அந்த அலகினை பாடசாலையுடன் இணைத்து அதனை நிருவகிக்கும் பொறுப்பினை பாடசாலைக்கு வழங்கியது. அவ்வேளையில் அம் மாணவர்களோடு சமூகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்பூட்டி 28ஆக இருந்த மாணவர் எண்ணிக்கையை 56ஆக உயர்த்துவதற்கு பல பிரயத்தனங்களைச் செய்தார். அது மட்டுமின்றி, அவர்களின் நலனை மேம்படுத்த அரசசார்பற்ற நிறுவனங்களினதும், தனிநபர்களினதும் உதவிகள் பெறப்பட்டு, அந்த நிலையம் விஸ்தரிக்கப்பட காரணமானார்.

மாணவர்களின் கல்வியில் பொருளாதாரம் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்பதை நோக்காகக் கொண்டு திறமையான, வசதிகுறைந்த மாணவர்களுக்கு பரோபகாரர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களின் கல்வி அபிவிருத்தியில் ஏணியாகவிருந்து வெற்றி கண்டார்.

அவரிடம் கல்வி கற்ற அல்லது அவர் பாடசாலையில் சேவையாற்றிய காலத்தில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் பல தேவையின் பொருட்டு பாடசாலைக்குள் நுழைந்து அவரிடம் சென்றால் உரிய மாணவர்களின் பெயரைக் கூறியழைத்து, அவர்களின் குறும்புகளையும் குழப்படிகளையும் நகைச்சுவையுடன் ஞாபகமூட்டி திக்குமுக்காடச் செய்வதில் வல்லவர். அது மட்டுமின்றி சிலவேளைகளில் அவர்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள் ஏனைய பொருட்களையும் எடுத்துக்காட்டியும் விடுவார்.

பாடசாலையில் நடைபெறும் மாணவர்களின் குழப்படிகள், குற்றங்கள், முரணான நடத்தைகள் என்பவற்றை அறிந்து வைத்து, என்றாவது ஒரு நாள் அவர் சம்பந்தப்பட்ட மாணவர்களை அழைத்து விசாரணைகளை நடாத்துவார். இரவு பகல் பாராது பல நாட்கள் அவ்விசாரணைகள் தொடரும். மாணவர்கள் கடிதம் கடிதமாக அல்லது அறிக்கைகளாக எழுதி, ஓய்ந்து, இறுதியில் உண்மையை அவர்களாகவே கூறும்படி செய்து விடுவதில் அவர் ஒரு விற்பன்னர். மாணவர்களாயினும், ஆசிரியர்களாயினும் அல்லது வேறு எவராயினும் ஒரு விடயத்தைப் பற்றிக் கூறினால் அந்த விடயத்தை ஞாபகத்தில் வைத்து, தேவையான வேளையில் கால நேரத்துடன் எந்த இடத்தில் எவ்வாறு நடந்ததென்று ஆதாரங்களுடன் ஒப்புவிப்பார்.



அவரிடம் நான் கண்ட குணாம்சங்களில் முக்கியமானதாக "மெதடிஸ்த திருச்சபையின்" மீது மிகுந்த பற்றும் மரியாதையும் கொண்டவர். மெதடிஸ்த திருச்சபையினர் இங்கிலாந்து தேசத்திலிருந்து இலங்கை வந்து செய்த சேவைகளை உணர்வு பூர்வமாக எத்தனை தடவை யார் கேட்டாலும் சலிப்பின்றிக் கூறுவார். அத்துடன் அவர் சிவானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்திலிருந்து வாகனங்களின் இலக்கங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதாக கூறுவார்.

தற்போதும் தனது நண்பர்கள், சகபாடிகள், ஆசிரியர்கள் மற்றும் தான் அறிந்தவர்கள் போன்றோரின் வாகனங்களின் இலக்கங்களை ஞாபகத்தில் வைத்து குறிப்பிட்ட வாகனத்தின் இலக்கத்தை கூறி அது நின்ற இடங்களையும் சுவாரசியமாக அவ்வப்போது பகிர்ந்த சந்தர்ப்பங்களும் உண்டு. மேலும் அவர் எங்கு இருந்தாலும் அவரைச் சுற்றி ஒரு கூட்டமிருக்கும் அத்தோடு அச்சந்தர்ப்பங்களில் நகைச்சுவைக்கும் சிரிப்புக்கும் பஞ்சமிருக்காது. அத்துடன் எந்த நிகழ்வு எங்கு நடந்தாலும் அந்த இடத்திற்கு உடனே சென்று விடுவதிலும் அதில் பங்கு கொள்வதிலும் அவர் சலிப்புக்காட்டியதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எந்தவொரு காரியத்தையும் தாம் முன்மாதிரியாக செய்து காட்டவேண்டும் என்ற சிந்தனையுடைய இவர் சில வேளைகளில் பாடசாலை வளாகத்தில் குப்பைகளைக்கூட பொறுக்குவார். இதனால் அவ்வப்போது நாங்களும் அவரோடு இணையவேண்டி வந்த சந்தர்ப்பங்களும் உண்டு. இதுபோன்ற விடயங்களை எம்மால் இலகுவாக மறக்க முடியாது. பாடசாலையில் சில காலம் துப்பரவுத் தொழிலாளர் இல்லாத வேளையில் அவரோடு இணைந்து நாம் சுத்திகரிப்புக்களை மேற்கொண்டமை எமது கண்முன்னே இன்னும் நிழலாடுகின்றது.

பாடசாலையில் நடைபெற வேண்டிய விழாக்களான க.பொ.த சாதாரண தர விழா "உரைகல்" சஞ்சிகை வெளியீடு, க.பொ.த உயர்தர விழா 'கண்ணோட்டம்' சஞ்சிகை வெளியீடு, O/L Day, A/L Day, ஸ்தாபகர் தினம், ஆசிரியர் தினம், வாணி விழா, கிறிஸ்து ஜெயந்தி விழா (ஒளி விழா), மீலாத் விழா, வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, மாற்றுத்திறனாளி தினம், சிறுவர் தினம், சுற்றாடல் தினம், பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த பரிசளிப்பு விழா என்பனவற்றை உரிய கால நேரத்தில் எப்பாடு பட்டாவது நடாத்தி முடித்து விடுவார். அது மட்டுமன்றி, வருடாந்த ஆசிரியர் ஒன்று கூடலை இரவுநேர விருந்துபசாரத்துடன் நடாத்துவதில் அலாதிப்பிரியம் கொண்டவர். அத்துடன் ஆண் மாணவர்களுக்கான விடுதி ஒன்றை உருவாக்கி, குறிப்பிட்ட காலம் நடாத்தி வந்ததுடன் அவர்களை மகிழ்வூட்டும் முகமாக (HOSTEL NIGHT) என்கின்ற நிகழ்வினையும் ஏற்பாடு செய்து, நடாத்தி, வழிகாட்டி இன்புற்றவர். அந்நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் இவற்றையும் மறக்கமாட்டார்கள்.

மேலும் பெற்றோர்களின் உதவியுடன் பாடசாலையில் அழிந்து போகும் நிலைமையில் இருந்த இரு மண்டபங்களை புனரமைப்பு செய்து, அதற்கு 'றிம்மர் மண்டபம்', 'ஜெ.சி. ஜேசுதாசன்' மண்டபம் என பெயரிட்டு, முன்னைய அதிபர்களை கௌரவப்படுத்தினார்.



எந்த சூழ்நிலையையும் தனக்கு சாதகமாக்கி பேசக்கூடிய பேச்சாற்றல் மிக்க இவர், தனது லாவண்ணியமான பேச்சால் எந்தச் சபைகளையும் கட்டிப் போட்டு விடுவார். மேலும் ஒரு கவிஞரான இவர் ஸ்தாபகர் தினப் பாடல், மாற்றுத்திறனாளி தினப் பாடல், என்பவற்றை இயற்றியதோடு அமரர். முருகையா அவர்களின் மறைவின் போது இயற்றிய இரங்கல் பாடலும், காலஞ்சென்ற S.S.J மத்தியு அடிகளார் அவர்களின் மறைவின் போது இயற்றிய அஞ்சலி பாடல்களும் முக்கியமானதாகும்.

மேலும் இலங்கை அரசால் வழங்கப்படும் சிறந்த அதிபருக்கான "குரு பிதீபா பிரபா" என்கின்ற உயரிய விருதை 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாகப் பெற்றவர் என்பதையும் குறிப்பிட்டேயாகவேண்டும். அத்துடன் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர் சங்கத்தின் தலைவராக தனது ஓய்வு வரை பணியாற்றியவர்.

என்னைப் பொறுத்த வரை நான் கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராகக் கடமையாற்றும் வாய்ப்புக் கிட்டிய வேளையில் எனக்கான பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் அவர் வழங்கியதோடு மட்டுமன்றி வாழ்த்தவும் தவறியதே இல்லை.



அவரோடு இணைந்திருந்து பெற்ற அனுபவங்களும் பயிற்சிகளும் பல்வேறுபட்ட விதத்தில் எனக்கு உதவுமென எதிர்பார்க்கின்றேன். அத்துடன் பிரதி அதிபராக அவரோடு இணைந்து இருந்த காலங்களில் ஒரு பாடசாலையின் பிரதி அதிபருக்கு கிடைக்கவேண்டிய பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் வழங்க அவர் தவறியதில்லை "தம்பி" என்று அழைத்து விடயங்களை கூறும்போது ஒரு உடன் பிறந்த சகோதரருக்குரிய மரியாதையுடனும், கண்ணியத்துடனும் அவரை கனம் பண்ண நான் தவறியதில்லை. அவரின் ஓய்வுக்குப் பின்னர் பாடசாலைப் பொறுப்பை என்னிடம் ஒப்படைக்கும் இறுதித் தருணத்தில் அவரால் வழங்கப்பட்ட அறிவுரைகளையும், வழங்கப்பட்ட ஆசீர்வாதத்தையும் என் வாழ்வில் முக்கியமானதாகவே கருதுகின்றேன்.

அவரின் ஓய்வின் பின்னர் வெகு விரைவாக அவரது சேவை நலன் பாராட்டு விழாவை மேற்கொள்ள வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டதுடன் பல தடவைகள் அதற்கான வேலைகளைத் துரிதப்படுத்தினேன். எனினும் பல்வேறுபட்ட விதத்தில் ஏற்பட்ட தாமதங்களை தவிர்க்க முடியாது போனது எனக்கும் கவலையே. எனினும் இந்த மலரை தயாரிப்பதில் உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மதிப்பிற்குரிய திரு. வ. பிரபாகரன் அவர்களே இக்கால தாமதத்தை நீங்கள் புரிந்து கொண்டு பொறுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் உவெஸ்லி உள்ளவரை உங்களது நாமம் நிலைத்திருக்கும். அத்துடன் எதிர்காலத்தில் உங்களை அழைக்கும் போதெல்லாம் எங்களோடு இணைய வேண்டும் எனக்கேட்டுக் கொண்டு, எதிர் காலத்தில் மேலும் பல சேவைகள் செய்து, சிறப்படைய பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், நலம் விரும்பிகள், பழைய மாணவர்கள் சார்பாக வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் ஒழுக்க நெறிகளும் அவற்றின் வெற்றிகளும்

**திரு. M.K.M. மன்சூர்**
முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளர்,
கிழக்கு மாகாணம்.

எவரும் பிரபாகரனிடம் எதிர்பார்ப்பதைவிடவும் உயர்வான பண்புத் தகுதி உள்ளவனாக அவன் தன்னை எப்போதும் பேணி வைத்துள்ளான்.

1981ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து இன்றுவரை எனக்கும் பிரபாகரனுக்குமிடையிலான தொடர்புகளும், உறவுகளும் மேற்கண்டவாறு என்னை எண்ணத் தூண்டி இருக்கின்றது. பல்கலைக் கழகத்தில் ஒன்றாகக் கல்வி கற்றவேளை எல்லாவற்றையும் முன்னின்று செய்பவனாக, மாணவத் தலைவனாக, இருந்த பிரபாகரன் - ஓய்வுபெறும் வேளையில் தன்னுடன் பணிபுரிந்த அனைவரையும் தன்னைப்போல வேலை செய்பவர்களாக மாற்றி, அவர்களை வழிப்படுத்தி, மிக இயல்பாக இப் பாடசாலையில் இருந்து விடை பெற்றிருக்கின்றார்.

என்னைப் பொறுத்தவரை பிரபாகரனிடம் காணப்பட்ட நன்னெறிகள் என்பது நீதிகளையும் நியாயங்களையும் உயர்த்திப் பிடிப்பதற்காகவும் சமூதாயத்தில் ஒரு பயன்தரும் சக்தியாக விளங்குவதற்காகவும் மற்றவர்களையும் மதித்து தன்னையும் மதிக்கச் செய்வதற்காகவும் சமூதாய மேம்பாட்டுக்காவும் பயன்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சார்ந்த ஒழுக்க நெறிக்குரிய பெண்ணைத் தேடி, திருமணம் முடித்து, தனது மகனை மருத்துவ பீடத்திற்கு அனுப்பிய பின்னரும் தனது விழுமியங்கள் பற்றியோ தனது நடைமுறைகள் பற்றியோ ஒரு போதும் அவர் கதையாடல் செய்ததில்லை. லூக் 6:31 இல் *"மனிதர் உங்களுக்கு எப்படி செய்ய வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."* என பைபிளில் இயேசுபிரான் கூறியவற்றை கவனமாக இன்று வரையும் பின்பற்றியவர் என்பதுடன் எதிர்வரும் காலங்களிலும் அவர் அதனை பின்பற்றுவார் என்பது என் நம்பிக்கை.

பல்கலைக் கழகக் காலத்தில் கூட்டாக செலவு செய்த பின்னர், எல்லோரிடமும் இருந்து பணத்தைச் சேர்த்து, அவரவர் செலவுக்கு ஏற்ப பிரித்துக் கொடுப்பது முதல் திருக்கோவிலில் உள்ள அவரது தாய் வீட்டுக்கோ அல்லது வாடி வீட்டு வீதியில் உள்ள அவரது இல்லத்திற்கோ செல்லும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் "சாப்பிடுவோமா?" எனக் கேட்பது வரை அவர் தொடர்ந்து எல்லோருடனும் எப்போதும் இணங்கிச் செல்லும் சூழமைவு கொண்டவராக என்னால் இனங்காணப்படுகின்றார்.

பிரபாகரன் தனது சொந்த வாழ்வில் தான் எதனை மதிக்க வேண்டுமென்பதை சரியாகப் புரிந்து கொண்டு, தனது தனிப்பட்ட அறநெறி, சொந்த மதிப்பீடு, தனது சமூக முறைமைகள் என்பன பற்றி ஆராய்ந்து, தன்னைப் பற்றிய புரிதல் சிறப்பாக எட்டப்பட்ட பின்னர் அதனூடாக மாணவர் சமூதாயத்தையும் ஏனைய மக்களையும் எதிர் நோக்கியிருந்த, இருக்கின்ற சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கத்தக்க தலைமைத்துவத்தைக் கொண்ட ஒரு வலுவான தலைவராக இருந்தார், இருக்கின்றார். சாதாரணமான தலைவர் ஒருவரிடம் நாம் காண்கின்ற தன்நெறி அற்ற நடத்தைகளையோ மற்றவர்களால் மோசமாக மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகளையோ பிரபாகரனிடத்தில் நான் ஒருபோதும் அறியவுமில்லை, யாரும் அறிந்ததாக கூறவுமில்லை.

நண்பனே கடைசியாக உன் குடும்பம், நண்பர்கள், சமூகம், அல்லது பொதுவான சமூதாயம் உன்மீது ஏற்படுத்தும் அழுத்தங்கள் உன்னை, உன் நம்பிக்கைகளை, அல்லது உன் செயல்களை விட்டுக் கொடுக்க அல்லது கைவிட வேண்டி வந்தால் நீ சரியென கருதும் நிலைப்பாட்டில் நீ துணிந்து நிற்கவேண்டும். அதிகமான நேரங்களிலும் சந்தர்பங்களிலும் இது மிகவும் கடினமானது தான். உன் தீர்மானத்தைக் கண்டு மற்றவர்கள் நிலை குலையலாம். அதற்காக உன் வாழ்வை மற்றவர்களின், கருத்துக்களின் / மதிப்பீடுகளின் அடிப்படையில் வாழ்வின் நிலைபாட்டை தேர்தெடுத்துக் கொண்டால் வாழ்க்கையில் உன் சொந்த பாதையில் நீ செல்ல முடியாது. மற்றவர்களால் தொடுக்கும் பாதையில் சென்ற பலரும் பரிதாபமாகவும், நிறைவில்லாதவர்களாகவும் இருந்தனர்.

உனது தலைமைத்துவப் பாதை கடினமானதாயினும் பழக்கமில்லாத புதிய பாதையாயினும் தனிமனித, சமூதாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யும் என்பது எனது உறுதியான எண்ணம். உன்னுடன் இருக்கின்ற அன்பும் ஆர்வமும் எப்போதும் இருக்கவேண்டும் என்பது எனது பிரார்த்தனை.



# உவெஸ்லியின் அதிபர்களில் தனித்துவமிக்கவர்

**திரு. எம். எஸ். அப்துல் ஜலீல்**
முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர், கல்முனை.

அம்பாறை மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலை வரிசையில் விளங்கும் உவெஸ்லி உயர்தர பாடசாலையின் வரலாற்றில் தனித்துவமான தடம் பதித்த முன்னாள் அதிபர் மதிப்பிற்குரிய திரு. வ. பிரபாகரன் அவர்களின் சேவை நலன் பாராட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

உயர்ந்த மிடுக்கான தோற்றம், உயர்சிந்தனை, அன்பான அதிகாரத்துவம், கண்ணியமான கண்டிப்பு, கடமையுணர்வு, மனம் நிறை மனித நேயம், இடர்கண்டு கலங்காத திடம், மெய்யான பணியைக் கணிக்கும் திறன் இத்தனையும் கொண்ட அவர், ஆளுமையின் முழுவடிவம் என்பது மிகையல்ல.

1990 ஆம் ஆண்டு உவெஸ்லியில் உயர்தர ஆசிரியராகக் கடமையேற்று, தொடர்ந்து சேவையில் பிரதி அதிபராகி, 2009 ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்று, 10 வருடங்கள் அயராது உழைத்து, 2019 ஆம் ஆண்டு தனது அரச சேவையிலிருந்து ஓய்வைப் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சவால்கள் பல கண்டும் சளைக்காது பாடசாலை உயர்விற்காக அரும்பாடு பட்டார். மாணவரது அடைவு மட்டத்தை உயர்த்த பல முயற்சிகள் எடுத்தார். இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் சாதனைகளை நிலைநாட்ட வழி சமைத்தார். கலை ஈடுபாட்டுடன் பல்வேறு விழாக்களைத் தீர்க்கமாகத் திட்டமிட்டு முகாமைத்துவம் செய்யும் ஆற்றல், அனைவரையும் வியக்க வைக்கும் நிர்வாகத் திறன் என்பவற்றின் மூலம் ஏனைய பாடசாலை அதிபர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். சமூக, சமய ஏற்றத்தாழ்வுகளின்றி சமத்துவத்தோடு அனைவரையும் அரவணைத்து எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்தார்.

கால ஓட்டத்தின் நீட்சியில் அவரது சேவையின் தனித்துவத்தை பாடசாலைச் சமூகம் என்றும் மனதில் கொள்ளும். இப் பெருமைமிக்க அதிபருக்கு எனது வாழ்த்துகளை தெரிவிப்பதுடன் அவர் நலமுடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்முனை தமிழ் கோட்டக் கல்வி பிரிவின் வழிகாட்டி

**திரு. எஸ். சரவணமுத்து**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கல்முனை. (தமிழ் பிரிவு)

முப்பத்துநான்கு வருடங்களுக்கு மேல் கல்வி பணி செய்து ஓய்வு பெறும் மாமனிதர் கல்விச் செம்மல் திரு. வி. பிரபாகரன் அதிபரின் பிரியாவிடை நிகழ்வின் போது வெளியிடப்படும் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

திரு.வ.பிரபாகரன் அதிபர் அவர்கள் கௌரமான கல்விக் குடும்பத்தில் பிறந்து சேவையாற்றியவர். இவரது தந்தை அதிபராகவும் தாய் மற்றும் மனைவி ஆகியோர் ஆசிரியைகளாகவும் சகோதரி கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளனர். இவ்வறான கல்விக் குடும்பத்திலிருந்து அளப்பரிய சேவையாற்றிய சாதனையாளரை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன்.


இவ் அதிபர் உயிரியல், தாவரவியல் பாடங்களை கற்பிப்பதற்கு கல்முனை பிரதேசத்திலே ஆசிரிய பற்றாக்குறை நிலவிய காலத்தில் அயராது சேவை நோக்கம் கருதி முன்மாதிரியான ஆசிரியராக திகழ்ந்து விஞ்ஞானத் துறையின் கல்வி அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பை ஆற்றிய நல்லாசான் என்றால் அது மிகையாகாது.

கல்முனை தமிழ்க் கோட்டத்தில் உள்ள பாடசாலை அதிபர்களுக்கு தலைமை தாங்கியதோடு முன்மாதிரியான அதிபராகவும் அவர் காணப்பட்டார். அவர் அதிபர்களுக்கான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் அவ்வப்போது வழங்கி, பாடசாலைகள் சிறப்பாக செயற்பட வழிகாட்டியமை யதார்த்தமான உண்மை ஆகும்.

கல்முனை கல்வி வலயத்திலும் கல்முனை தமிழ்க் கல்விக் கோட்டத்திலும் சவால் மிக்க பாடசாலையாக உவெஸ்லி உயர்தரப் பாடசாலை காணப்பட்டது. ஏனென்றால், வசதி படைத்த மாணவர்களும், கல்விகற்ற பெற்றோர்களின் பிள்ளைகளும் தேசிய பாடசாலையிலும் வசதி படைத்த ஏனைய பாடசாலைகளிலும் அனுமதி பெற்றுச் சென்றபோது மீதமான மாணவர்களும் கிராமப் புறத்திலிருந்து வரும் மாணவர்களுமே இப்பாடசாலையில் அனுமதியைப் பெறுகின்றனர். இந்தச் சவால்களை முறியடிக்கும் வகையில் அவரது ஆளுமையும் நிர்வாகத் திறமையும் காணப்பட்டன. இதனால் வருடா வருடம் வைத்தியத் துறைக்கும், பொறியியல் துறைக்கும் ஏனைய பல்கலைக் கழகங்களுக்கும் அதிகளவான மாணவர்கள் அனுமதி பெற்றுச் சென்றார்கள். அது மாத்திரமன்றி இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் அவரது முயற்சி வீண் போகாமையால் அதிகளவான இடங்களை பெறுவதற்கு உழைத்த அதிபரை வாழ்த்தி ஆசி வழங்குவதில் மனமகிழ்வு அடைகிறேன்.

இவ் அதிபரின் சேவைக் காலத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வி அதிகாரிகள், திருப்தி அடையக்கூடிய வகையில் அவருடைய பணி அமைந்திருந்தது. இவ்வாறு பணியாறிய அதிபர் அவருடைய ஓய்வுக் காலத்தில் மன நிறைவோடு நோய்பிணியின்றி திடகாத்திரமாக தனது மனைவி பிள்ளைகளுடனும், உறவினர்களுடனும் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அவரை ஆசீர்வதிக்க வேண்டும் என்று இறைவனை வேண்டியவனாக எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# A Role Model

**' Whoever makes himself great be humbled and humbles himself be made great '**
**( Mathew : 23-12 )**

**' Utmost for the Highest '**
**S Devachandra**
( Deputy Principal )

**Mr VADIVEL PRAPAKARAN** addressed from a reputable family and felt proud of call himself an **' THIRUKKOVILAN '** Thirukkovil being his native village and **' KALMUNAIYAN'** Kalmunai being his marital town.

He was an emeritus principal of **' Kalmunai WESLEY' (2009 – 2019)** has reached the retirement, lured into the teaching profession, church and the community work by his noble family till and after his withdrawal, he rendered signal and significant service in all these spheres. He displayed his excellent caliber and capacity as a teacher, teacher counselor, vice and deputy principal, vice president of Methodist Church, Srilanka and many more knowingly.

It is his service as a prime that keeps us especially ingratiated to him. A distinguished operative himself he joined the staff and became the rightful chief in 2009. During the decade, the college already standing on the pinnacle of global fame and another fascinating dimension added to it. He maintained and promoted the standard nurtured and nourished by his illustrious procedures so well that in the eyes of his contemporaries and counterparts. He was an ardent keeper of **WESLEY'** s conscience.

The Past Pupils' Association he vitalized in homeland and overseas and other buildings including **' Atkins Stadium '** **' Disabled Unit '** and the diversion of the college to **NATIONAL STSTUS** that were inaugurated and proposed during his stewardship and his dazzling son is an exemplary **'WESLEYITE '** will keep his memories alluringly indelible in the annals of the college. His attentive wife **Mrs Vinothini Prapakaran** is an ambassador of good-will and also receptive to novel ideas and her irresistible charms of manner and forwardness have endeared her to all of us.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr V Prapakaran is also jovial and an estimable comedian without any symbol, a veteran teacher of ' **BIOLOGY** ', guided his alma matter as main, greener pastures, simplicity of life, WESLEY ' s key at the turret within the four walls of the college. He will be remembered by all those who were associated with him. In family gatherings or any other functions, he used to show himself. He was never a party to a family squabble; he often functioned as one of the family members. To him every man is counted.

Of all his good qualities, three needs special attention. They are his humility, approach of humane and his sense of humour. He is humble not only in the company of his superiors but also in the presence of his colleagues and subordinates. He is caring in his approach to all issues be it absenteeism, late coming or hurting classes by students and teachers. He could be entertaining on any occasion. He is the speaker most sought after. His intellect of funniness has never deserted him.

He was one of the diligent builders of ' **Kalmunai WESLEY** ' glory and therefore, and has a righteous wisdom of pride in involving himself whole heartedly in the gathering. His period of service from bottom to the top was marked by reorganization and consolidation. He had the spirit of service strong in him. He is in fact unique and inimitable to me. **' To myself a heat of flint, to fellow man a melting heart '**.

May the **Mission of ' Kalmunai WESLEY '** be with him and his charming family for ever and ever !



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அதிபர்களில் தனி முத்திரை பதித்தவர்

**டாக்டர். திரு. நடராஜா ரமேஷ்**
செயலாளர், பழைய மாணவர் சங்கம் உ.உ வெஸ்லி உயர்தர பாடசாலை,
தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் உகல்முனை.

உவெஸ்லி உயர்தர பாடசாலையின் வரலாற்றில் தடம் பதித்த அதிபர்களில் ஒரு தனி முத்திரை பதித்தவர் எமது பிரபாகரன் சேர் அவர்கள். அத்துடன் எமது பாடசாலையில் கல்வி நிருவாகச்சேவை தரத்துடனுள்ள ஓர் அதிபராகவும் திகழ்ந்தார். தன் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களை முழுமையாகப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உரமாக்கிய பெருந்தகை.

1993 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலையை தன் வீடு போல் நேசித்தவர். மாணவர்களை தன் பிள்ளைகள் போன்று அன்புடன் பேணி வளர்த்தவர். இவரின் காலத்திலேயே பாடசாலையின் கட்டமைப்பில் பல அபிவிருத்திகள் ஏற்பட்டன. பல புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. பாடசாலையின் மைதானத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. முன்னாள் அதிபர் யோகம் வேலுப்பிள்ளை ஐயாவின் நிருவாகத்தை ஒத்த ஒரு நிருவாக அமைப்பு அவரால் செயற்படுத்தப்பட்டு வந்தது. அவரின் அணுகுமுறைகள் சகலரையும் அரவணைத்து ஒரு சிறப்பான நிருவாகத்தைச் செயற்படுத்தும் வகையில் இருந்தது. அதற்கு உதாரணமாக, பெற்றோர் - ஆசிரியர் அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றுடனான சுமூகமான, ஆக்கபூர்வமான தொடர்பாடல் மூலமும் பாடசாலைக்கு வெளியில் விளையாட்டுக் கழகங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடனான தொடர்புகள் மூலமும் பாடசாலையின் அபிவிருத்திக்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்குமான உதவிகளைப் பெற்று சரியான முறையில் அவற்றைப் பயன்படுத்தியமையைக் குறிப்பிடமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் நிருவாகத்தைப் பொறுத்தளவில் வேலைப்பங்கீட்டைச் சிறந்த முறையில் செயற்படுத்தியிருந்தார். அதன் மூலம் பிரதி அதிபர், உதவி அதிபர்கள் ஆசிரியர்கள் என அனைவரினது பங்களிப்பையும் பாடசாலைக்குக் கிடைக்கச் செய்தார்.


திரு. பிரபாகரன் சேர் வலயக்கல்வி அலுவலகத்துடன் சிறந்த புரிந்துணர்வான உறவினைப் பேணிவந்தார். அத்துடன் வலயத்திலுள்ள சகல பாடசாலைகளுடனும் சிறந்த நட்புரீதியான உறவினைப் ஏற்படுத்தியிருந்தார். அப் பாடசாலைகளின் நிகழ்வுகளுக்கான அழைப்புகளை நிராகரிக்காமல் தானே அந்நிகழ்வுகளுக்கு சமூகமளித்து அவர்களைக் கௌரவப்படுத்துவார். பழைய மாணவர்களைப் பொறுத்தளவில் அவர்களை கௌரவப்படுத்துவதில் அவர் என்றும் பின் நின்றதில்லை. அதன் மூலம் பழைய மாணவர்கள் பாடசாலையின் அபிவிருத்தியிலும், செயற்பாட்டிலும் பங்கு கொள்ளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

பாடசாலையில் பயிலும் மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் அவர்களின் பெயர் சொல்லியழைக்கக் கூடிய நினைவாற்றலைக் கொண்டிருந்தார். அதன் மூலம் பெற்றோர் மாணவர்களுடன் ஒரு நட்புரீதியான சூழலிலேயே பாடசாலையை நிருவகித்தார்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய அதிபர் பிரபாகரன் சேர் அவர்கள் கடந்த 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஓய்வு பெற்றமை பாடசாலைக்கு மட்டுமல்ல எமது கல்விச் சமூகத்திற்கே ஓர் இழப்பாகும். ஒரு கல்வி நிர்வாக சேவை உயர்நிலை தரத்திலுள்ள அவரின் ஓய்வு மூலம் ஒரு சிறந்த அனுபவ முதிர்ச்சியுள்ள அதிபரின் சேவையை எமது சமூகம் இழந்திருக்கிறது.

பிரபாகரன் சேர் தனது ஆசிரிய சேவைக் காலத்தின் பெரும் பகுதியை எமது பாடசாலையிலேயே செலவிட்டுள்ளார். அவரின் துணைவியாரும் எமது பாடசாலையின் பழைய மாணவி என்பதுடன் இப்பாடசாலையில் ஆசிரியையாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவர்களின் மகன் எமது பாடசாலையிலேயே கல்வி கற்று மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியிருக்கின்றார். இப் பாடசாலை மெதடிஸ்த பாதிரிமார்களால் ஆரம்பிக்கப்பட்டது என்பதுடன் அத் திருச்சபையின் முக்கிய பதவியை இவர் வகித்து வருகின்றார். இதுபோன்ற காரணங்களால் அரச சேவைக்கு அப்பால் பிரபாகரன் சேர் அவர்களுக்கு இப் பாடசாலைக்குமிடையே மிக நெருங்கிய தொடர்புண்டு. இதனால் அவரின் சேவை தொடர்ச்சியாக எமது பாடசாலைக்கு கிடைக்குமென பழைய மாணவர்களாகிய நாங்கள் மிகவும் உறுதியாக நம்புகின்றோம். அதிபரின் ஓய்வு நிலை வாழ்க்கை சிறப்பாக அமைய பழைய மாணவர்களாகிய நாங்கள் மனமார வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த ஆளுமை கொண்ட அதிபர்

**திரு. J.B. வத்தலோமியூஸ்**
பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள்
செயலாளர்,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

கிழக்கு மாகாணத்தில் கல்முனை நகரில் இயற்கை எழில் கொஞ்சும் அழகோடு கி.பி. 1883ஆம் ஆண்டு மெதடிஸ்த மிசனரிமார்களினால் உருவாக்கப்பட்டது தான் இந்த உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆகும். அக்காலத்தில் அவர்களின் அயராத உழைப்புயையும் அர்ப்பணிப்புமிக்க சேவையை நாம் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இப் பாடசாலைக்கென ஒரு பாரம்பரியம் உண்டு. இப் பாரம் பரியத்தை மதிக்கும் வகையிலும் போற்றும் வகையிலும் இப் பாடசாலையில் 2019ஆம் ஆண்டு ஆண்டு 136வது ஆண்டு நிறைவை நாம் அனைவரும் கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்தோம்.

அந்த வகையில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்று வரை பல்வேறுபட்ட அதிபர்களின் வழிகாட்டலில் ஒரு சிறந்த வரலாற்று முக்கியத்துவத்தினை பெற்றிருக்கின்றது. அந்த வரிசையில் திரு. வடிவேல் பிரபாகரன் அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவையும் மனதில் கொள்ளத்தக்கது. அவர் அதிபர் சேவைக் காலத்தில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து தனது பணியினை சிறப்பாக நிறைவு செய்துள்ளார்.

அத்துடன் இவர் ஒரு கல்வி நிர்வாக சேவைத் தரத்தில் உள்ளவர். அந்த நிலையில் கல்வி அலுவலகத்தில் தமது கடமையை ஏற்றுக் கொள்ளாது இப் பாடசாலையின் மீது கொண்ட பற்றின் காரணமாக இறுதிவரையும் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமை அவரது நல்ல மனப்பாங்கை எடுத்துக் காட்டுகின்றது. இவரது காலத்தில் நான் இப் பாடசாலையின் ஒரு பெற்றாராகவும் அதன் பின்னர் இப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் இருந்துள்ளேன். அந்த நேரத்தில் அவரது தலைமைத்துவப் பண்பையும் சிறந்த ஆளுமையையும் நான் கண்டு வியந்திருக்கின்றேன். எனவே, இவரது அளப்பெரிய சேவையை நினைவு கூரும் வகையில் சேவை நலன் பாராட்டு விழாவை நடாத்துவதற்கு இப் பாடசாலையின் புதிய அதிபர், ஆசிரியர்கள் முன்னின்று செயற்பட்டு வருகின்றனர்.

இந்த வேளையில், அவரது சேவையை நினைவு கூரும் வகையில் ஒரு சிறப்பு மலர் ஒன்று வெளியீடு செய்ய இருக்கின்றனர். அந்த நூலிற்கு அவரது காலத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளர் என்ற வகையில் வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மென்மேலும் இப்பாடசாலை சிறப்புடன் இயங்க வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# என் பார்வையில் ஓய்வு பெற்ற அதிபர் வடிவேல் பிரபாகரன் அவர்கள்

**பொன். செல்வநாயகம்**
ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்
மாநகர சபை உறுப்பினர், கல்முனை.


கல்முனை உவெஸ்லியின் மாணவன், ஆசிரியராக பணிபுரிந்தவன், என்ற வகையிலும் இப்பிரதேச கல்வி, பண்பாட்டு விருத்தியில் ஈடுபாடு கொண்டவன் என்ற வகையிலும் இப்பாடசாலையில் 26 வருடங்கள் ஆசிரியர், உப அதிபர், அதிபர் என்ற பல படிநிலைகளில் பணியாற்றி தனது அறுபதாவது அகவையில் (2019-09-15ஆந் திகதி) ஓய்வு பெற்றுச் சென்ற திரு. வ. பிரபாகரன் அவர்களைப்பற்றி எனது மனப்பதிவுகள் சிலவற்றை கூறலாம் என நினைக்கிறேன்.

தனது 34 ஆண்டு கால கல்விச் சேவையில் பத்து வருடங்கள் இப் பாடசாலையில் அதிபராக பணியாற்றிய காலத்தில் இவரது வினைத்திறனான செயற்பாடுகளைப் பின்னோக்கிப் பார்ப்பது நன்றியுள்ள மானிட விழுமியப் பண்பாகும்.

நிமிர்ந்த நடையும், நேரிய பார்வையும், வெண்ணிற ஆடையும், புன் சிரிப்பும், அவரின் வழமையான இயல்புகள். மெதடிஸ்த பாரம்பரியத்தையும், ஆசிரியப் பின்னணியையும் கொண்ட குடும்பத்தில் பிறந்த இவர், இத்தகைய பின்புலம் கொண்ட குடும்பத்திலேயே தன் திருமண பந்தத்தையும், ஏற்படுத்திக் கொண்டவர். குடும்பத்தின் சூழலுக்கேற்ப தானும் ஆசிரியப் பணியினை தேர்வு செய்தார்.

2009-02-17ல் உவெஸ்லியின் அதிபர் கடமையினை பொறுப்பேற்று ஓய்வு பெறும் வரை அப்பதவியில் இருந்தார். இப்பதவியின் போது உள்ளக, வெளியக சக்திகளை தன்பால் ஈர்க்கும் பலமான நிர்வாகக் கட்டமைப்பை வடிவமைத்து செயற்பட்டார். இதன் மூலம் பாடசாலை சமூகத்தின் தலைவனாகவும், சமூக மாற்றத்தின் பிரதிநிதியாகவும் விளங்கினார். ஆசிரியர், மாணவர், சமூகத்தின் மத்தியில் வெளிப்படையான கருத்தாடல்கள் மூலம் கல்விச் சமூகத்தின் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்று கல்வி மேம்பாடும் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களும் மேன்மை பெற உழைத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவரின் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்பு, சிறந்த தொடர்பாடல், பிரச்சினைகளை இனங்கண்டு விரைவான தீர்மானங்களை எடுத்தல் என்பன போன்ற தலைமைத்துவப் பண்புகள் அவரின் வெற்றிக்குப் பலம் சேர்த்தன.

அவரது தூர நோக்கச் சிந்தனைகள் மூலம் பாடசாலை சமூகத்தையும் மாணவர், ஆசிரியர் சமூகத்தையும் ஒன்றிணைத்து பணிபுரிந்தார் என்பதை அவர் "உவெஸ்லி 136" என்ற மலருக்கு வழங்கிய செவ்வியின் மூலம் உணர முடிந்தது.

பாடசாலை நிர்வாகத்தில் பல்வேறு மட்டங்களில் இருந்து மறைமுகமாக எழக் கூடிய சவால்களையும், விமர்சனங்களையும் பண்புடன் எதிர்கொள்ளுவதுடன் மேற்படியான விமர்சனங்களை முன்வைப்பதற்கு வழிகாட்டியாக இருந்தார். பிரச்சினைகளை அறிந்து கொள்ளும் வண்ணம் 'முறைப்பாட்டுப் பெட்டியினை' அறிமுகம் செய்து கிடைக்கப்பெறும் பிரச்சினைகள் பலவற்றுக்கு சுமூகமான தீர்வுகளைக் கண்டார்.

இவரின் சேவைக்காலத்தில் பாடசாலையின் பாரம்பரியக் கட்டமைப்பையும், தனித்துவத்தையும் பாதுகாத்து நெகிழ்வுத் தன்மையுடைய சேவைகளின் மூலம் கல்விச் செயற்பாடுகளையும் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் வெற்றிகரமாக முன் நடத்தியவர். கல்வி அடைவு மட்டத்திலும் குறிப்பிடத்தக்க சாதனைகள் இவரது காலத்தில் தடயங்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் பாடசாலைச் சமூகத்தை உள்வாங்கி கௌரவப்படுத்துகின்ற பெருந்தன்மை இவரிடம் காணப்படும் சிறப்பாகும். இவரது சேவை ஓய்வடைந்தாலும் இப்பாடசாலையின் எதிர்கால முன்னேற்றம் அபிவிருத்தியில் முதன்மையான பங்களிப்பு இருப்பதற்கு நீண்ட ஆயுளையும். உடற்பலத்தையும். வழங்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திலப் புன்னகையுடன் வாழ்கவே!




**தி**ருக்கோயில் பெற்றுத்தந்த வித்தாய்!
தம்பிலுவில் வளர்த்தெடுத்த நாற்றாய்!
மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியின் சொத்தாய்!
மட்/சிவானந்தா வித்தியாலய முத்தாய்த் தோன்றி

கிழக்குப் பல்கலையில் பட்டை தீட்டியவராய்!
விஞ்ஞானப் பட்டக்கல்வியில் சிகரமாய்
அட்டாளைச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு
ஆசிரியப் பணிக்கு நியமிக்கப்பட்ட புடைப்பு சிற்பமே!
அயராது உழைத்த அன்புள்ளம் கொண்டவரே!

நட்புடன்

**வாசன், உமா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆசிரிய வாண்மையாலே அனைவரையும் கவர்ந்து
உப அதிபர், அதிபர் தகுதிக்கு உயர்ந்து
உண்மை – நேர்மை – வெளிப்படைத்தன்மை
என்ற முப்பணிக்கோவையாய் ஒளிர்ந்தீர்கள்!

நிமிர்ந்த நடையுடனே நேர்கொண்ட பார்வை
நித்திலப் புன்னகையுடன் நினைப்பெல்லாம்
உவெஸ்லியின் உயர்வென்றே நினைத்து
அன்பாலே ஆசிரிய குழாத்தை ஆண்டு
பண்பாலே பணிகளை செப்பனிட்டு
மாணவர் மனங்களில் மங்காத ஒளியாய்
ஒளிரும் கலங்கரை விளக்கும் நீங்களே!

முற்போக்கு எண்ணம் கொண்டவரே!
முத்தமிழின் இனிமை உணர்வுடையவரே!
எத்திசையும் போற்றும் எழிலுடனே!
ஏறுபோல் வீறு நடையுடன் வாழ்கவே!

சத்தியத்திற்காக சமரசமாய் வாழ்ந்தவரே!
சமதர்மம் ஒன்றே உலகென்று நினைப்பவரே!
சாதுவைப் போல ஒரு நிலை கொண்டவரே!
சன்மார்க்க நெறி நின்று நீடூழி வாழியவே!

நல்ல மனையாள் மகனுடனே நாற்படையாம்
வீடு, மனைவி, மக்கள், சுற்றம் போற்றி
சுகமாய், நலமாய், மண்ணில் நல்ல வண்ணம்
வாழ வாயார வாழ்த்துகின்றோம்
வாழிய....வாழியவே!



# அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்களின் சுவடுகள்



**திருமதி. இரத்தினப்பிரியா அல்லிஸ்**
ஆசிரியர்,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

ஆலமர விருட்சம் அனைவரதும் உள்ளக்கிடக்கைகளின் உற்ற தோழன். பல கதைகளைத் தன்னுள் மாத்திரம் பொத்தி வைத்திருக்கும் மர்மப் பொக்கிஷம். மழைக்குக் குடையாய். வெயிலுக்கு நிழலாய் விழுதூண்றித் தடம் பதித்து நிற்கும் இயற்கைச் சூழல். பலரது கண்களையும் தன்னகத்தே ஈர்த்து தன் பெயரை உச்சரிக்க வைக்கும். உவெஸ்லியின் வளர்ச்சிப் பாதையில் தடங்கள் பதித்த பல அதிபர்கள் வரிசையில் வடிவேல் பிரபாகரனின் பணியும். பங்கும் குறிப்பிடத்தக்கது. இருபத்தாறு வருடங்கள் அதிபர் மற்றும் பிரதி அதிபர் பதவிகளை வகித்த இவரது வாழ்க்கைச் சரிதம் பற்றிய முக்கிய விடயங்களை இக் கட்டுரையின் ஊடாக பரிமாறிக் கொள்கின்றேன்.

கிழக்கிலங்கையில் அம்பாரை மாவட்டத்தில் நீர் வளமும் வயல் வளமும் சூழ்ந்த திருக்கோயில் எனும் கிராமத்தில். வடிவேல். வின்னி பிரட் வேதமணி தம்பதியினருக்கு 1959 செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி பிறந்தார். தந்தையார் அதிபர், தாயார் ஆங்கில ஆசிரியர் ஆவார். மூன்று சகோதரிகளுக்கு இவர் ஒருவரே ஆண்மகன். கல்விப் புலமிக்க சிறந்த குடும்பம். அருமையான அன்பு, கட்டுப்பாடு என்பவற்றுக்கிடையில் தனது இளம் பாராயத்தில் இனிதே வாழ்ந்து வந்தார்.

ஆரம்பக் கல்வியை திருக்கோயில் அரசினர் கலவன் பாடசாலையிலும் பின் இடைநிலைக் கல்வியை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திலும் சாதாரண தரத்தை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும், உயர்தரத்தை கல்லடி சிவானந்த வித்தியாலயத்திலும் கற்றார். உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்ற இவர் உயர் தரப் பரீட்சையில் சித்தி அடைந்து, உயிரியல் விஞ்ஞான பிரிவிற்கு தெரிவாகி. கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். இவரது கல்வி ஆண்டு மாணவர்களே கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதலாவது விஞ்ஞானபீட மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.






பட்டப்படிப்பை நிறைவு செய்து அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரியில் முதல் ஆசிரியர் நியமனத்தைப் பெற்று, கடமையைப் பெறுப்பேற்றார். பின்னர் இடமாற்றம் பெற்று தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்றார். அதன் பின்னர் 1993 இல் உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு விஞ்ஞான ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்தார். இவர் ஆசிரியராக கடமை புரிந்த காலங்களில் ஓர் சிறந்த உயிரியல் பாட ஆசிரியராக இருந்து பல மாணவர்களைப் பல்கலைக் கழகம் செல்லவும் வழி வகுத்தவர் என்பதும் பெருமைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான காலவோட்டத்தில் உவெஸ்லியின் பழைய மாணவியும். ஆங்கில பாட ஆசிரியையுமான செல்வி. வினோதினியை பெற்றோர் நிச்சயித்தபடி 1992 இல் திருமணம் செய்து கொண்டார். 1993 ஆம் ஆண்டில் இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது, பின்னர் அப்பிள்ளையையும் தன்னுடைய பாடசாலையிலேயே சேர்த்துக் கற்பித்தனர். இவர்களின் பாங்குக்கு ஏற்றாற் போல் திறமைசாலியாக விளங்கிய டைட்டஸ் 2012 இல் உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகியமையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும்.

அதிபர் அவர்கள் 1993. 05. 14 ஆம் திகதி அன்று அதிபர் சேவை தரம்-II சித்தியடைந்தார். பின்னர் 1996. 01 .16 ஆம் திகதி அன்று அதிபர் சேவை தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு பெற்றார். பின்னர் 1999 - 2000 ஆம் கல்வியாண்டில் தேசிய கல்வி நிறுவகத்தில், பட்டப்பின் கல்வி முகாமைத்துவ முதுமாணி கற்கை நெறியைப் பயின்று பட்டம் பெற்றார். இதனைத் தொடர்ந்து 2011. 06.17 ஆம் திகதி அன்று, இலங்கை கல்வி நிருவாக சேவை பரீட்சையில் சித்தியடைந்தார். இவ்வாறாக மென்மேலும் தனது உயர் கல்வியை தொடர்ந்து கற்று, சாதனை புரிந்தார்.


அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த பொன். முருகையா அவர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பிரபாகரன் சேர் அவர்கள், 2009.02.17 ஆம் திகதி அன்று பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டார். இக்காலத்தில் இவர் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. அனைத்தையும் தனது பொறுமையாலும். சாதுரியத்தாலும் எதிர்கொண்டு வெற்றி கண்டார். உவெஸ்லியை புதுப் பொலிவு பெற வைத்தார். பௌதீக வளம், ஆசிரிய வளம் என்பன புது உத்வேகம் பெற்று விளங்கின. பழைய கட்டடங்களான "லீஸ்","றிம்மர்" போன்றவற்றை புதுப்பொலிவு பெற்று மிளிரச் செய்தார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையானது, பல் கலாசார பண்பாண்டுகளைக் கொண்டதும், பொருளாதாரத்தில் மிகவும் பின்னடைவான கணிசமான மாணவர்களையும் பல இடங்களில் இருந்து வந்து கல்வி கற்கும் மாணவர்களையும் கொண்டதோர் பாடசாலையாகும். இக்காரணங்கள் நிருவாகத்திலும். கற்றல். கற்பித்தல் செயற்பாடுகளிலும் பல பிரச்சினை களைத் தோற்றுவித்துள்ளது. ஆனால், அவற்றை எல்லாம் தனது திறமையால் வென்று பாடசாலையை உயர்த்திக் காட்டியவர் எமது அதிபராவார்.

இவரது காலத்தில் பெற்றார், ஆசிரியர் அபிவிருத்திச் சங்கக் கூட்டமானது என்றும் இல்லாதவாறு களை கட்டியிருக்கும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெற்றோர்களின் வரவு இடம் பெற்றிருக்கும். இது ஒரு புதுவிதமான உற்சாகம் நிறைந்த சூழலை ஆசிரியார்கள் - மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும். சிறந்த ஒழுங்கு. திட்டமிடலுடன் அவர்களின் வரவுக்கான பதிவுகள் வகுப் பாசிரியர்களால் பெறப்பட்டிருக்கும். குறித்த நேரத்திற்கு ஆரம்பிக்கப்பட்டு எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கூட்டம் நிறைவு பெறும். இவ் ஆளுமை இவருக்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

இவ் அதிபர் அவர்களின் காலத்தில் முன் எப்போதும் இல்லாதவாறு கற்றல் கற்பித்தல் செயற்பாடானது மிகவும் சிறந்த நிலையில் இருந்தமையையும் குறிப்பிட்டேயாக வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரம் க.பொ.த. உயர்தரம் போன்ற அனைத்துப் பரீட்சைகளிலும் மாணவர்களின் அடைவு மட்டமானது அதிகரித்துச் சென்றுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அது தவிர இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் அதிகளவான வெற்றிகளை மாணவர்கள் ஈட்டி தேசிய ரீதியிலும் தங்கப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்டதும் இவரது பதவிக் காலத்திலேயேயாகும். ஆங்கில தினப்போட்டிகளில் செல்வி பு. வியூக்ஷனா சொல்வதெழுதுதல் போட்டியில் பங்கு கொண்டு, தொடர்ந்து நான்கு தடவைகள் தேசிய மட்டத்தில் பதக்கம் பெற்றுள்ளார். 2019 இல் அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டியில் இரண்டு மாணவர்கள் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர். இவ்வாறே விளையாட்டுப் போட்டி, சிங்கள தினப் போட்டிகளிலும் மாணவர்கள் தேசிய ரீதியில் வெற்றி பெற்றமையும் இவரது காலத்தின் சாதனைகளாகவே பார்க்கப்படவேண்டியவை ஆகும்.

விளையாட்டுத்துறையில் இவருக்கு இருந்த ஆர்வத்தினை இவ்விடத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும். வருடா வருடம் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டியானது இவரது காலத்தில் மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படும். ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு புதுமை வெளிப்படும். அது மட்டுமல்லாது, இவரும் ஒரு சிறந்த விளையாட்டு வீரராவார். 2015 ஆம் ஆண்டு நுவரெலியாவில் நடைபெற்ற அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பங்கு கொண்டு ஈட்டி எறிதலில் இரண்டாம் இடத்தையும். குண்டெறிதலில் மூன்றாம் இடத்தையும். பரிதி வட்டம் வீசுதலில் இரண்டாம் இடத்தையும் பெற்று மூன்று பதக்கங்களைச் சொந்தமாக்கினார்.

மேலும், இவரது காலத்தில் பாடசாலையில் நடைபெறும் எந்த விழாக்களானாலும் சரி மிகவும் கோலாகலமாகவும் சிறப்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறும். பாடசாலை ஸ்தாபகர் தினத்தை ஒவ்வொரு வருடமும் வித்தியாசமான வகையிலேயே ஒழுங்கு செய்வார். 2018 ஆம் ஆண்டு பாடசாலையின் பழைய மாணவர்களாலும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களாலும் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட நடை பவனியைக் (Wesley Walk) குறிப்பிட்டுக் கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது அந்தக்கால கட்டத்தில் முதல் தடவையாக எமது பாடசாலையிலேயே இடம் பெற்றது. அதன் பின்னர் இதனைப் பல பாடசாலைகளும் ஒழுங்கு செய்து நடாத்துவதற்கு எமது பாடசாலையே முன்மாதிரியாக விளங்கியது.

அதிபர் அவர்கள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியான போதும் மிகுந்த தமிழ் பாண்டித்தியம் உடைய ஒருவராகவும் விளங்கினார். சிறந்த பேச்சாற்றல், கவிதை, பாடல் எழுதுவதிலும் இவர் சளைத்தவரல்ல. எமது பாடசாலையின் ஸ்தாபகர் கீதம் இவராலேயே எழுதப்பட்டது. பயணம்... பயணம்... என வரிகளை அமைத்து புதிய பாதையில் உவெஸ்லியை பயணிக்க வைத்தவர். மேலும் கார்மேல் பற்றிமா கல்லூரியின் அதிபராக கடமையாற்றி, அப் பாடசாலையை புகழின் உச்சிக்கே கொண்டு சென்ற அதிபர் திலகம் - அருட்சகோதரர் மத்தியூ அவர்கள் இறந்த போது மிகவும் மாண்புடனும் கௌரவத்துடனும் அவருக்கான பாடலை எழுதி, பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டே அப்பாடலை பாடச் செய்த சிறந்த மனிதர் இவர். அதுமட்டுமல்லாது, விஷேட தேவையுடைய பிள்ளைகளை மனதில் கொண்டு "மனிதரே மனிதரே நாங்களும் மனிதரே" என அவர்களுக்காகவும் ஒரு பாடலை கேட்பவரது உள்ளத்தை உருக்கும் வகையில் எழுதிய மகத்துவமுடைய மனிதர் இவர். அதிபர் அவர்களின் மேடைப் பேச்சு பற்றி கட்டாயமாக இவ்விடத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும். கேட்போரைக் கவரும் வண்ணம் வசீகரக் குரலால் நகைச்சுவை ததும்ப, எவர்க்கும் தெவிட்டாத வகையில் நிகழ்வுக்குப் பொருத்தமான விதத்தில் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற வரைமுறைக்கு ஏற்ப அழகு தமிழில் வியக்க வைக்கும் படி பேசும் பாங்கு இவருக்கே உரிய தனிப்பண்பு எனலாம். இவரின் பேச்சாற்றலுக்கு எமது கல்லூரி ஆசிரியர்கள் மாத்திரமன்றி குடும்ப உறுப்பினர்கள் பலரும் இரசிகர்கள் ஆகிப் போனோம் என்பதும் உண்மையே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




அது மாத்திரமின்றி இவர் சிறந்த ஓர் ஆன்மீகவாதி, இறைபக்தி மிக்கவர். சமயம் விதித்த விதிமுறைகளைப் பின்பற்றி அறவழியில் நடப்பவர். சிறந்த போதனையாளர். இவரின் ஆன்மீகப் பணிக்காக மெதடிஸ்த மிஷனால் 2014 – 2015 ஆம் ஆண்டிற்காக அகில இலங்கைக்கான உப செயலாளர் பதவிக்காக தெரிவானார். இது மிகவும் கௌரவத்துக்குரிய ஒரு பதவியாகும். அகில இலங்கை ரீதியில் இப்பதவியை பெற்ற ஐம்பத்தொராவது நபராகவும் தமிழ் மொழி மூலம் பதினேழாவது நபராகவும் விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும்.

அத்தோடு பிற மதங்களை மதிக்கின்ற ஒருவராகவும் இவர் காணப்படுகின்றார். இதனால் எமது பாடசாலை வாணி விழா, மீலாத்துன் நபி விழா போன்றனவும் சிறப்பாக இடம்பெறவும் இவர் பல வழிமுறைகளைச் செய்தார் என்பதும் இங்கு சமன் செய்து சீர் தூக்கிப் பார்க்கப்பட வேண்டிய முக்கியமான விடயமாகும்.

மேலும் இவர் பாடசாலை என்பதற்கு அப்பாற்பட்டு சமூகத்தோடும் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்த ஒருவர், விளையாட்டுக் கழகங்கள் பலவற்றுக்கும் ஆலோசகராக இருந்து அவர்களது கழகங்கள் சிறப்படைய உதவியவர். இதனூடாக பாடசாலையின் மைதானத்தை கழகங்களின் அனுசரணையுடன் பல தடவைகள் சீர் செய்து புனரமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதிபர் அவர்கள் பாடசாலை மாணவர்களுடன் ஓர் சிறந்த உறவினைக் கொண்டிருந்தார். தந்தைக்கும் பிள்ளைகளுக்குமான ஓர் பாசப்பிணைப்பை அவர் ஏற்படுத்தியிருந்தார். இதனால் மாணவர்கள் வெற்றிகள் பெறும் போது அவர்களைப் பாராட்டுவதும் தவறுகள் விடும்போது கண்டிப்போடு திருத்துவதும் இவரின் பண்பாகும். மாணவர்கள் எப்போதும் இவருடன் உரிமையுடனேயே பழகுவார்கள். அது மட்டுமன்றி ஒவ்வொரு மாணவர்கள் பற்றியும் முழுமையாக அறிந்து அவர்கள் சுய புராணத்தையே பட்டியல்படுத்திக் கூறுவார். இதனைக் கண்டு நாங்கள் பல தடவைகள் வியந்துள்ளோம்.



அதிபர் அவர்கள் மாணவர்களோடு மாத்திரமன்றி, ஆசிரியர்களோடும் ஓர் சிறந்த உறவினைக் கொண்டிருந்தார். ஆசிரியர்களின் சுக, துக்கங்களில் தவறாது கலந்து கொள்வார். அவர்களின் திறமைகளைக் கண்டறிந்து தக்க வேலைகளை ஒப்படைப்பார். நிருவாகம் சார்ந்த விடயங்களில் சிறிது கண்டிப்புடன் கட்டளையிடுவார். அது எமது நன்மைக்காகவே அமைந்திருக்கும். மேலும் எமது பாடசாலை ஆசிரியர்களை கல்முனை வலயத்திலேயே முதன் முதலில் மேடையேற்றி பாட வைத்தவர் இவரேயாவார். அது மாத்திரமன்றி ஆசிரியர்களுக்கான "Band" வாத்தியக் குழுவை உருவாக்கி, அணிவகுப்புச் செய்ய வைத்தவர். அத்தோடு எமது பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடையும் இவர் காலத்திலேயே அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வாறான ஓர் தனியாளுமை படைத்த அதிபாராக இவர் விளங்கினார்.

மேலும் ஆசிரியர்களிடையே சிறந்த நல்லுறவை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில் வருட இறுதியில் ஆசிரியர்களின் குடும்ப உறுப்பினர்கள் பங்குகொள்ளும் வகையில் ஒன்று கூடல் ஒன்றினை ஒழுங்கு செய்து, அதில் பல பல்சுவை நிகழ்வுகளை நடாத்துவார். இதனால் ஆசிரியர்களின் குடும்ப உறுபினர்களிடையே அறிமுகம், நட்பு உருவாகும் என்ற நல்லெண்ணம் கொண்டவராக இவர் விளங்கினார்.

இவ்வாறாக பல நல்ல சிந்தனைகளையும் திறமைகளையும் கொண்ட அதிபர் அவர்கள் ஆசிரியர் தினம் அன்று அவர்களது சேவையைக் கௌரவப்படுத்தி வழங்கப்படும் "குரு பிரதீபா பிரபா " விருதினை தொடர்ந்து ஆறு தடவைகள் பெற்றுள்ளமையானது அவரது சேவைக்கு கிடைத்த சான்றே எனலாம்.

ஆலமரமானது எவ்வாறு பல விழுதுகளை ஊண்றி தனது சிறப்பை வெளிப்படுத்துமோ அவ்வாறே தனது பல வகையான ஆளுமையால் பலர் மனதிலும் நிலையாய் நினைவை ஊன்றி தடம் பதித்து சிந்தனையின் சிற்பியாக, உயர்ந்த உள்ளத்தவராக இருக்கும் எமது அதிபர் பிரபாகரன் சேர் அவர்களின் சேவைகள் இப்பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை என்பதில் எவ்வித ஐயமுமில்லை இவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்று நீண்ட ஆயுளுடனும் தேக ஆரோக்கியத்துடனும் வாழ இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லியை உன்னத நிலைக்கு உயர்த்த பாடுபட்ட அதிபர்



**அருட் சகோதரர். எஸ். சந்தியாகு FSI**
அதிபர்,
கார்மேல் பற்றிமா கல்லூரி (தே.பா),
கல்முனை.

**உ**வெஸ்லியன் மிஷனரிமார்களினால் தோற்றுவிக்கப்பட்டு கல்முனை மாநகரின் மத்தியில் கலங்கரை விளக்காக வழிகாட்டி ஒளிர்ந்து கொண்டிருக்கும் கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலையானது கல்முனைக்கென தனிமுகவரியை பெற்றுத்தந்த கல்லூரியாகும். இக்கல்லூரி நிர்வாகத்தினரால் பாரம்பரியமாக ஓய்வு நிலை பெற்றுச் செல்லும் அதிபர்களுக்காக வெளியிடப்படும் நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆண்டாண்டு காலமாக இக் கல்லூரியில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் எதுவித இனமத பேதமின்றி ஒரு தாய் பிள்ளைகளாகக் கற்று, நாட்டின் அனைத்து பாகங்களிலும் உயர் நிலையில் மிளிர்வது கண்கூடு.


இப்பிரதேசத்தின் இன ஒற்றுமைக்கும், பண்பாடுகளுக்கும், ஒழுக்கத்திற்கும் களம் அமைத்துக் கொடுத்து பல அரசியல்வாதிகளையும், பல்வேறு கல்விமான்களையும், சாதனை வீரர்களையும் உருவாக்கிய பெருமை இக்கல்லூரியை நிர்வகித்த அதிபர்களையே சாரும் எனக் கூறினால் மிகையாகாது.

அந்த வகையில் தற்போது ஓய்வு நிலை பெற்றுள்ள திரு. வ. பிரபாகரன் அதிபர் அவர்களது சேவைக்காலப் பகுதியில் இப் பாடசாலையானது கல்விசார் நடவடிக்கைகளிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும், கல்விப் பெறுபேறுகளிலும் உன்னத நிலையை அடைந்திருந்தமை பாராட்டத்தக்க விடயமாகும். அவரது நினைவாக இம்மலர் வெளியிடப்படுவது சாலச் சிறந்தது மட்டுமல்ல காலத்தின் தேவையுமாகும்.

இக்கல்லூரியானது மென்மேலும் வளர்ந்து பாரினில் திகழ வாழ்த்துவதுடன், இம் மலர் வெளியீடும், சிறப்புற நடந்தேறவும், இந் நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும் இறைவனின் பேரருள் வேண்டி பிரார்த்தித்து ஆசி வழங்குவதில் உவகையடைகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரும்பிப் பார்க்கின்றேன்


**பைந்தமிழ்க் குமரன் ஜே. டேவிட்**

கோட்டக்கல்வி பணிப்பளார்.

க.பொ.த. உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக தலைநகர் றோயல் கல்லூரிக்குள் நுழைகின்றேன். நேரம் பிற்பகல் ஐந்து முப்பத்தைந்து பதிவு செய்யும் அலுவலரிடம் ஒப்பமிட்ட பின்பு தங்கும் விடுதியை அறிந்து, கண்களால் துழாவி வெறுமையாக கிடந்த கட்டிலில் உடைகள் பொதிந்த பையைப் போட்டபடியே சரிகின்றேன். அடுத்த கட்டிலில் அதிபர் பிரபாகரன் சிரித்தபடியே பார்க்கிறார். புள்ளியிடல் முடிந்து களைப்புடன் வரும்போது கலகலப்பாக்கி விடும் அவர் பேச்சுக்கள். சுவாரஷ்யமாக கழியும் அந்த நாட்கள்.

மீண்டுமாக அதிபர் தரத்தில் கல்முனை வலயத்தில் கலக்கின்றேன். அப்போது அவரோடு அதிபர்கள் குழாத்தில் ஒருவராக நடந்த பல வருடங்களில் யாரையும் குறைத்து மதிப்பிடாமல் அவர்களிடம் உட்பொதிந்திருக்கும் ஆற்றல்களையும், ஆளுமைகளையும் கண்டு பாராட்டும் பக்குவம் படைத்த பெரும் பண்பாளராக பார்க்கின்றேன். உவெஸ்லி உயர்தரப் பாடசாலைக்கும் நாவலர் வித்தியாலயத்திற்கும் ஆசிரியர்கள் வருவதற்கு விரும்பவில்லை. கண்டிப்பும், இறுக்கமான நிருவாக செயற்பாடுகளும் கொண்ட அதிபர்களாக வலயமே பார்த்தது. அதனால் சோதனைகளை வென்று சாதனைகளாக்கினார். கல்விப் படிகளிலும், பரீட்சைப் பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மிளிர்ந்தது உவெஸ்லியெனும் கல்வியகம் வரலாற்றுத் தடங்களை தடம்புரள விடாமல் மரபையும், பண்பாட்டையும் பேணி, புதிய பல நடைமுறைகளையும் உள்வாங்கி சிறந்த முகாமைத்துவத்தை வழங்கிய பெருமகனாக அதிபர் திரு.வ.பிரபாகரன் அமைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலய அதிபர்கள் சங்கத்தினதும் தமிழ்க்கோட்ட அதிபர்கள் அமைப்பினதும் தலைமைத்துவத்தினை தாங்கியவர். குடும்ப நிகழ்வுகளில் கலந்து குசலம் பேசி, உறவாடும் உயரிய பண்பாளர். ஓய்வுக்குள் - கையசைக்கும் அதிபர்களை முதலில் அழைத்து கௌரவித்து பெருமைப்படுத்தும் நற்பண்பும், தம் பாடசாலை நிகழ்வுகளுக்கு தவறாமல் அழைத்து தவறவிடாமல் உபசரித்து – நிறைவுகாணும் உயரிய திட்டமிடல் போன்ற சிறப்புக்களை அதிபர் அவர்களிடம் காண முடிந்தது! கலை நிகழ்வுகள், நூல் வெளியீடுகள், ஒன்று கூடல்கள் என அழைப்புக்களோடு கலந்து இன் முகத்தோடு அரங்கேறி சுவையான உரைதந்து உறவாடும் அதிபரின் சேவைச் சுவடுகளை இப்பாடசாலை என்றும் மறக்காது. பொறித்துப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

பலர் கூறுவர் உயரத்தால் உயர்ந்தவர் என்று அது பொய், அவர் உள்ளத்தால் உயர்ந்தவர் என்பதே மெய் உடல் உள நலமுடன் பல்லாண்டுகள் வாழ இறையருள் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது ஒரு பொற்காலம்...

திருக்கள் உயர் காவில் உவெஸ்லி உயர் கல்லூரி
தனித்துவமாய்ப் பணியாற்றும் அதிபர்கள் தொடரணி
சக பாடசாலைச் சமூகம் பற்றி
சக அதிபர்கள் அளவளாவும் சுமுகம் அது உறவுப் பாலம் !
1994 உவெஸ்லிக்கு வந்தபோது - உறவுகளாக
அதிபர்களான வெங்கடாசலம் சேர்,
முருகையா சேர், பிரபாகரன் அவர்கள்
கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய
அதிபர் பணியில் நான் :
மாணவர் சேர்விலும் சேர்ப்பிலும் இழுபறி நிலை
இடையிடையே பிரபாகரனோடு ஊடாடும் தர்க்கநிலை
"ஆர்.கே.எம். அதிபர் என்ர சொந்தக்காறி;
பொய் சொல்லிச் சேர வரவேணாம்.
அவட்டச் சொல்லிப்போடுவன்;
எண்டு சொல்லித் திரும்பி அனுப்பிட்டன்;
வந்திருப்பாங்களே !"
(பிரபாகரனின் தாய் மாமன் மண்டூர் ஜெயமணி
அக்காவின் கணவர் - டேவிட் அத்தான்)
இப்படி மகிழ்வுறும் வார்த்தையோடு
பிரபாகரனிடம் சிரிப்பொன்று உதிரும்.
ஆறுதலடைய வேண்டிய நிர்ப்பந்தம் !
இதுவும் முகாமைத்துவ ஆற்றலின்
உத்தியோ என்னவோ !
ஆனாலும் ஆர்.கே.எம். இல்
அவருக்கொரு கழிவிரக்கம்
அனைத்தையும் அடிக்கடி அளவளாவி
அறிவுரையும் அளிப்பவர்.
அதிபர் பயணிப்பில் எத்தனை சவால்கள், சமாளிப்புக்கள்
அலைபாயும் போராட்டங்களில் எதிர் நீச்சலடித்து
ஊடறுத்து அடிபட்டு அலைவுற்று - அதனூடு
மாணவ - ஆசிரிய நலன் பேணல் என்ற
கூரிய அங்குசத்தின் உறுத்தல்
நம்மைத் தவிர யாருக்குத் தெரியும்?
(அதிபர்களைத் தவிர)



**திருமதி. அ. பேரின்பராஜா**
முன்னாள் அதிபர்
இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்,
கல்முனை.

பாடசாலை நிகழ்வுகளில் முதலில் பிரசன்னமாகும் அதிபர் நீங்கள்!!
சமூக நன்மை தீமைகளில், நகர்வுகளில், உறவாடலில்,
உதவிகளில் சளைக்காது சமுகம் தரும் அதிபர்.
எவரை? எதை? எங்கு? எப்படி? ஏன்?
இந்த வினாக்களின் விடைகளோ
உங்கள் செயலில் கௌரவமாய் பரிணமிக்கும் !
நினைவாற்றல் மீட்டலிலே தானியங்கி மீடியாவே.
சொல்ல வேண்டியதை நாசுக்காகவும் நகைச்சுவையாகவும்
அறுதி - உறுதியாகவும், அச்சொட்டாகவும்
அள்ளித் தெளிப்பதிலே கில்லாடி !.........
அப்போதைய கோட்ட மட்ட அதிபர் கூட்டங்கள்
அகமகிழும் அமர்க்களமாய்..........
அந்நியோன்ய ஆசுவாச வரவேற்பும் உரையாடலும்
ஆங்காங்கே மனக்கண்ணில் என்றும்..........
எத்தனை ஆண்டானாலும்
அத்தனை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
சமூகப் பிரஜைகளை
உவெஸ்லி விழாக்களுக்கு அழைப்பதிலே கல்வெட்டு !
அழைப்பிதழ் வருமுன்பே அத்துணைப் பணிப்பழுவினூடும்
அழைத்துச் செல்லுமே தொலைபேசி !
உவெஸ்லிக் கல்லூரி கம்பீர முதல்வராய் பிரபாகரன்
பிற கல்லூரி முதல்வர்களாய் நாங்கள் - பாடசாலைகளில்
ஒருமித்து உலா வந்த கடமைப் பொழுதுகள்
அது ஒரு பொற்காலம் ! நமக்குப் பொற்காலமே !

சீரிய பணியில் சிறப்புறு நெறிமுறை
கூரிய அறிவில் கூடுதல் செயலாற்றல்
நேரிய பாதையில் நிறைவுறு வளமுடன்
பாரினில் பண்புடன் சித்தம் சிறக்க
வாழி நீவிர் என
உளமுவந்து வாழ்த்தகின்றேன் !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபரை வாழ்த்துகின்றேன்.



**திரு. பொ. ஜெகநாதன்**
ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
பெரியநீலாவணை.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆண்டு 2019இல் தனது 136வது ஆண்டு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இப்பாடசாலையில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக 26 வருடங்கள் தன்னை அர்ப்பணித்து சேவை புரிந்த திரு. வடிவேல் பிரபாகரன் அவர்களின் ஓய்வு குறித்து வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1985இல் ஆசிரியராக பதவியேற்று படிப்படியாக இலங்கை அதிபர் சேவை, மற்றும் கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்து கல்வி உலகிற்கு உன்னதமான சேவை புரிந்த அதிபர் பிரபாகரன் சேர் அவர்களை பாராட்டுகின்றேன். நான் அதிபராக இருந்த காலப்பகுதியில் அவரிடம் பழகும் வாய்ப்பு கிடைத்தது.

அதிபர் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் அவரிடமிருந்த ஆளுமை, தலைமைப் பண்புகளை நேரில் அறிந்து கொண்டேன். எந்த விடயமாக இருந்தாலும் அந்த இடத்திலே மேலதிகாரிகளிடம் கேள்விகளைக் கேட்டு, அந்த விடயம் தொடர்பாக அனைவரும் தெளிவு பெறுவதற்கு உடந்தையாக செயற்பட்டுள்ளார். அதிபரிடமுள்ள இன்னுமொரு சிறப்பான அம்சம் ஓய்வு பெற்று செல்லவுள்ள மற்றும் சென்றுள்ள கல்வி சமூகத்திற்கு சேவையாற்றிய நல்ல உள்ளங்களையும் பாடசாலைக்கு வரவழைத்து அவர்களை பாடசாலை சமூகம் முன்னிலையில் கௌரவப்படுத்தி வாழ்த்தும் நிகழ்வை உரிய வேளையில் சிறப்பான முறையில் செய்து முடிப்பதாகும். இது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இவ்வாறு அவரின் பல செயற்பாடுகளை கூறலாம்.

2012இல் கல்முனை தமிழ் பிரிவு கோட்டக்கல்வி பணிப்பாளராக கடமை ஏற்ற காலம் தொடக்கம் நான் ஓய்வு பெறும் காலம் வரை (2015) என்னுடைய நிர்வாகக் கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிபர்களில் ஒருவராக அவரைப் பார்க்கின்றேன். கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி மற்றும் பிற போட்டிகள் நடை பெறுவதற்கு இடம், பௌதீக வளங்கள், மற்றும் ஆளணி தந்து போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்கினார் என்பதனையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

உவெஸ்லி பாடசாலையில், பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தில் (PSA) கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் இணைப்பாளராக 2014, 2015 காலப்பகுதியில் செயற்பட்ட போது பிரபாகரன் சேர் அவர்கள் தேவையான, வழிகாட்டல்களை வழங்கினார். மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, ஆசிரியர்களின் பாட மேம்பாட்டுத் திட்டங்களில் அவர் கவனம் செலுத்தியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. உரிய வேளைகளில் ஆசிரியர் சங்கக் கூட்டம், பெற்றார் அபிவிருத்திச் சங்க கூட்டம் என்பவற்றை நடாத்தி பொறுப்புக்களை உரியவர்களிடம் ஒப்படைத்து, அவ்வேலைகள் முறைப்படி நடைபெறுகின்றதா என்பதனையும் கவனிக்கத் தவறுவதில்லை.


இவ்வாறு ஆளுமை, தலைமைத்துவப் பண்பு உள்ள அதிபர் பிரபாகரன் சேர் அவர்கள் கல்முனை கல்வி வலய அதிபர் சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்று சிறப்பாக வழி நடத்தினார் என்பதையும் நினைவுபடுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இறுதியாக நான் ஓய்வு பெற்றுச் சென்ற மறுநாளே, ஏனைய அதிபர்களுடன் இணைந்து பிரியாவிடை வைபவத்தை எனது குடும்ப உறுப்பினர்களையும் அழைத்து சிறப்பான முறையில் செய்து முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்பதனையும் என்னால் மறக்க முடியாது.

ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் பிரபாகரன் சேர் அவர்கள் நீண்ட ஆயுளுடன் மனைவி மகன் உறவினர்களோடு சிறப்பாக வாழ்ந்து கல்வி உலகிற்கு மேலும் சேவைகள் புரிய வேண்டுமென வாழ்த்தி இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு சிறப்புற வாழ்த்துகிறேன்



**திருமதி. விஜயசாந்தினி நந்தபால**
அதிபர்,
இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்,
கல்முனை.

மெதடிஸ்த மிஷன் குருமாரின் அர்ப்பணிப்பு, தியாகம் ஆசீர்வாதம் என்பவற்றுடன் ஆரம்பிக்கப்பட்ட உவெஸ்லி உயர்தர பாடசாலை உலகின் முதலாவது தமிழ் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் தொடக்கம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரபலம் பெற்ற பல கல்விமான்கள், ஆசிரியர்கள், கலை இலக்கியவாதிகள், இறைபணியாளர்கள், ஊடகவியலாளர்கள், மனிதநேய செயற்பாட்டாளர்கள் என பல்துறை விற்பன்னர்களை உருவாக்கி அன்றும் இன்றும் என்றும் கம்பீரத்துடன் இருப்பது அதன் தனிச் சிறப்பு.

பல புகழ் பூத்த அதிபர்களால் வழி நடாத்தப்பட்ட இப் பாடசாலையை கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் விருதான குரு பிரதீபா பிரபா விருதை வென்றவரும், இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் கால் பதித்தவரும், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவரும், கல்முனை கல்வி வலய அதிபர் சங்க தலைவருமான திரு. வடிவேல் பிரபாகரன் சேர் அவர்களை வாழ்த்துவதற்கு நானும் அவருடைய நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வந்த ஒருவர் என்ற வகையில் அவரை வாழ்த்துவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த பல வருடங்களில் மாணவர்களின் கல்வி அறிவின் அடைவு மட்டத்தை மேலோங்கச் செய்து அவர்கள் ஊடாக சிறந்த சேவையை இந்த சமூகத்திற்கு வழங்குவதற்கு வித்தாக இருந்தவர் பிரபாகரன் சேர் அவர்களே.

அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

இதற்கமைய அதிபரின் சேவையூடாக பாடசாலையில் கற்ற அனைத்து மாணவர்களும் சித்தி பெறுவதற்கு ஆணி வேராக இருந்து அவர்களின் வாழ்க்கையை வளம் பெற செய்த அவருக்கு இறைவன் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து மனமார வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துப் பாடசாலைகளையும் நேசித்து வழிகாட்டிய அதிபர்



**திரு. சி. புனிதன்**
அதிபர்,
பாண்டிருப்பு மகா வித்தியாலயம்,
கல்முனை.

கல்முனையில் புகழ் பூத்து குதூகலிக்கும் உவெஸ்லிக் கல்லூரி அன்று தொட்டு இன்றுவரை தனக்கே உரித்தான பண்பாட்டையும், பாரம்பரியங்களையும், கைவிடாது அவற்றை பேணிப் பாதுகாத்துவரும் ஒரு புகழ்மிக்க பாடசாலையாகும். இப் பாடசாலையை கடந்த பத்தாண்டுகளாக முதல்வர் ஸ்தானத்திலிருந்து சிறந்த முறையில் வழி நடாத்திய, ஒரு தன்னலம் கருதாத சேவையாளன் முன்னாள் அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்களை கௌரவப்படுத்தும் பிரியாவிடை நிகழ்வின் ஒரு அழியாத ஆவணமாக வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலரில் அவரைப் பற்றிய எனது பதிவுகள் சிலவற்றை முன்வைப்பதில் மன மகிழ்வடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கல்லூரியின் வரலாற்றில் இன்னும் ஓர் உன்னதமான அதிபராக தன்னையும் உயர்த்தி இக்கல்விக் கூடத்தையும் உயரச் செய்ய அயராது இரவும், பகலும் பாடுபட்டு சிக்கல்கள் நிறைந்த காலப்பகுதியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவை செய்த ஒரு சேவையாளரை பாராட்டுவதென்பது இம் மலரின் ஒரு பக்கத்துக்குள் எழுதி முடிக்க கூடிய விடயமன்று.

இருந்தாலும் அதிபர் அவர்கள் கல்முனை வலய மற்றும் கோட்டப் பாடசாலைகளின் அதிபர் சங்கத் தலைவராக இருந்து ஏனைய பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும், அவற்றின் மேம்பாட்டுக்காகவும் குரல் கொடுத்தவர் என்று சொன்னால் அது மிகையாகாது. எங்கள் பாடசாலைகளில் ஏற்படும் பிரச்சினைகளை அதிபர்களாகிய நாங்கள் அவருடன் கலந்துரையாடும் போது தனது பாடசாலையைப் போன்றே எங்கள் பாடசாலையையும் நேசித்து அவற்றுக்கான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் கூறி வழிநடாத்திச் சென்ற ஒரு அதிபர் என்பதை இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அவரின் திறமை, அனுபவம், முதிர்ச்சி, என்பனவும் மற்றவரை எளிதில் தன் வசப்படுத்தும் பேச்சாற்றல், எதிலும் ஆழமான அறிவு, எந்த விடயத்தையும் வேறுபாடின்றி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் எளிமையான சிநேகத் தன்மை, சிறந்த நிருவாகத் திறன், எல்லோரையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் என பல்வேறு ஆளுமை பண்புகளைக் கொண்ட அதிபர் அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றமை கல்லூரிக்கு ஓர் இழப்புத்தான். அரச துறையைப் பொறுத்த மட்டில் அறுபது வயதில் ஓய்வு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இருந்தாலும் அதிபர் பிரபாகரன் அவர்கள் மனதளவில் ஓய்வடையக்கூடிய ஒருவரல்ல, இன்னும் சுறுசுறுப்பாக இவர் இயங்க இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இம் மலரில் எனது பதிவினையும் இணைத்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பத்தையும் தந்த இக்கல்லூரியின் அதிபர் திரு. செ. கலையரசன் அவர்களுக்கும், மலரின் ஏற்பாட்டுக் குழுவினருக்கும், எனது சார்பிலும் எனது பாடசாலைச் சமூகத்தின் சார்பிலும், இக்கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையிலும் உளமார்ந்த நன்றியினை கூறிக்கொள்கின்றேன்.

# நான் கவர்ந்த அதிபர்

**திரு. காளிக்குட்டி சந்திரலிங்கம்**
முன்னாள் அதிபர்,
கணேச மகா வித்தியாலயம்,
சேனைக்குடியிருப்பு.

*வாவியும் சுனையும் வயல் நிலமும்*
*தாவி வந்து தாலாட்டும் தென்றலும்*
*தேன் சொட்டும் மாமரச் சோலைகளும்*
*வான் முட்டும் ஆலமர விருட்சங்களும்*
*நிறைந் திருக்கம் நல்லூராம் திருக்கோயில்*
*பெற்றெடுத்த வடிவேல் வின்னிபிரட் வேதமணி*
*இணைந் தீன்ற இன்ப ஊற்று*
*பிரபாகர னெனும் ஒப்பற்ற தாரகை!....*

*ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து ஒன்பது*
*இனிய இன்பத் திரு நாளாம்*
*புரட்டாதித் திங்கள் பதி னைந்தில்*
*உத்தமனே இவ்வுலகில் நீ உதித்தாய்!....*

*ஆரம்பக் கல்வியை உன்னூர் அளிக்க*
*ஆறாம் வகுப்பில் அமர்த்தியது அயலூர்*
*அழைத்தது மட் மெதடிஸ்த மத்திய கல்லூரி*
*இணைந்தாய் மிளிர்ந்தாய் உயர்ந்தாய் சிறப்பாய்!....*

*உயர்தர வகுப்பு உன்னை அழைக்க*
*சென்றாய் சிவானந்தா மகா வித்தியாலயம்*
*கற்றாய் கல்வியை கசடற நீயும்*
*பெற்றாய் நற் பெறுபேறு*
*முடித்தாய் பட்டப் படிப்பை*
*பதித்தாய் தடம் ஆசிரியத் தொழிலில்*
*இணைந்தாள் இனிய நல்லாள் வினோதினி*
*கிடைத்தான் நல்லவன் வல்லவன் சஞ்சய்!....*

*ஞானம் பெருமை நயம் கருணை*
*மானம் பொறுமை நல் மனம்*
*தானம் தவம் தண் மொழி*
*பணிவு துணிவு இன்சொல் ஈகை*
*அனைத்தும் நிறைந்து விளங்கும் ஆளுமையை*
*கார் முகில் கனத்த நீரை*
*கடி தென பொழிதல் போல*
*பாரினில் சிறந்து பல்லாண்டு வாழ*
*வாழ்க வாழ்க என வாழ்த்துகிறோம்.*
*வாழ்கயூவாழ்கயூவாழியே!*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டுவரும் நினைவலைகள்



**திருமதி. சித்தி ஸரீனா அபூபக்கர்**
ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

நிமிர்ந்த உருவமும் நேர்கொண்ட பார்வையும் பெயருக்கு ஏற்றாற்போல ஆளுமையும் கொண்ட முதல்வர் திரு.வ.பிரபாகரன் சேர் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்ற கிடைத்தமையையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

எனக்கு பிரபாகரன் சேர் அவர்களோடு பல்கலைக் கழகத்தில் அறிமுகம் இருக்கவில்லை. அவர் அங்கிருந்து வெளியேறும் தறுவாயிலேயே நான் அதற்குள் நுழைந்தேன். பகிடிவதை செய்வதற்காக அவருடைய நண்பர்களில் சிலர் பல்கலைக் கழகத்துக்குள் எம்மை நோக்கி வருவார்கள். ஆயினும் அந்தக் கூட்டத்தில் பிரபாகரன் சேர் இருக்கமாட்டார்.

நான் கமு/கமு அல்மனாரில் விஞ்ஞானப் பிரிவில் பகுதித் தலைவராக இருந்த வேளை, 2008 இல் உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பாடத்திற்கு தோற்றும் மாணவர்களுக்கு ஒரு முன்னோடி கருத்தரங்கை நடாத்துவதற்கு திட்டமிட்டு, அந்தக் காலப்பகுதியில் உயிரியல் பாடத்தில் மிகத் திறமையான ஆசிரியராக விளங்கிய உவெஸ்லியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த பிரபாகரன் சேர் அவர்களை அனுகினோம். அவரும் அதற்கு உடன்பட்டு அன்றைய எமது மாணவர்களுக்கு, மிகச் சிறப்பான முறையில் கேள்விப் பத்திரங்கள் தயாரித்து, ஆழமாகவும், அழகாகவும் அந்தக் கருத்தரங்கை நடாத்திக் கொடுத்ததை அல்-மனார் சமூகம் சார்பாக நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிகழ்வு நடைபெற்ற சில நாட்களின் பின்னர் விலங்கியல் புகழ், தற்போதைய மாகாண கல்விப் பணிப்பாளர் M.K.M.மன்சூர் சேர் அவர்களை சந்தித்த சந்தர்ப்பத்தில் நான் உயிரியல் கருத்தரங்கு நடாத்தியதைப் பற்றிக் கூறினேன். உடனே அவர் சொன்னார். நல்லது, சரியான தெரிவு. பிரபாகரன் உயிரியலை திறமையாகக் கற்பிப்பார்" அதைக் கேட்டதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. 2009 இல் இடம்பெற்ற கட்டாய இடமாற்றத்தின் போது நான் உவெஸ்லியை தேர்ந்தெடுப்பதற்கு எனது சிறுவயதுக் கனவுகளோடு கருத்தரங்கில் பிரபாகரன் சேரிடமிருந்து வெளிப்பட்ட ஆளுமையுமே முக்கிய காரணங்களாகும்.

2009.10.26ம் திகதியன்று நான் உவெஸ்லிக்குள் நுழைந்த வேளை எனக்கு உடனடியாக நேரசூசி வழங்கப்பட்டது. பிரபாகரன் சேர் அவர்கள் ஒரு கண்டிப்பான அதிபராகவும் சிரேஷ்ட ஆசிரியர்கள் கூட அவருடன் கதைப்பதற்குப் பயந்த நிலையில் இருப்பதையும் கண்டேன். ஆனால் எனக்கு அந்த மனோபாவம் இருக்கவில்லை. நான் எந்தவித பயமும் இல்லாமல் பிரபாகரன் சேர் உடன் கதைத்ததைக் கண்ட ஆசிரியைகள் சிலர் பல்கலைக் கழகத்தில் பிரபாகரன் சேர் இன் Batchmate ஆக இருந்தீர்களா என்று கேட்டதை நான் இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன். பிரபாகரன் சேர் பாடசாலை பாடவிதானத்தில் மட்டுமல்ல இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்வதில் அக்கறையுடனும் கண்டிப்புடனும் நடந்து கொண்ட அதிபராவார்.

மாணவர்கள் செயற்றிட்டங்களை செய்வதற்கு தொடர்ந்து உற்சாகம் வழங்கிக் கொண்டிருப்பார். 2010 இல் Stockholm Junior Water Prize (SJWP) நிறுவனத்தினால் சுற்றாடல் பாதுகாப்பு நீருடன் தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுத்து நடாத்தப்பட்டது. அந்த வேளையில் எமது பாடசாலையும் அதில் பங்குபற்ற வேண்டும் என அதிபரால் பணிக்கப்பட்ட போது நானும் திருமதி. இலங்கநாதன் ஆசிரியையும் உத்வேகத்தோடு உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்விகற்றுக் கொண்டிருந்த அதிபர் பிரபாகரன் சேர் இன் மகன் டைட்டஸ், திருமதி. இலங்கைநாதன் ஆசிரியையின் மகன் மிதுரன் போக்குவரத்துச் சபையில் பணியாற்றிய திரு. நவமணி அவர்களின் மகன் உபேந்திரன் ஆகிய மூன்று மாணவர்களையும் தெரிவு செய்தோம். இம் மூன்று மாணவர்களும் அச் செயற்றிட்டத்தைச் சிறப்பாகச் செய்து தேசிய மட்டத்தில் 2ம் இடத்தை பெற்று தந்தனர். இச் செயற்றிட்டத்தில் வெற்றி பெற்றதற்குத் தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்கும், பாடசாலை அதிபருக்கும் சான்றிதழும், வெற்றிக் கேடயமும் கிடைத்தன. அத்துடன் Incharge Teacher ஆக இருந்த எனக்கும் சான்றிதழ் கிடைத்ததையும் BMICH இல் நடைபெற்ற இந் நிகழ்விற்கு நாங்கள் அனைவரும் குடும்பமாக சென்றதையும் மகிழ்ச்சியுடன் மீட்டுப் பார்க்கிறேன். அது மட்டுமல்லாமல் இந்த மூன்று மாணவர்களும் 2012 இல் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் முதலாவது தடவையிலேயே மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டதும் அதிபர் பிரபாகரன் சேர் அவர்களின் தலைமைத்துவத்திற்கு கிடைத்த பாரிய வெற்றிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளுக்கிடையிலான ஆய்வுகூடப் போட்டிகளுக்காக ஆய்வுகூடத்தை ஒழுங்குபடுத்துவதற்கு இரசாயனவியல் ஆசிரியர்களான S. இம்தியாஸ் அவர்களுக்கும் எனக்கும் அதிபர் அவர்கள் ஒத்துழைப்பு வழங்கியதால் வலயமட்டத்திலும், அதன் பின்னர் தேசிய மட்டத்திலும் எமது பாடசாலை வெற்றியடைந்தது.

அத்தோடு SLAB நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை மட்டத்திலான ஆய்வுகூடப் போட்டியில் எமது பாடசாலை சிறந்த ஆய்வுகூடப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு, 'Vidya Orabha 2014' என்ற விருதைத் தட்டிக்கொண்டமைக்கு முதற் காரணகர்த்தாவாக இருந்த வ. பிரபாகரன் சேர் அவர்களை விடயம் தெரிந்த எவரும் மறக்கமாட்டார்கள். பாடசாலையில் மாணவர்கள் அனைவரையும் தன் பிள்ளைகளாக பார்த்த அதிபர் அவர்கள் எல்லோருக்கும் சம நீதியை நிலை நாட்டினார். யாருக்கும் எந்த பாரபட்சமும் காட்டாதவர். மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து தன்னுடைய மகன் இப்பாடசாலையில் மாணவனாக இருந்த காலத்தில் மகனுக்கு ஒரு நியாயத்தையும், மற்றொரு மாணவனுக்கு இன்னொரு நியாயத்தையும் அவர் வகுக்கவில்லை. 2012 இல் இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் க.பொ.த.உயர் தரம் (2012) விஞ்ஞான பிரிவில் படித்துக் கொண்டிருந்த அவருடைய மகனும் சக நண்பர்களில் சிலரும் பாடசாலை விடுவதற்கு சற்று முன்னர் அவர்களின் விருப்பப்படி பாடசாலையை விட்டு வெளியேறிச் சென்றதை அறிந்ததும் உடனே அவர்களை பாடசாலைக்கு மீண்டும் வரவழைத்து அவர்களுக்கு பிரம்படி வழங்கினார். அது மட்டுமல்லாமல் தன்னுடைய ஒரே மகனுக்கும் பிரம்பு முறியும் வரை அடித்த அந்தக் காட்சி ஆசிரியர் குழாத்தையே கண்கலங்க வைத்தது. அந்தச் சம்பவம் அவரின் நீதியையும் ஒழுக்கக் கட்டுப்பாட்டில் அவர் கொண்டிருந்த உறுதியையும் வெளிப்படுத்தியது.

அதிபர் பிரபாகரன் அவர்கள் நிருவாகக் கடமைகளை அலட்சியம் செய்யாமல் திறம்படச் செய்தவராவார். அவரின் கண்டிப்பை ஒரு மூத்த சகோதரரின் அல்லது ஒரு தந்தையின் கண்டிப்பாகவே உவெஸ்லி ஆசிரியர் சமூகம் ஏற்றுக்கொண்டது. அதே போன்று மாணவர்களுடன் கண்டிப்புடன் கூடிய அன்பைச் செலுத்தினார். மாணவர்கள் அவர் மீது மரியாதையுடன் கூடிய அன்பைச் செலுத்தியது மட்டுமல்லாமல் தமது மனக்குமுறல்களையும் தைரியமாக அவரிடம் வெளிப்படுத்தி தீர்வுகளைக் கண்டனர். அவர் ஓய்வு பெறுவதற்கு முதல் நாள் காலையில் நான் அவசர அவசரமாக பாடசாலையை நோக்கி நடந்து கொண்டிருக்கும் போது எனக்குப் பின்னால் இரண்டு சிறுமிகள் கதைக்கும் ஒலி கேட்டது. ஒரு சிறுமி "தமது அதிபர் பிரபாகரன் சேர் நாளையோடு வரமாட்டாராம். பென்சனாகிப் போகிறாராம்" என்று கூற மற்றச் சிறுமி "ஐயோ என் உயிர் நண்பன், எனக்கு கவலையாக இருக்குதே!" என்று கூற நான் அவர்களைத் திரும்பிப் பார்த்தேன். அவர்கள் முதலாம் அல்லது இரண்டாம் தரத்தில் கற்பவர்களாக இருக்க வேண்டும். அந்தச் சின்னக் குழந்தைகளின் பிஞ்சு மனங்களில் அதிபர் அவர்கள் செலுத்திய தாக்கம் அவர்களை மேற்கண்டவாறு பேச வைத்துள்ளது என்பதை நினைக்கின்ற பொழுது மாணவர்கள் மத்தியில் அவர் மேல் இருந்த அன்பை எடுத்துக் காட்டுகின்றது. அதிபர் பிரபாகரன் சேர் பௌதீகவளங்களை அபிவிருத்தி செய்வதில் மிகவும் அக்கறையுடன் இருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இணைப்பாடவிதான செயற்பாடுகள் நடைபெறும் வேளை மாணவர்களின் கற்றல் விடயத்திலும் அக்கறை காட்டியதால் அவரின் காலத்தில் பல போட்டி நிகழ்ச்சிகளில் உவெஸ்லி பேசப்படும் பாடசாலையாக மாறியதுடன் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள், க.பொ.த. சாதாரண, உயர்தர பரீட்சை பெறுபேறுகள் படிப்படியாக உயர்த்து கொண்டே வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அதிபர் பிரபாகரன் சேர் அவர்கள் பாடசாலையிலுள்ள ஏனைய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரின் வீடுகளில் நிகழும் சந்தோசமான, துக்கமான நிகழ்வுகளில் தானும் கலந்து கொண்டு தனது ஆசிரிய குழாத்தையும் கலந்து கொள்ளச் செய்வதில் தவறுவதேயில்லை. எனது தாயார், மாமியார் மரணமடைந்த வேளைகளில் அதிபரும் ஆசிரிய குழாமும், மாணவர்களும் எமது துக்கத்தில் பங்கு கொண்டமையும் அதற்குக் காரணமாக இருந்த அதிபர் அவர்களின் பெருந்தன்மையையும் எங்கள் குடும்பம் சிலாகித்துக் கொண்டமையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஆசிரியர் தின நிகழ்வுகளில் ஒரு Big Boss ஆக இருந்து ஆசிரியர்களுக்கு Tasks வழங்கி அதனைக் களைகட்ட வைப்பவர்களில் அவரை வென்றவர் யாருமில்லை. ஒவ்வொரு வருட இறுதியிலும் அவர் முன்னின்று நடாத்தும் Wesley Night இல் ஆசிரியர்கள் குடும்ப சகிதம் வந்து கலந்து சிறப்பிப்பதும் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் பிரபாகரன் சேர் தம்முடைய மிக நெருங்கிய குடும்ப உறுப்பினர் என்று நினைக்குமளவிற்கு அவர் அந்த Night இல் கட்டியெழுப்பும் உறவுப் பாலம் மிகவும் போற்றத்தக்கது.

பாடசாலையில் 136 வது வருட ஸ்தாபகர் தினத்தில் வெளியிடப்பட்ட Wesley 136 இல் நான் பதிவிட்டிருந்த கவிதையில் சில துளிகளை மீண்டும் இங்கு குறிப்பிட்டு அதிபர் பிரபாகரன் அவர்களுக்காக பிரார்த்திக்கின்றேன்.

பிரபா என்ற பிரம்மனின்
பன்னசாலையில்
பத்தாயிரம் தவங்கள் செய்தேன்
அத்தனையும் அழகாய் மிளிர்ந்தன!
ஒவ்வொரு அசைவுக்குப்
பின்னாலும் அதிபர் பிரபா
ஒவ்வொன்றும் அழகு பெற
அணு அணுவாய் ஆசீர்வதித்தார்
அவர் நேர்கொண்ட பார்வை
நிமிர்ந்த நெஞ்சம்
அஞ்சாமல் பணி செய்ய
அழியா வரங்களாயின
உயிரியலின் ஞானி
உறவுகளின் உத்தமன்
உவெஸ்லியின் கால் நூற்றாண்டுக் காதலன்
ஒரு சதாப்தத்தின் பேராசான்
நீங்கள் என்றும் நீடுளி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபர் திரு. பிரபாகரன் பற்றி என் மனதில் தடம் பதித்தவை.

**திரு. வி. இலங்கநாதன்**
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிபாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
கல்முனை.

**உ** வெஸ்லியின் அதிபராக திரு .பா. வெங்கடாசலம் அவர்கள் இருந்தபோது நான் ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் அங்கு புதிதாக இணைந்த திரு. வ. பிரபாகரனின் அறிமுகம் கிடைத்தது. அன்று தொட்டு இன்று வரை இணைப்பு தொடர்கின்றது.

ஒவ்வொரு ஆகஸ்ட்டும் க.பொ.த. (உ.த) பரீட்சை முடிந்ததும் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணிக்காக நாங்கள் கொழும்பு செல்வதுண்டு. நான் Combined Maths, அவர் Biology பாடங்களை திருத்தவேண்டி இருந்தது. கொழும்பில் இதற்காக Royal இல் தங்குவதுண்டு. தினமும் திருத்தும் பணி முடிவுற்றதும் படம் பார்க்க திரையரங்குகளுக்கு நடை போடுவது மறக்க முடியாத நிகழ்வு. நாங்கள் பலர் ஒன்றாகப் போனாலும் காசை எடுத்து நீட்டுவது பிரபாகரனாகத்தான் இருக்கும். பின்னர் மொத்தத்தை கூட்டிக் கழித்து, பிரித்து நாங்கள் சமமாகப் பொறுப்பேற்பது என் நினைவில் இன்றும் உள்ளது.

பாடசாலையில் கலாசார நிகழ்வுகளில் நவம் சேர், ஜனா ஆசிரியை, கருணா சேர் போன்றவர்களுடன் சேர்த்து இவர் தனது திறமையை வெளிக்காட்டத் தவறவில்லை. கந்தப்பு வாத்தியாரை இன்றும் நினைவிருக்கின்றது. திரு. பா. வெங்கடாசலம் அதிபர் அவர்கள் தனது காலத்தை உவெஸ்லியில் முடித்தபோது நான் நினைத்தேன். பிரபாகரன்தான் அதிபராக வருவார் என்று. ஆனால், அதில் பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதனால் திரு. பொன். முருகையா அவர்கள் அதிபராகிவிட்டார். எனவே பிரபாகரன் பிரதி அதிபராகக் கடமை புரிய நேரிட்டது. இதனால் அன்று இவரது திறமை ஒரு குறிப்பிட்ட வட்டத்தினுள்ளே முடங்கிக் காணப்பட்டது. என்னதான் மாடுகள் வண்டியை நேராக இழுக்க நினைத்தாலும் வண்டிக் காரன் மூக்கணாங் கயிற்றை சுண்டிய பக்கமே மாடுகள் திரும்பி இழுக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே செயற்பாடுகள் காணப்பட்டன.

என்னைப் பொறுத்தவரை பிரபாகரனிடம் எதையும் ஆய்ந்து அறியும் தன்மை, நேர்மைக்கு முதன்மை கொடுக்கும் தன்மை, பொறுமைக்கு அதிக முன்னுரிமை கொடுக்கும் பக்குவம், மற்றவர் மனதை நோகடிக்காமல் பார்க்கும் திறமை, ஞாபகசக்தி என்பன போன்ற நல்ல விடயங்கள் பல அவரிடம் சற்று அதிகமாகவே காணப்பட்டன.



இப்படி எங்கள் பாடசாலைக் காலம் ஓடிய வேளை திரு. பொன். முருகையா அவர்களுக்கு ஓய்வு கிடைக்கும் தருணம் வந்தது. அடுத்தது பிரபாகரன் தான் அதிபர் என்று நான் கனவு கண்டவேளை பழைய அதிபருக்கு ஆறு மாதம் சேவை நீடிப்புக்கான அனுமதி கிடைத்தது. அதனால் என் எண்ணம் முடங்கிப் போயிற்று. அப்பொழுது நான் விரும்பியதெல்லாம் பிரபாகரன் அதிபராக வரவேண்டும், அவரது திறமை உலகிற்கு வெளிக்காட்டப்பட வேண்டும் என்பதாகும்.

எங்களது பயணம் தொடர்ந்த வேளை அதிபர் முருகையாவின் காலம் முடிவுறும் நாள் வந்தது. அவர் எப்படியோ பிரபாகரனிடம் அதிபர் பதவியை தற்காலிகமாக பாரம் கொடுத்தார். அன்று தொடக்கம் பிரபாகரன் தனது செயற்பாட்டை மேற்கொள்ளத் தொடங்கினார்.

இவரது ஆளுமைப்பண்பு, சுயமதிப்பீட்டுத் திறன், கற்ற அறிவின் அனுபவம், மற்றவர்களுடன் காட்டும் புரிந்துணர்வு என்பவற்றை ஒன்றாக வெளிக்கொணர்ந்து உவெஸ்லியை பல கோணங்களில் அபிவிருத்தி செய்தார். யாரையும் தனது பகிடிச் செயலாலும் சிரிப்பு முகத்தினாலும் மடக்கும் வல்லமை இவருக்குண்டு. இவர் யாருடனும் தனது பதவியின் நிமிர்த்தம் முரண்படவேண்டி வந்தாலும் அதன் பின்னர் முரண்பட்டவரை தேடிப் பிடித்து சமரசம் செய்து கொள்வார்.

ஆறு தரம் பிரதீபா பிரபா விருதை வென்ற அதிபர் வேறுயாரும் இருக்கிறார்களா? இதிலிருந்து பிரபாகரன் தனது திறமையையும் அர்பணிப்பையும் அரச பதவி தொடர்பான ஒழுக்கத்தையும் பேணி நடந்தவர் என்பதை நிருபித்து விட்டார். இவர் காலத்தில் பாடசாலை பல்வேறு பட்ட அபிவிருத்திகளை வெளிக்காட்டியது உண்மை. பௌதீகத் துறையில் அதீத விருத்தியை அடைந்துள்ளது என்பது வெளிப்படை உண்மை. இரண்டு கண்ணையும் பாடசாலையின் மீதுதான் வைத்துக் கொண்டிருப்பார். எந்நேரமும் பாடசாலைக்குள்ளே தான் காணப்படுவார். நாங்கள் வாணி விழாவிற்கான பொங்கல் பானைகளை அடுப்பில் ஏற்றும் முன்னரே அங்கு ஓடி வந்துவிடுவார். அடுப்பிற்குள் எரிவதற்காக உடைந்த கதிரை, மேசைச் சட்டங்களோ, கால்களோ எதுவும் போகாமல் தடுப்பதே அவரது நோக்கம். மீறி ஒன்று இரண்டு எரிந்துவிட்டால் அவரது CCTV Camera படம் பிடித்து காட்டிவிடும். பாடசாலை சொத்துக்களை பாதுகாத்து பராமரிப்பதில் இவருக்கு நிகர் யாருமில்லை.

நேர்மையை மதிப்பார், நேர்மையாகச் சிந்திப்பார், தவறான செயற்பாட்டில் ஈடுபடமாட்டார். இவர் மதுவைத் தொட்டதை நான் கண்டதில்லை. ஆனால் பிரபாகரன் உட்பட நாங்கள் ஆண் ஆசிரியர்கள் ஒன்று சேர்த்து உல்லை, உகந்தை முருகன், ஆறு குளம் என்று சுற்றுலா சென்றோம். சமையல் பரிமாறுவதில் இவருக்கு நிகர் யாருமில்லை. எப்படி சமைத்தார் எப்படி சாப்பாடு பரிமாறினார் என்பதை எனது நண்பன் பேரின்பராசா தான் அழகாக கூறுவார். அந்தக் காலத்தின் சிரிப்பை மறக்கலாமா?

பிரபாகரனின் செயற்பாடு பாடசாலையில் மட்டுமல்ல, தனது மதம் சார்ந்த செயற்பாடுகளிலும் முதன்மை பெற்றுக் காணப்படுகின்றது. ஏன் எத்தனையோ சங்கங்களில், கழகங்களில் போசகராக, ஆலோசகராக இருந்து செயற்படுவதும் பாராட்டக் கூடியது.

இவர் அதிபராக இருந்த காலத்தில் அலுவலகக் கதிரையில் இருப்பது குறைவு. பெரும்பாலான நேரத்தை பாடசாலை சூழலில் நடந்து திரிந்து வகுப்புகளை அவதானித்த படியேதான் கழிப்பார். அந்தளவுக்கு மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டவர். எதிர்வரும் காலங்களிலும் அதே போன்று செயற்திறனுடனும் நல்லுறவுடனும் பல்லாண்டு காலம் செயற்பட்டு சமூகத்திற்கும் சமயத்திற்கும் தொண்டு செய்ய வேண்டும் என்று மனதார வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆளுமையின் சிகரம்

**திரு. இரா. உதயன்**
விரிவுரையாளர்,
தேசிய கல்விக் கல்லூரி,
தாழங்குடா, மட்டக்களப்பு.

எனது விருப்புக்கும் பெரும் மதிப்புக்கும் உரிய அதிபர் திரு.வடிவேல் பிரபாகரன் சேர் அவர்களின் சேவை நலச் சிறப்பு விழா மலரொன்று வெளிவருவதனையிட்டு மட்டில்லா மகிழ்வடைகின்றேன். பல்பரிமாண ஆளுமையும் நல் உள்ளமும் மிகுந்த பிரபாகரன் சேர் அவர்களின் பணிகள் தொடர்பாக என் உள்ளத்தில் உருவான சில சிந்தனைத் துளிகளை சில குறிப்புகளாக சித்தரிப்பதில் உள மகிழ்வடைகின்றேன்.

மனித வாழ்வில் சில நிகழ்வுகள் தற்செயலான நிகழ்வுகளாகவும் இன்னும் சில நிகழ்வுகள் சுதந்திரமான எமது விருப்பத் தெரிவின் மூலமாக அமைவதாகவும் காணப்படுகின்றன. எனவே, மனித வாழ்க்கையானது இவ்வகை நிகழ்வுகளின் தொகுப்பாகும். வாழ்க்கையை ஒருவர் மகிழ்வாக வாழவேண்டுமானால் மேற்படி இருவகை நிகழ்வுகளையும் ஒருவர் விருப்புடன் எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களின் பல செயற்பாடுகள் அவர்களின் உடலும் உளமும் இணைந்த வகையில் இடம் பெறுவதில்லை. ஒருவரது நடத்தையில் உடலும் உள்ளமும் இணைந்து செயற்படுவதே சிறந்த முழுமையான ஆளுமை என்பதில் தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. எனினும் இதற்கு தடையாக அமைகின்ற எதிர்மறையான புறக்காரணிகளையும் தடைகளையும் சவால்களையும் உடலாலும் உள்ளத்தாலும் வெற்றி கொண்டும், அகத்தடைகளை முறையாக முகாமை செய்து வெளிக் கொணராத வகையில் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து தன் வாழ்க்கையையும், கடமைகளையும் சரியாக நிறைவேற்றுபவர்களைக் காண்பது என்பது மிக மிக அரிது. அவ்வாறான அரியவகை ஆளுமைச் சிகரமே எமது அதிபர் பிரபாகரன் சேர் அவர்கள்.

திருக்கோயில் பதிதனில் பிரசவித்து கல்முனை மாநகர் தனில் நல் ஆசானானகவும், சிறந்த ஆளுமை மிக்க நல் அதிபராகவும், அறிவாற்றல் மிக்க கல்வி நிருவாகியாகவும் திகழ்ந்த, என்றும் திகழும் பிரபாகரன் சேரிடம் நான் கற்றுக்கொண்ட, கண்டறிந்த, என்னை மெய்சிலிர்க்க வைத்த சில கடந்த கால நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றேன். கல்வி நிர்வாகியாகத் தெரிவு செய்யப்பட்ட இவர் பதவிக்கும் புகழுக்கும் ஆசைப்படாமல் மனத்திருப்திக்காகவும், வாழும் வாழ்க்கையின் அர்த்தங்களை நிலை நாட்டுவதற்காகவும் அறுபது அகவை வரை நல் அதிபராகவே திகழ்ந்தவர். இது எல்லோராலும் இயலாத ஒன்றுதான்.

ஓர் ஆசிரியனுக்கு தான் நாளாந்தம் போதிக்கும் 100 மாணவர்களை முழுமையாக அறிந்து கூறுவது என்பது இயலாத ஒன்றாகும். ஆனால் 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே விபரமாக அவர்களின் சுயசரிதை வாசிப்பது என்பது என்னை மெய்சிலிர்க்க வைக்கும் இவரின் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

ஆலமரத்தின் கீழ் சாதாரண மனிதராக உட்காந்திருந்து முழுப் பாடசாலையையும் முகாமை செய்வதும், காலையில் ஆசிரியர்கள் கையொப்பம் இடும்போது எதிரே உள்ள மேசையின் அருகே அமர்ந்திருந்த வண்ணம் சிவப்புக்கோடிடாமல் தானே ஒரு Red Line ஆக இருப்பதைக்கண்டு இதுவும் ஒரு சரியான உன்னதமான வினைத்திறன் மிக்க முகாமைத்துவ உத்திதான் என வியந்திருக்கின்றேன். அன்றைய நாட்களில் ஆசிரியர்கள், பெற்றோர்களிடம் கூட அருகில் செல்வதற்கு சிரமப்படும் விசேட தேவையுள்ள பிள்ளைகள் கல்லூரியில் இவர் கைகளைப் பிடித்து மகிழ்வாக இவருடன் சல்லாபித்து நடந்துவருவதைச் சத்தியமாக வெறும்வாய் வார்த்தைகளால் வர்ணிக்கத் தெரியவில்லை.

இவரின் உத்தியோகஸ்தர் ஒருவரின் வீட்டில் நடக்கும் துக்ககரமான நிகழ்வுகளில் இவரும் அவ் வீட்டாரைப்போல இரவு பகலாக பங்கு பற்றும் தன்மை எம் சமூகத்தையே வியப்பில் ஆழ்த்தும் ஒரு விடயம் தான். உவெஸ்லியின் "134 ஆம் ஆண்டு ஸ்தாபகர் தினவிழாவில்" மாணவர்களுக்கு பிரதம அதிதிகள் யார் என போட்டி நடாத்தி, இறுதியாக அவரின் நிர்வாகத்தின் கீழும் வழிகாட்டலினாலும் ஆசிரியராக கடமையாற்றி அதிபர் பரீட்சையில் சித்தியடைந்த என்னை பிரதம அதிதியாக மேடையேற்றி கௌரவித்த கௌரவிப்பு இன்றும் என் கண்முன்னே காட்சியளிக்கின்றது. இவரின் வசீகரமான முகமும் புன்சிரிப்புமே இவரின் ஆளுமை அழகின் முதல் படிக்கற்களாகும்.



"கறுப்பு – வெள்ளை அணிந்த ஆளுமையின் சிகரமே - உங்கள்
கம்பீரமான நடையும்!
கண்களால் கவர்ந்திழுக்கும் திறனும்!
சிரித்தால் பார்த்துக்கொண்டே இருக்கலாம்!
நக்கலும் நையாண்டியுடனும் கூடிய இறுக்கமே
உங்கள் தனித்துவம்!

சிறந்த நிருவாகமே உங்கள் உயிர் மூச்சு
நாம் கண்ட பெரும் சொத்து நீங்கள் தான்!
நல் ஆசிரியர்களையும்
நல் அதிபர்களையும் - சிறந்த கல்வியலாளர்களையும்
படைத்த நீங்கள் எம்மோடு இன்னும் பல்லாண்டு காலம்
பாராட்டும் அரங்கங்கள் பல கண்டு
பள்ளிக்கூடமாக எம்மோடிருந்து
ஆளுமை மிக்க நல்ல உள்ளம் நீங்கள் என்றும்
நீடுழி வாழ்க வாழ்க வாழியவே"




# சரித்திரம் மறவாத சாதனையாளன்

**திரு. கந்தையா சங்கரலிங்கம்**
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் - வரலாறு,
கல்முனை.

ஒன்றரை நூற்றாண்டு நோக்கும், கல்முனை உவெஸ்லிச்சாலை
ஒப்பிலா அதிபர் பல்லோர் - உழைப்பினால் உயர்ந்த கூடம்
ஒவ்வொரு அதிபர் ஆட்சி ஒவ்வொரு வகையாம் எனினும்
அவரவர் திறமைக்கேற்ப அதிபர்கள் புகழைப்பாடும்

கண்டிப்போடு கல்வி அதிபராம் யோகம் காலம்
கட்டடம் வளவிருத்தி வெங்கடாசலத்தின் காலம்
கலந்திவை கண்டதெல்லாம் பொன் முருகையன் காலம்
கனவான்கள் மூவர் காலம் நானு மங்கிருந்த காலம்

பின்னராய் அதிபரான பிரபாகரனின் காலம்
இன்னுமோர் எழுச்சிக்காலம் எமக்கெல்லாம் மகிழ்ச்சிக் காலம்
மின்னலாய் கல்விப்போக்கில் நொடிக்கொரு மாற்றம் காணும்
இன்னவை அனைத்துமேற்ற அடைந்த நற் புகழ்ச்சிக்காலம்

பழைய மாணவர் சங்கம் புலம் பெயர்ந்தோர் நன்கொடைகள்
பல்லின பன்மத போக்குக்கேற்ப பற்பல விழாக்கள்
பணியோய்வு இடமாற்றம் பெற்றோரைப் பாராட்டல்
பட்டியல் நீண்ட பற்பல நிகழ்வுகள்
கல்வியிலுயர்வு பல்கலைக் கல்விக் கல்லூரிகள்
செல்வதிலுயர்வு – செய்தோர்க்குப் புகழ்வு
கலைத்திறன் மொழித்திறன் தடகளம் விளையாட்டு
மலைத்திடும் சாதனை கண்டனர் மாணவர்

பல்கலைக் கழகம் சென்று உயிரியல் துறையில் பட்டம்
தந்தையார் தமக்கை வழியில் ஆசிரியர் பணி நுழைவு
அதிபர் சேவைக்குயர்வு பிரதியதிபராயிங்கு வரவு
அதிபராய் ஆனாய் பின்னர் கல்வி நிர்வாக சேவை
கல்லூரி அதிபராக வலய அதிபர்கள் தலைவனாக
பல்துறை ஆற்றல் கொண்ட பரம்பரை இயங்கச் செய்தாய்
இன்று பணி ஓய்வுகண்டு இப்பெரிய விழாவும் கண்டாய்
இனிவரும் வாழ்க்கை யாவும் இனிதாக அமையக் காண்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவைநலன் பாராட்டுதலும் நன்றி நவிலலும்

**திரு. டபிள்யு. எட்வின் அருள்நேசன்**
ஓய்வு பெற்ற அதிபர்,
கமு / பாண்டிருப்பு மகா வித்தியாலயம், கல்முனை.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 136 வருட கல்வி வரலாற்றில் சுமார் 21அதிபர்கள் இப்பிரதேச மாணவர்களின் நலன்களுக்காக தம்மை அர்ப்பணித்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்கள். அவர்களுள் ஒரு சிலரின் பெயர்களே மக்களால் அடிக்கடி நினைவு கூரப்படுவதை நாம் அறிவோம். அகவை அறுபதை பூர்த்திசெய்து அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திருவாளர் வடிவேல் பிரபாகரன் அவர்களும் மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்த ஓர் மாமனிதர் எனின் மிகையாகா. அவரின் தன்னலமற்ற சேவைநலன் குறித்தான இம்மலருக்கு எனது வாழ்த்துரையை வழங்குவதில் நான் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்..

ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் அவர்களின் கீழ் ஓர் ஆங்கில பாட ஆசிரியராக, ஒரு பகுதித்தலைவராகப் பணியாற்றிய அனுபவங்களுடன் முன்னாள் அதிபர்களான பாலசுந்தரம் வெங்கடாசலம் காலத்தில் பசுமை நிறைந்த ஆலமரங்களின் கீழ் அமர்ந்து அளவளாவிய நாட்களையும் பொன்னையா முருகையாவின் சுவடுகளைத் தொடர்ந்து பாடசாலையை உலாவந்த காட்சிகளையும் உங்கள் கண்முன்னே கொண்டு வருவது மிகப் பொருத்தமானதென நான் எண்ணுகின்றேன்.

இவரைப்பற்றி கூறுவதென்றால், இவர் நிறைந்த இறைபக்தி, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சுயகட்டுப்பாடு, தாழ்ச்சி, பொறுமை, சாந்தம் போன்ற பரிசுத்த ஆவியின் கொடைகளைப் பெற்றுக்கொண்ட நீதியான, நேர்மையான ஓர் கிறிஸ்தவன். "நான் உன்னைக் கைவிடுவதுமில்லை, உன்னைவிட்டு விலகுவதுமில்லை" என்னும் தேவ வார்த்தைகளினால் வழிநடத்தப்பட்ட ஒருவர். இவருடைய குடும்பப் பின்னணியும் பெற்றோரின் பரம்பரை அலகுகளும் இவருடைய ஆளுமையில் செல்வாக்கு செலுத்தியதை அவரின் ஒவ்வொரு வார்த்தையிலும் செயலிலும் காணக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக அவர் கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் நிருவாக உறுப்பினராகவும் கல்முனை மெதடிஸ்த திருச்சபை, இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உபதலைவராகவும் பதவிவகித்தார் என்பது அவரின் அறிவாற்றலின், திறமையின், ஆளுமையின் உச்ச நிலை எனலாம். இவர் பிரதி அதிபராக, பொறுப்பதிபராக பொறுப்பேற்றதன் பின்னரான காலங்களில் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளும் இணைப் பாடவிதான மற்றும் கலை கலாசார செயற்பாடுகளும் சிறப்பான நிலையை எய்தின எனலாம். வருடா வருடம் பல்கலைக் கழகங்களுக்கும் கல்வியியல் கல்லூரிகளுக்கும் மாணவர்கள் தெரிவாகும் வீதம் அதிகரித்துக் காணப்பட்டது. குறிப்பாக நீண்ட இடைவெளிக்குப் பின் மருத்துவம், பொறியியல், தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பம், உட்பட அனைத்துத் துறைகளுக்கும் கணிசமான மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவானார்கள். அவரின் வழிகாட்டல்களால் உருவாக்கப்பட்டவர்கள் பல று பேர் இன்று நாட்டின் நாலா பாகங்களிலும் பல்வேறு உயர் பதவிகளை வகிக்கின்றார்கள் என்பது கண்கூடு.

தற்போதைய அதிபர் செல்லத்தம்பி கலையரசன் அவர்களும் நானும் சமகாலத்தில் இப் பாடசாலையில் பகுதித் தலைவர்களாக பணியாற்றி பிரதி அதிபராயிருந்த பிரபாகரனிடமிருந்து பாடசாலை நிதி மற்றும் நிருவாகம் தொடர்பான விடயங்களை கற்றுக்கொண்டோம். இதன் பெறுபேறாக நாங்கள் இருவரும் இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 2009.11.13 ஆம் திகதியில் செயற்படும் வண்ணம் இலங்கை அதிபர் சேவை தரம் - II அதிபர்களாக நியமனம் பெற்றோம் என்பதை கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றேன். இவருடைய வழிகாட்டலின் கீழ் " வாரம் ஒரு பாடம் " என்னும் பாடமேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் பாட இணைப்பாளர்களாலும் பகுதித்தலைவர்களாலும் முன்னெடுக்கப்பட்டு வலயக்கல்வி அலுவலகத்தினதும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினதும் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இப்பாடசாலையில் 2009.12.09ஆம் திகதி முதல் ஆரம்பக்கல்வி ஆசிரியையாக பணியாற்றி 2018.04.25 ஆம் திகதி ஓய்வுபெற்றுச்சென்ற எனது மனைவி கமலாம்பிகை அருள்நேசன் (கமலா ரீச்சர்) அவர்களும் அதிபர் பிரபாகரனின் கீழ் பணியாற்றியதை பெரும் பாக்கியமாகக் குறிப்பிடுகின்றார். அவர் இங்கு கடமையாற்றிய சுமார் 9 வருடங்களும் தரம்- 5 வகுப்பு மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக செலவிட்டதையும் இதன்போது விசேட வேலைத்திட்டங்களை (மாலை நேர வகுப்பக்கள், விசேட மாதிரிப் பரீட்சைகள்) ஏனைய தரம் 5 ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு நடைமுறைப்படுத்தி பாடசாலையின் ஆரம்பக்கல்வி மேப்பாட்டிற்காக பாடுபட்டார். இதன் பெறுபேறாக 2013ஆம் ஆண்டில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைக்காக "குருபிரதீப பிரபா" விருதைப் பெற்றுக்கொண்டதை நன்றியோடு நினைவுகூருகின்றார். ஓய்வுநிலை அதிபர் வ. பிரபாகரன் அவர்களினதும் பிரதி அதிபரும் தற்போதைய கல்லூரி முதல்வருமான அதிபர் செ.கலையரசன் அவர்களினதும் ஆலோசனையும் வழிகாட்டலும் இவ்விருதை பெற்றுக்கொள்ள தனக்கு உந்துசக்தியாக அமைந்ததெனக் கூறுவார்.

அதிபர் பிரபாகரன் எந்தவொரு செயற்பாட்டிலும் பொருத்தமானவர்களை தனது விருப்பின்படி தன்னுடன் இணைத்துக்கொள்வார். 2000ம் ஆண்டில் பாடசாலைகளில் கணினி கற்கை நிலையங்கள் (Computer Learning Centre) ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே கணணி தொடர்பான பயிற்சியை பெற்றுக்கொள்ளும் வகையில் மாலைநேர வகுப்பொன்றை ஆசிரியர்களுக்கு ஏற்பாடுசெய்து தந்ததோடு தானும் பங்கேற்றார். இதேவேளை Computer Learning Centre க்கு பொறுப்பான ஆசிரியராகவும் க.பொ.த.(உயர்தர) வகுப்புகளுக்கு பொதுத் தகவல் தொழிநுட்ப பாடத்தை (General Information Technology ) போதிக்கும் ஆசிரியராகவும் எனக்கு பொறுப்புக்கள் இவராலே வழங்கப்பட்டன. இதன் பலனாக கல்முனை கல்வி வலயத்துக்கான முதலாவது தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாடத்துக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக 2007 - 2009 வரை சேவையாற்றும் வாய்ப்பு கிடைத்ததை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். எனது குடும்ப வாழ்விலும் இவரது செல்வாக்கு நிறைவாக இருந்ததை மறந்துவிட முடியாது.


சுனாமி ஆழிப் பேரலையால் நாம் பாதிக்கப்பட்டபோது எமக்கு ஆதரவும் அரவணைப்பும் நல்கியவர்களில் அதிபர் பொ.முருகையாவுக்கு அடுத்தவர் பிரதி அதிபர் பிரபாகரனே. என்னுடைய உயர்ச்சிக்கு மட்டுமன்றி எனது பிள்ளைகளின் உயர்ச்சிக்கும் ஊன்றுகோலாயிருந்தவரும் இவரேதான். எனது கனிஷ்ட புதல்வி பிறிஸிலாநிவேதா இப் பாடசாலையில் ஆரம்ப வகுப்பு முதல் உயர்தரம் வரை கல்வி கற்றார். அதிபர் பிரபாகரன் அவர்களின் நேரடியான கண்காணிப்பின் கீழ்பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறந்து விளங்கிய அவர் தனது பன்முக ஆளுமையை நன்கு வளர்த்துக்கொண்டதுடன் தனது பாடசாலைக்கும் தனக்கு கற்பித்த ஆசான்களுக்கும் கௌரவத்தை தேடிக்கொடுத்தவர் என்பதே நிதர்சனம். குறிப்பாக அவருடைய ஆங்கில மொழி விருதித்தியில் அதிபரின் பாரியார் வினோதினி பிரபாகரன் அவர்களின் பங்களிப்பு அவரின் வாழ்வில் என்றுமே மறக்க முடியாததென அடிக்கடி அவர் கூறுவார்.



மேலும் அவர் க.பொ.த(உ/த) பரீட்சையில் தேறி 2014/2015 ஆம் கல்வியாண்டில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு. தற்போது தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையில்(B.Sc -Information &Communication Technology) சிறப்பு பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார் என்றால் அதற்கான பாராட்டும் நன்றியும் அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த அதிபர் பிரபாகரன் மற்றும் பாடவிதான அபிவிருத்திக்கு பொறுப்பாகவிருந்த பிரதி அதிபரும் தற்போதைய அதிபருமான செ.கலையரசன், உதவி அதிபர் ச.தேவச்சந்திரா ஆகியோருக்கு உரித்தாகும்.

மொத்தத்தில், தன்னலம் கருதாது மாணவர் மற்றும் ஆசிரிய சமூகத்திற்காக தனது அதிபர் சேவைக்காலத்தை அர்ப்பணித்தது மட்டுமன்றி என் குடும்ப வாழ்விலும், கல்விப் பணியிலும், இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்திருந்த என் ஆசானும் நண்பனுமான ஓய்வுபெற்றுச் செல்லும் உவெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபர் வடிவேல் பிரபாகரன் அவர்களை மீண்டும் பாராட்டுவதோடு, அவர் தனது ஓய்வு காலத்தினை மனைவி, புதல்வன் மற்றும் குடும்பத்தினரோடு இறைமகன் இயேசுவின் ஆசிர்வாதங்களுடன் மகிழ்ச்சியாகச் சிறப்புடன் கழிக்க, எனது குடும்பத்தினர் சார்பாக மனதார வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உவெஸ்லியின் உயர்ச்சியில் உன்னத பணியாற்றிய உத்தமர்

**திரு. இ. இராசரெத்தினம்**
ஓய்வு நிலை அதிபர்,
பாண்டிருப்பு மகா வித்தியாலயம்,
கல்முனை.

1993ம் ஆண்டு உவெஸ்லியில், ஓர் விஞ்ஞான ஆசிரியராகவும், உதவி அதிபராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அவ்வாண்டிலேயே திரு. வ. பிரபாகரன் அவர்களின் இப்பாடசாலைக்கான இடமாற்றமும் நிகழ்ந்திருந்தது. இவர் உயிரியற் பாடத்தை உயர்தர மாணவர்கட்கு மிகத் திறமையாக கற்பித்ததை அவதானித்திருக்கிறேன். பிரத்தியேக வகுப்புக்களிலும் உயிரியற் பாடத்தை கற்பிக்கும் ஒரு சிறந்த ஆசிரியராக அவர் தன்னை அடையாளப்படுத்தியிருந்தார். பாடசாலையில் யாவருடனும் மிக நட்புறவுடன் பழகுவார். பேச்சுக்கள் நகைச்சுவை மிகுந்ததாக அமைந்திருந்தன. தனிமனித ஆளுமை, மற்றும் தலைமைத்துவப் பண்புகள் இவரிடம் காணப்பட்டன. அப்போதைய பாடசாலை அதிபராக இருந்த திரு. பா. வெங்கடாசலம் அவர்கள் இவரை 10ம், 11ம் வகுப்புக்களுக்கான பகுதித் தலைவராக நியமிப்பதற்கு எனது சிபார்சும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். எதிர் காலத்தில் ஒரு நாள் இப்பாடசாலையைப் பொறுப்பேற்று, திறமையாக நடத்தக்கூடிய ஒருவராக அன்றைய சூழலில் இவரை நான் அடையாளம் கண்டேன். பின்னர் அது நிதர்சனமாகியதை நினைத்து இன்றும் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பாடசாலைக்கு மாற்றலாகி வருவதற்கு முன்பாகவே, கல்முனை இவரது புகுந்த இடமாக மாறியமை, மனைவி, சகோதரி ஆகியோர் இங்கு கற்பித்தமை, தான்சார்ந்த மதப்பின்னணியைக் கொண்ட பாடசாலையாக அமைந்திருந்தமை, மற்றும் வசிப்பிடம் பாடசாலைக்கு அண்மையில் அமைந்திருந்தமை போன்ற சூழற்காரணிகள் பாடசாலை மீதான இவரது பற்றுறுதியை மேம்படுத்தும் காரணிகளாக நோக்கப்படலாம். ஆரம்பத்தில் ஓர் உயிரியல் ஆசிரியராகவும், பின்னர் உதவி அதிபர், பிரதி அதிபர் போன்ற பதவிகளை வகித்து, இறுதியில் 2009ம் ஆண்டு முதல் பத்து வருடங்கள் பாடசாலை அதிபர் பதவியை அலங்கரித்து, கல்வி நிர்வாக சேவைத் தரத்தையுடைய ஒருவராக ஓய்வு பெற்றுள்ளார். இவர் பொறுப்பதிபராக பதவி வகித்த காலம் இப் பாடசாலையின் பொற்காலமெனக் கூறலாம். ஓய்வு உறக்கமின்றி தனது அர்ப்பணிப்பான சேவையினை பாடசாலையின் உயர்ச்சிக்காக ஒப்படைத்திருந்தார்; வெற்றியும் கண்டார். பலரும் வியந்து நோக்கும் வண்ணம் நல்ல பல மாற்றங்கள் இப்பாடசாலையில் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தொலைவில் இருக்கும் ஒருவரின் வாயசைவினைக் கொண்டே வெளிவரும் வார்த்தைகளை இனம் காணும் திறன், அபார ஞாபகசக்தி, நகைச் சுவை உணர்வு, சிறந்த பேச்சாற்றல், பரந்து பட்ட கல்வி ஞானம், உயர்ந்த ஒழுக்கம், நேர்மை, இறையச்சம், அன்புடமை போன்ற உயரிய பண்புகள் இவரது பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு வலுச் சேர்ப்பவையாக அமைந்திருந்தன. இவர் பயின்ற பாடசாலைகள், பெற்றுக் கொண்ட கல்வியறிவு, கற்பித்த பாடசாலைகள் பழகிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், போன்றவற்றினூடாக பெற்றுக் கொண்ட அனுபவங்களையும், தனது இயல்பான திறமைகளையும் பாடசாலையின் உயர்ச்சிக்காக பயன்படுத்தியதன் காரணமாகவே பலரும் போற்றும் ஓர் உயரிய நிலையை அடைந்தார்.

பாடசாலையை சமூகத்திற்கு திறந்துவிட்டார். தனது சகல செயற்பாடுகளிலும் ஓர் வெளிப்படைத் தன்மையைப் பேணத் தவறவில்லை. ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் நலனோம்பும் விடயங்களில் அதிக அக்கறையுடையவராகத் திகழ்ந்தார். பாடவிதான, இணைப்பாட விதான செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டன. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன புனரமைக்கப்பட்டன. பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றவர்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள், சமூகப் பெரியார்கள், பழைய மாணவர்கள், கல்வி அதிகாரிகள் போன்றோர் பாடசாலை விழாக்களின் போது அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இச்செயற்பாடானது உவெஸ்லியின் தனித்துவமான செயற்பாடாக பலராலும் புகழ்ந்துரைக்கப்பட்டது.

இவ் அதிபரின் காலத்தில் ஏற்பட்ட இவ்வாறான நல்ல பல மாற்றங்கள் காரணமாக, பெற்றோருக்கு பாடசாலை மீதான நம்பிக்கை அதிகரித்து, மாணவர் தொகையும் கணிசமாக உயர்த்தியது. ஆசிரியர்கள் அதிபரின் சிறந்த தலைமைத்துவத்தை ஏற்று தங்களாலான ஒத்துழைப்புக்களை அவரின் செயற்பாடுகளுக்கு வழங்கினார். பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேறுகள் அதிகரித்தன; பல்கலைக் கழகம் செல்வோரினதும் ஏனைய கற்கை நெறிகளுக்குச் செல்வோரினதும் எண்ணிக்கை அதிகரித்தது. இணைப் பாடவிதான செயற்பாடுகளில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் 'உவெஸ்லியன்கள்' பரிசுகளைப் பெற்றனர். உவெஸ்லியின் புகழ் எங்கும் ஓங்கி ஒலித்தது. நல்லதொரு நிலையில் பாடசாலையை விட்டுச் சென்ற அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்களின் வழியில் மேலும் உவெஸ்லி உயர்ச்சியடைய, தற்போதைய, எதிர்கால அதிபர்கள் அனைவரதும் பணிகளும் பாடசாலையின் உயர்ச்சிக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டுமென்பதே இப்பாடசாலையை நேசிக்கும் அனைவரதும் அவாவாகும். ஓய்வு பெற்றுச் சென்ற அதிபரவர்கள் பாடசாலைக்காக செய்த தன்னலங்கருதாத சேவைக்கு நன்றி கூறுவதுடன், அவர் இன்னும் பல்லாண்டுகள், உடல், உள நலத்துடன் வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உவெஸ்லியின் பேசு பொருளாகிய அதிபர் பிரபாகரன்

**திரு. சஞ்சீவி சபாரெட்ணம்**
ஓய்வுபெற்ற அதிபர்,
சிவசக்தி மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை.

கல்முனை கல்விப் பிரதேசம் எங்கும் உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் அதிபர் பிரபாகரன் ஓய்வு பெறும் செய்தி காட்டுத்தீயாகப் பரவியது. பட்டிதொட்டி எல்லாம் அச்செய்தி பேசுபொருளாக மாறியதுடன் அவரின் சேவையின் சிறப்புகள் எடுத்தியம்பப்பட்டன. அவர் உவெஸ்லியைப் பொறுப்பேற்றதிலிருந்து அவருக்கு பாடசாலை மீது இருந்த ஈடுபாடு, அதில் ஏற்பட்ட மாற்றங்கள், உயர்ச்சி தொடர்பாக சேருகின்ற இடங்களில் எல்லாம் பலரும் பல கோணங்களில் அவரின் சேவைகளை சிலாகித்துப் பேசாதவர்கள் இல்லை. உண்மையான சேவையாளன் எப்போதும் மற்றவர்களின் மனங்களில் நிறைகின்றான், சேவையில் வாழ்கின்றான் என்பதற்கு உவெஸ்லி அதிபர் பிரபாகரன் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சிறந்த முகாமைத்துவமும் நிர்வாகத் திறமையும் கொண்ட அதிபராக இவரின் காலம் விளங்கியது. மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் தனது முழுப்பங்களிப்பையும் செலுத்தினார். இதனால் இவரது சேவை பலராலும் பாராட்டுக்குரியதாகவும் பலரின் வார்த்தைகளின் பேசு பொருளாகவும் மாறியது.

என்னைப் பொறுத்தவரையில் சிறந்த மனிதவள முகாமைத்துவத்தினை இப்பாடசாலையில் செயற்படுத்தி வெற்றிகண்ட அதிபராக அவர் திகழ்ந்தார். அவருடைய சேவைக் காலம் இப்பாடசாலையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக கல்வியில், இணைப்பாட செயற்பாடுகளில், பௌதீகவள அபிவிருத்தியில், பாடசாலைக் கட்டமைப்பில், மாணவர் ஒழுக்கத்தில் என அடிக்கிக் கொண்டே போகலாம். இவர் ஒரு முன்மாதிரியான அதிபராக இக்காலத்தில் வலம் வந்தமையே பலரின் கவனத்தை அவர் ஈர்த்ததற்கு காரணமாக அமைந்தது. அதிபர் சேவையின் முதலாம் தரத்தைச் சேர்ந்தவராகவும் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தரமுயர்த்தப்பட்டவரான திரு. வடிவேல் பிரபாகரன் அவர்கள் 17-02-2009 முதல் 19-09-2019 வரை கமு/ உவெஸ்லி உயர்தர பாடசலையின் அதிபராக கடமையாற்றியுள்ளார். பாடசாலையின் பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள், பாடசாலை சமூகம் என்பவற்றோடு சிறப்பான தொடர்பை ஏற்படுத்தினார். இதன் விளைவாக பாடசாலை பல சிறப்புக்களை அடைந்தது. அந்த வகையில் அண்மைய காலங்களில் அவர் தொடர்பாக பலரும் முன்வைத்த கருத்துகளை ஒரு தொகுப்பாக அவரின் சேவையைப் பாராட்டி வெளியிடும் புத்தகத்தில் முன்வைப்பதை இட்டு பெருமிதமும் மகிழ்சியும் அடைகின்றேன்.

முன்னையவர்களின் வழிகாட்டலையும் அனுபவத்தையும் முன்னுதாரணமாகக் கொண்டு ஓய்வு பெற்ற அதிபர் திரு.வ.பிரபாகரன் அவர்களும் தன் அரப்பணிப்பான சேவையை இப்பாடசாலைக்காக வழங்கி கல்லூரியின் மேம்பாட்டிற்கு வித்திட்டவர் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அவரது ஓய்வு காலம் மகிழ்ச்சியானதாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதிவரையும் எரிந்து ஜெயிக்கும் தீக்குச்சி . . .

**திரு. றிஸ்மி மஜீத்**
ஆசிரியர்,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

*மனசெல்லாம் சோகங்களின் ஊர்வலம் அணிவகுத்துச் செல்லுகிறது
ஊசிகளாக துளைக்கும்
உச்ச வேதனைகளுக்குள் சிறைப்பட்ட கைதிகளாக நாங்கள்*

*பச்சை ஆடை அணிந்த அழகு பூங்காவனத்திற்குள் ஒற்றை வெண்பூவாக
உவெஸ்லி தோட்டத்திற்குள் வலம் வரும்
ராஜ கம்பீரம் யாருக்குத்தான் வரும் . . .?
நிச்சயம் சரித்திரம் சொல்லும்
யோகம் அதிபருக்கு அடுத்தபடியாக உங்கள் பெயரை*

*மனச் செதுக்கல்களுக்குள் அற்புத சிற்பங்களாக
உங்கள் சேவைக் காலங்களை
செதுக்கிக் கொண்டிருக்கும் ஒரு சிற்பி நான்
உடல் குலுங்க, குலுங்க சிரித்து சிந்திக்கவைக்கும்
உன்னதம் யாருக்குத்தான் வரும் . . . ?
அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறது.*

நாவூற மனமினிக்கும் கவிவரிகளும்
அடுக்கி, அடுக்கி எடுத்துக் கொடுக்கும் சலனமற்ற பேச்சும்
மரபு, இலக்கணத்தை மீறிய வைரவரிகளையும்
இனியும், நாம் எங்கே கேட்கப்போகிறோம் . . .?

அவை சிறைப்பிடித்த பனை அடியில்
மணி பத்தரைக்குப் பிறகு பஞ்சாயத்து
அது மாணவர் பஞ்சாயத்து
கூட்டிற்குள் இருக்கும் குருவிகளும் அடங்கும்
அடைகாத்த காகமும், கழுகும் திசைமாறிப் பறந்து போகும்
கையசைத்து கதைத்த அரச இலைகளும் மௌன மொழி பேசும்
ஆலமரக்குடையின் கீழ் அமர்ந்த படி பஞ்சாயத்து தொடரும். . .
வேட்டி, தண்ணீர்செம்பு இவைகளை மீறிய
கறுத்த காற்சட்டை கண்ணாடி
மனசுபோல வெள்ளை சேட்டு அணிந்த
அன்பான, பண்பான நாட்டாமை அவர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடுக்கை இழந்தவன் கைபோல - ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு

**திரு. வே. அமிர்தலிங்கம்**
பிரதி அதிபர்,
மட்/விவேகானந்த மகளிர் கல்லூரி,
மட்டக்களப்பு.



நல்லவை செய்யும் போது பாராட்டியும் தீயவை செய்யும் போது சுட்டிக்காட்டியும் தவறை திருத்துவதுடன் பொய்யாமொழிப் புலவரின் வாய்ச்சொல்லிற்கேற்ப இடுக்கண் வரும்போது உடன் இருந்து உதவுவதுமே நல்ல நட்பின் பண்பாகும். முது தமிழ்ப்புலவர் ஔவையாரிடம் உலகில் உயர்வானது எது என்று கேட்ட பொழுது நல்லோர் சொற்கேட்பதுவும் நன்றே நல்லாரோடு இணங்கி வாழ்வதும் நன்றே என்று கூறுகின்றார். ஒருத்தரின் வாழ்வில் நல்ல நட்பு கிடைத்து விட்டால் போதும். அவரது வாழ்வு மகிழ்ச்சியாகவும், பயனுள்ளதாகவும் அமைந்துவிடும். அவ்வாறானதொரு நட்பு எனக்கு கிடைத்தமை நான் செய்த பாக்கியமே. " பிரபாகரன்" என்னும் வடிவில் அந்த நட்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. பல்வேறு பிரச்சினைகளால் மனச்சுமையுடன் இருக்கும் ஒருவருக்கு அச்சுமையை இறக்கி வைக்கும் சுமைதாங்கியாக நண்பர்கள் விளங்கவேண்டும். உளவியலிலும் இவ்விடயம் கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பல நற்பண்புகளைக் கொண்டவரே எனது நண்பன் வடிவேல் பிரபாகரன் அவர்கள் நட்புக்கு இலக்கணமானவர்.

நான் சிவானந்த வித்தியாலயத்தில் க. பொ. த (உ/த) கற்றுக்கொண்டிருந்த போது திரு. வ. பிரபாகரனை முதன் முதலில் பார்த்தேன். உயர்ந்த உருவம், நிமிர்ந்த நடை, ஒளி பொருந்திய பார்வை, கருமையான நிறம், படிப்படியாக கதைத்துப் பழகும்போது அவரிடம் காணப்பட்ட நகைச்சுவையுணர்வு, அன்புடனும், பாசமுடனும் பழகும் தன்மை, உண்மை, நேர்மை, அறிவு, ஆற்றல், நட்புடன் பழகும் தன்மை, இறைசிந்தனை அனைத்தையும் கண்டுகொள்ள முடிந்தது. என்னை அறியாமலே நட்பும் ஏற்பட்டது நான் மட்டும் அல்ல அவருடன் பழகும் அனைவரும் அவருடைய நட்பை விரும்புவர். அப்படிப்பட்ட ஒரு வசீகரம் பிரபாகரனிடம் உண்டு.

அதன் பின்பு கிழக்குப் பல்கலைக் கழகம் சென்றோம். அங்கு 20 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் சிவானந்த வித்தியாலயத்தில் பயின்ற எனது நண்பர்களாகவிருந்தனர் பின்பு கேட்கவா வேண்டும் மகிழ்ச்சிக்கு பல்கலைக்கழகத்தை முழுமையாக அனுபவித்தவர்கள் நாங்கள். இரவு நேர படக்காட்சிகள், கேலிகள், கிண்டல்கள், சமையல்கள், சுற்றுலாக்கள், பாசிக்குடா கடற்கரைக் குளியல்கள், அறுகம்பைக் கடற்கரை குளியல்கள், கலை நிகழ்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், பணிப்புறக்கணிப்புக்கள், கைதுகள், விளக்கமறியல்கள், அவுட் ஒப் பவுண்ஸ்கள், கூட்டங்கள், நாடகங்கள், பெருவெள்ளம் வந்தப்போது வாழைக்குற்றி மிதவைகள் செய்து நீந்தி விளையாடல்கள், ஒன்றுகூடல்கள், மன்றங்கள், சரஸ்வதிப் பூசைகள், ஒளிவிழாக்கள், 'கிரிக்கட் மெட்ச்' கள், சமூக சேவைகள், இரயில் பயணிகளை வரவேற்றல்கள், பகிடிவதைகள் என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். இவற்றை எல்லாம் வார்த்தைகளில் சொன்னால் புரியாது. அனுபவிப்பதன் மூலம் ஏற்படும் உணர்வுகள் அளவிடமுடியாத ஆழ, அகல, உயரம் கொண்டது. இவை அனைத்திலும் பங்காளியாகத் திகழ்ந்தவர் பிரபாகரன்.

பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு நாள் வார இறுதி விடுமுறைக்காக வீடு சென்று நாங்கள் தங்கும் விடுதியான "கண்ணி றெஸ்"க்கு மீண்டும் வருகின்றேன். இரவு 9.00 மணியிருக்கும் பயணக் களைப்புக் காரணமாக எனது கட்டிலில் சற்று சாய்ந்து படுத்துக் கொண்டேன். எனது பக்கத்து கட்டிலில் நண்பன் பிரபாகரன் இருந்து கொண்டிருந்தார். ஏதோ ஓர் உள்ளுணர்வு. எழுந்து எனது தலையணையை தூக்கிப் பார்க்கிறேன் பயத்தால் அலறியடித்துக் கொண்டு கட்டிலிலிருந்து பாய்கிறேன் காரணம் எனது தலையணையின் கீழ் விசம் கொண்ட நெடுவளலைப் பாம்பு. நான் அவ்வாறு பார்க்காது விட்டிருந்தால் அப் பாம்பு என்னை தீண்டியிருந்திருக்கும். நண்பன் பிரபாகரன் அவர்கள் சற்றும் பதற்றப்படாமல் பயப்படாமல் தடியொன்றை எடுத்து வந்து அடித்துப் பாம்மைக் கொன்று விடுகின்றார்.

அந்த விடுதியின் வெவ்வேறு அறைகளில் எனது பல்கலைக்கழக நண்பர்கள் தங்கியிருந்தனர். அனைவரும் ஒன்றுகூடி ஆரவாரம் செய்து பாம்புக்கு தகனக்கிரியை செய்கின்றோம். எனது அறைக்கு அடுத்ததாக உள்ள அறையில் நண்பர்களான சில்வெஸ்டர் தற்போதைய மாகாணக் கல்விப்பணிப்பாளரான திரு. மன்சூர் ஆகிய இருவரும் தங்கியிருப்பர். அவர்களது அறையின் ஜன்னல் பகுதியை திரும்பிப் பார்க்கிறேன் என்ன ஆச்சரியம் இன்னுமொரு பாம்பு இறங்கிக் கொண்டிருந்தது. அதனையும் எல்லோரும் சேர்ந்து அடித்து தகனக் கிரியை செய்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாம்புகள் இரண்டும் கொல்லப்படாதிருந்தால் இருவரும் உயிருடன் இருந்திருக்க முடியாமல் போயிருக்கும்.

இது போன்று அந்தநாள் ஞாபகங்கள் பல நெஞ்சிலே தோன்றுகின்றன. விமல்ராஜ் எனும் ஒரு யாழ் பல்கலைக் கழக மாணவனை பொலிசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவனது விடுதலைக்காக பல்வேறு போராட்டங்கள் யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களில் நடாத்தப்பட்டன. பாடசாலை மாணவர்களையும் இணைத்துக் கொள்ளும் நோக்கில் பல்கலைக்கழக மாணவர்களான நாங்கள் மட்டக்களப்பு நகரில் உள்ள பிரபல பாடசாலைகளுக்குச் செல்கிறோம். பாடசாலை மாணவர்களுக்கு விடயத்தை கூறி பகிஸ்கரிப்பில் ஈடுபடுமாறு கூறுகின்றோம். நானும் எனது நண்பனான திரு. கருணாகரனும் (தற்போது அமைச்சு செயலாளர்) சிவானந்த வித்தியாலயத்திற்கு செல்கிறோம் மாணவர்களை ஒன்று திரட்டி பகிஸ்கரிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கும் போது பொலிசார் வந்து இறங்கி எம்மை பிடிக்க முயற்சிக்க நாங்களும் மாணவர்களும் நாலா பக்கமும் சிதறி ஒடுகின்றோம். நான் மாணவர் விடுதியை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றேன்; திரும்பிப்பார்க்கிறேன். பொலிசார் துரத்திக் கொண்டு வருகின்றார்கள். நான் எனது முதலை தோல் பாதணியை கழற்றி விட்டு ஓடுகின்றேன். ஒரு பொலிசார் அவரது குண்டாத் தடியை என்னை நோக்கி வீசி எறிகின்றார். அதிஸ்டவசமாக அது என் மீது படவில்லை. மீண்டும் ஓடுகின்றேன் துரத்துகின்றனர். விடுதி வேலி பாய்ந்து பற்றைக் காடுகளுக்குள் ஓடி, வீடு ஒன்றினுள் நுழைந்து, ஒளிந்து கொள்கின்றேன். நண்பன் கருணாகரன் அவர்கள் ஓடி ஒரு ஆட்டுக் கொட்டகை ஒன்றின் கீழ் ஒளிந்து கொள்கின்றார். அவரது உடையெல்லாம் ஆட்டுப் புழுக்கை.

சில மணிநேரம் கழித்து வீடு போய்ச் சேர்கிறேன். மறுநாள் பல்கலைக்கழகம் சென்றபோது எனது நண்பர்களில் பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, விளக்க மறியலில் அடைக்கப்பட்ட விடயத்தை அறிந்தேன். எமது பல்கலைக் கழகப் பணிப்பாளர் பொலிசாருடன் கதைத்து, பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டு விடுதலையானவர்களில் பிரபாகரன் முக்கியமானவர்.

எமது பல்கலைக்கழக காலத்தில் புறக்கிருத்திய நடவடிக்கையில் அதிகமாக ஈடுபட்டோம். அதில் ஒரு கலைவிழா அதிலே நாங்கள் ஒருபுராண இதிகாச நாடகம் ஒன்றை மேடையேற்றினோம். "கம்சன் வதை" என்பது நாடகத்தின் பெயர் கலைச்சுடர், கலாபூசணம் கோயிலூர் தணிகா என அழைக்கப்படும் தணிகாசலம் அவர்களால் எழுதப்பட்டது. இதுவே கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்ட முதலாவது நாடகமாகும். இதில் நண்பன் பிரபாகரன் அவர்கள் முக்கிய பாத்திரமேற்று நடித்திருந்தார் தற்போதைய வலயக்கல்வி பணிப்பாளர் திரு. மயில்வாகனம், திரு. கோவிந்தசாமி, கலாநிதி, தேவகி கோவிந்தசாமி, திரு. ஸ்ரீபாலமுரளி போன்ற பலர் நடித்திருந்தனர். நானும் நடித்து இயக்கியுமிருந்தேன். சிங்கள மாணவ நண்பர்கள் மேடையலங்காரம் செய்திருந்தனர். இதுவும் ஒரு மறக்க முடியாத அனுபவமாகும். எனது பல்கலைக்கழகத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இருந்தது. அப்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்டப் பணிப்பாளராகவிருந்த திரு. வரதராஜா அவர்கள் இதை ஆரம்பிப்பதற்கு துணையாகவிருந்தார். இதன் தலைவராக திரு. வ. பிரபாகரன் தெரிவு செய்யப்பட்டிருந்தார். செங்கலடி கத்தோலிக்க தேவாலயத்தின் அருட்தந்தை ஒருவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து செயற்றிட்டம் ஒன்றை முன்வைத்தனர்.

பாசிக்குடாவை அண்மித்துக் காணப்பட்ட மிகவும் சிறிய, மிகவும் வறிய கிராமமான பட்டியடிச்சேனையிலுள்ள மக்களுக்கு குடிசைகள் கிணறுகள் அமைத்துக் கொடுப்பதே அச்செயற்றிட்டமாகும். சில வாரங்கள் அங்கு முகாமிட்டு தங்கியிருந்து அவற்றை திறம்பட நாங்கள் செய்தோம். இவற்றிற்கு தலைமை தாங்கி நண்பன் பிரபாகரன் அவர்கள் செய்த பணிகள் மறக்கமுடியாதவை. தனது பேச்சாற்றல், நகைச்சுவை வார்த்தைகள், கண்டிப்பும் கனிவும் கலந்த உத்தரவுகள் என எல்லோரையும் அன்பால் பிணைத்துக் கட்டிப்போடும் கலை தெரிந்தவர் அதனாலேயே அச் செயலை சிறப்பாக நிறைவேற்றினார் பிரபாகரன் அவர்கள். அப்போதே அவரின் தலைமைத்துவ பண்பு சுடர்விட்டு ஒளிர்ந்தது. பிற்காலத்தில் காலத்தால் அழியாத புகழ்பூத்த அதிபராக செயற்படுவதற்கு அவரது தலைமைத்துவ பண்புகள் துணைபுரிந்தது எனலாம். அங்குள்ள மக்களுடன் அன்பாகப் பழகினோம். இறுதி தினத்தன்று ஒரு கலை விழா நடைபெற்றது. அதில் நான் உட்பட பலரும் நடித்திருந்தோம். உடனடி தயாரிப்பு நண்பன் பிரபாகரன் அவர்களே நாடகத்திற்கான கருவையும் சொல்லி நகைச்சுவை வசனங்களையும் சொல்லித் தந்து நாடகத்தை நெறிப்படுத்தினார். கலை நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக இருந்தது. அவ்வூர் மக்கள் மகிழ்ந்து பாராட்டினர்.

மட்டக்களப்பு, கல்முனை பிரதேசங்களைப் பொறுத்தவரை மட்/சிவானந்த வித்தியாலயத்தின் அதிபர்களாக இருந்த திரு. கணபதிப்பிள்ளை அவர்கள், திரு. தியாகராஜா அவர்கள், மெதடிஸ்த மத்திய கல்லூரியின் திரு. பிரின்ஸ் காசிநாதன் அவர்கள், கமு/கார்மேல் பாற்றிமா கல்லூரியின் அருட்சகோதரர் மத்தியூ அவர்கள், மட்/சென் மைக்கல் கல்லூரியின் திரு. கமலநாதன் அவர்கள், கமு/உவெஸ்லி கல்லூரியின் திரு. யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் இன்றும் பேசப்படும் அதிபர்களாக விளங்குகின்றனர். அந்த வரிசையில் தற்காலத்தில் மிகவும் பேசப்படும் ஒரு அதிபராக திரு. வ. பிரபாகரன் அதிபர் அவர்கள் திகழ்கின்றார் என்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். தான் ஒரு கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தராக இருந்தும் அதிபராக பணிப்புரிவதையே விரும்பி ஏற்றுக் கொண்டார். அதனாலேயே பலமுறை அதிபர்களுக்கான ''குரு பிரபா பிரதீபா'' விருதுகளையும் பெற்றார். அதனாலேயே இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உபதலைவர் பதவியையும் பெற்று பிரதேசத்திற்கு பெருமை சேர்த்தார். அதனாலேயே இன்று மதிப்புடனும் மரியாதையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். சிறிது காலம் சட்டமும் பயின்றார்.

பல்கலைக் கழகத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த இந்து மாணவர் மன்றத்தின் முதலாவது தலைவராக திரு. வே. மயில்வாகனம் (தற்போது வலயக் கல்விப் பணிப்பாளர்) அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தார். அக் காலக்கட்டத்தில் மன்றத்தின் செயற்பாடுகளுக்கு நிதி திரட்டும் நோக்கோடு பெருந்தொகை மாணவர்கள் ஈச்சந்தீவு, நாவற்காடு பிரதேசங்களுக்கு சென்றோம். அது ஒரு சுற்றுலா போன்றே இருந்தது. மட்டக்களப்பு வாவியை படகு மூலம் கடந்து சென்றது ஒரு சிறப்பு அனுபவமாக இருந்தது. இந் நிகழ்வில் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமிய மாணவர்கள் அனைவரும் சென்று நிதி சேகரித்தோம். நண்பன் திரு. சிறிதரன் (தற்போது கணித பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களது வீட்டில் ஆடு வெட்டி பெரிய விருந்துபசாரம் நடைபெற்றது. இதில் பிரபாகரன் அவர்கள் முக்கிய பங்கு வகித்தவர். நண்பன் பிரபாகரனைப் பற்றி எழுதுவதென்றால் ஒரு புத்தகமே எழுத முடியும். ஒரு சிறு கட்டுரை என்ற வகையில் சில சம்பவங்களை மட்டும் எழுதி நிறைவு செய்கின்றேன். உடல் உயரத்தாலும், பரந்த உள்ளத்தாலும், உன்னத பணியாலும், பன்முக ஆளுமையாலும் சிறந்து விளங்கும் நண்பனைப் பற்றி சிறிதளவு எழுதவும், பல்கலைகழக வாழ்க்கையை மீண்டும் நினைத்து அசைபோடவும் வாய்ப்புத் தந்த அன்பும் மதிப்பும் மிக்க உவெஸ்லி கல்லூரியின் நிகழ்கால முதல்வர் திரு. செ. கலையரசன் அவர்களுக்கு நன்றி கூறியவனாக இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்முனையில் பிரபல்யமான சேவையாளர்

**திரு. வேலுப்பிள்ளை தங்கவேல்**
ஓய்வு நிலை உதவி அதிபர்,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் இந்த தருணத்தில் இப்பாடசாலையில் கடமையாற்றிய நான் அறிந்த அதிபர்களில் அமரர். யோகம் வேலுப்பிள்ளை, அமரர். க. சுப்பிரமணியம், திரு. எஸ். மகாலிங்கம், அமரர். பா. வெங்கடாச்சலம், அமரர். பொ. முருகையா, திரு .வ. பிரபாகரன் போன்றோர் ஆற்றிய சேவைகள் முக்கியமானவை என உணர்கின்றேன்.

1993ம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் திரு பா. வெங்கடாச்சலம், திரு. பொ. முருகையா ஆகியோருடன் இணைந்து சேவையாற்றிய திரு. வ. பிரபாகரன் கடமையாற்றிய காலத்திலிருந்து நான் ஓய்வுபெறுவதற்கு, சில மாதங்கள் முன்பாக அவரை அதிபராகவும் கண்டேன். திருக்கோவிலைப் பிறப்பிடமாகவும் கல்முனையில் திருமணம் செய்து வசிப்பதையும் நான் காண்கின்றேன். பிரபல்யம் வாய்ந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தபோதிலும் கல்முனையில் அதனை விடவும் பிரபல்யம் வாய்ந்தவராக அவரது சேவைகள் மூலம் திகழ்கின்றார்.

நீண்டகாலமாக விஞ்ஞான ஆசிரியராக சேவையாற்றிய இவர் பின்னர் பிரதி அதிபராக சேவையாற்றிய காலத்திலும் உயர்தர வகுப்பிற்கும் உயிரியல் பாடத்தைக் கற்பித்த ஒரு சிறந்த ஆசிரியராகவும் செயற்ப்பட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'பொறுமை போகவரக் காக்கும்' என்ற கோட்பாட்டை திரு பொன். முருகையா அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் நிலை நிறுத்திக் காட்டியவர்.

நன்றி மறப்பது இவரிடத்தில் இல்லை. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதுமில்லை. சேவை செய்தவர்களை மதிப்பதில் மிகவும் சிறந்தவர். இறையியல் சிந்தனை கொண்டவர். உவெஸ்லியின் பாரம்பரியங்களை ஆய்வு செய்து அறிக்கையாக ஆவணப்படுத்தியவர். கல்முனையின் உறுதியான காவலனாகச் செயற்பட்டு வருபவர்.

பிரபாகரன் என்றால் பத்து ஆண்டு காலம் உவெஸ்லிக்கு அதிபராக இருந்து சிறந்த சேவையாற்றிய ஒரு ஆளுமை என்பதை சுட்டி நிற்கும். 2009.07.10 ஆம் திகதி நான் ஓய்வு பெற்ற போது எனது சேவைக்கும் செயற்பாடுகளுக்குமான சிறப்பான 'பிரியா விடை' நிகழ்வை செய்து காட்டியவர். பாடசாலையை விட்டு நான் சென்றாலும் அவர் பாடசாலை நிகழ்வுகளில் ஓய்வு பெற்றோரை கௌரவிப்பதில் மிகப்பெரிய பங்களிப்பு செய்தார். இவரது காலத்தில் என்னை அனைத்து நிகழ்வுகளுக்கும் அழைத்து கௌரவம் தந்தவர். இவரது குறும்புப் பேச்சுக்களுக்கு சிரிக்காதவர்கள் இருக்க முடியாது.

அது போன்று இவரது சேவைக் காலத்தில் இப்பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர். இது போன்று எந்த ஒரு பாடசாலையிலும் இவ்வாறான கௌரவிப்புக்களை நான் கண்டதில்லை.

பாடசாலையின் வளர்ச்சி, தனது காலத்தோடு மட்டும் நின்று விடக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் பிரதி அதிபராக இருந்த திரு. செல்லத்துரை கலையரசன் அவர்களுக்கு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் வந்தபோது அவர் பற்றிய திறமைகளையும் செயற்பாடுகளையும் அவதானித்து, தூர நோக்குடன் சிந்தித்து, கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இப்பாடசாலையிலேயே தொடர்ந்தும் சேவையாற்ற வழிசெய்ததுடன் அவரே அடுத்த அதிபராகவும் வரவேண்டுமென்று செயற்பட்டார்.

தற்காலத்தின் அறிவு சார் சமூகத்தோடு போட்டி போடும் நிலைக்கு இப்பாடசாலையை வழி நடத்த வேண்டுமென்று மனமார விரும்புவதுடன் இப்பாடசாலையின் மாணவராகவும், ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் செயற்பட்ட பலரின் அனுபவங்களை பெற்று தற்போதைய அதிபர் திரு. செல்லத்துரை கலையரசனின் சேவைகள் கல்முனையில் சிறப்புக் கொண்டதாக மலர வேண்டுமென்று ஆசி கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லியின் ஞாயிறு



**திருமதி. சாந்தகுமாரி பரமலிங்கம்**
ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

1883 ஆம் ஆண்டு G.J. றிம்மர் குருவின் அருட்பணியினால் உருவாக்கப்பட்ட கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 18வது அதிபராக 2009ஆம் ஆண்டு கடமையேற்று மாணவர்களின் உயர்ச்சிக்காய் முற்று முழுதாய் தன்னை அர்ப்பணித்த திரு.வடிவேல் பிரபாகரன் அதிபர் அவர்களின் சேவைக்காலம் ஒரு பொற்காலமாகும்.

தான் கடமை புரியும் காலத்தில் இப்பாடசாலையை வினைத்திறன் மிக்கதாக உருவாக்க வேண்டுமென திடம் கொண்டவராக முனைப்புடன் செயற்பட்ட தன்மையை அவரின் முகாமைத்துவ அணுகுமுறையில் காணமுடிந்தது. இலக்குகளை அடைவதில் செயல்வீரனாகத் திகழ்ந்தார். அதிபராக கடமையேற்ற பின் 2010இல் நடைபெற்ற ஸ்தாபகர் தினத்திற்கு பாடல் ஒன்றை இயற்றியிருந்தார். அப்பாடல் ஸ்தாபகர் தினப் பாடலாக மாத்திரமல்லாது தன்னுடைய சேவைக் காலத்தில் பாடசாலை வெற்றிப் பாதையில் பயணிக்கப் போகின்றது என்பதை தீர்க்கதரிசனமாகக் கூறுகின்ற செய்தியாகவும் அமைந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"பயணம் பயணம் கல்விப் பயணம்

பணியை நோக்கிய புதுப்பயணம்

வாழ்வு தருகின்ற பயணம் இது

புது பாதை காட்டும் பயணம் இது....."

எனக் கூறி பாடசாலை சமூகத்தை புது பாதையில் பயணிக்க வைத்து வெற்றி கண்ட வேங்கை என்றால் மிகையல்ல.

உவெஸ்லி உயர்தர பாடசாலையின் வளர்ச்சிக்கு வித்திட்ட அதிபர் அமரர். யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் கல்முனைப் பிராந்தியத்தில் புகழ்ந்து பேசப்பட்டவராக இருந்தார். அவருக்கு அடுத்த நிலையில் கல்முனைப் பிராந்தியத்தில் மட்டுமல்ல புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற நலன் விரும்பிகளாலும் மெச்சப்படுகின்றவர் அதிபர் பிரபாகரன் சேர் என்பது யாராலும் மறுக்க முடியாது.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், சமூக சேவையாளர்கள் என பலருடனும் சுமுகமான உறவைப் பேணி பலமான நட்பை ஏற்படுத்தி பௌதீகவளம், கல்விவளம் என்பவற்றைப் பெருக்கிக் கொள்வதில் சாணக்கியம் மிக்கவராக இருந்தார். மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கேற்ப கற்றல் சூழலை உருவாக்கி பரீட்சைப் பெறுபேறுகளிலும் சித்தியடைவோர் வீதம் அதிகரித்தே காணப்பட்டதுடன் பலதுறைகளிற்கும் பல்கலைக்கழகம் செல்வோர் வீதம் அதிகரித்துக் கொண்டே சென்றது. இது பலராலும் பாராட்டப்பட்ட விடயமாக இருந்தது.

பரீட்சை பெறுபேறுகளில் மாத்திரமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சாதனைகளைப் படைக்க வேண்டுமென ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவித்து ஒத்துழைப்பு வழங்கியதனால் வருடந்தோறும் விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப் போட்டி, ஆங்கிலதினப் போட்டி, சிங்களதினப் போட்டி, கணித விஞ்ஞானப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி என பல போட்டிகளிலும் மாகாண மட்டம், தேசிய மட்டம் என்பவற்றில் பல மாணவர்கள் வெற்றிக் கேடயங்களையும் பதக்கங்களையும் வென்று சாதனை படைக்கக் கூடியதாக இருந்தது. அகில இலங்கை தமிழ் மொழித் தினம் 2019இல் தேசிய மட்டத்தில் இரண்டு தங்கப் பதக்கங்களை பெற்றமையும் இவ் அதிபரின் சேவைக்காலத்தில் பாடசாலைக்கு மாத்திரம் கிடைத்த வெற்றியல்ல, கல்முனை கல்வி வலயத்திற்கே கிடைத்த வெற்றியுமாகும். அதிபரின் ஓய்விற்கு முன் அவரின் வழிகாட்டுதலினால் பாடசாலையின் வரலாற்றில் தடம் பதித்த சாதனையாளர்களை உருவாக்க முடிந்ததையிட்டு மனநிறைவு அடைவதுடன் இதற்கான பரிசாக அதிபரிடமிருந்து ரூபா 10000 பணப்பரிசை வென்ற பெருமை பாடசாலையின் தமிழ் மொழிப்பிரிவுக்கு உண்டு என்பதை குறிப்பிடுவதில் பெருமிதமடைகின்றேன்.

மாணவர்களின் உயர்வில் அக்கறை கொண்டவராக இருந்ததுடன் ஆசிரியர்களும் தங்கள் தகைமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதிலும் கரிசனை கொண்டு அறிவுரை கூறி வழிகாட்டினார். இதன் விளைவாக பல ஆசிரியர்கள் இங்கிருந்து பதவியுயர்வு பெற்றுச் சென்றனர். அத்தோடு 18 ஆசிரியர்கள் சிறந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஜனாதிபதி விருதான "குரு பிரதீபா பிரபா" விருதைப் பெற்று சாதனை படைக்கக் கூடிய நிலையும் ஏற்பட்டது.

பாடசாலையின் நலன் கருதி தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இறுக்கமான நிர்வாக கட்டமைப்பைக் கொண்டிருந்தாலும் அதிபர் - ஆசிரியர் தொடர்பு, அதிபர் - மாணவர் தொடர்பு என்பன இணக்கமான தன்மையிலேயே இருந்தது. ஆசிரியர்கள் பிழை விடுகின்ற பொழுது அதிகாரத் தோரணையில்லாமல் நட்புடன் அணுகி பிழைகளை திருத்துகின்ற பண்பாளனாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிபரிடம் காணப்பட்ட சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் ஆசிரியர்களிடமும் தொற்றிக்கொண்ட நிகழ்வாகவே இருந்தது. தற்துணிவும் சாணக்கியமும் கொண்ட காப்பாளராக அதிபர் இருந்ததினால், ஆசிரியர்கள் எந்தவித அச்சமுமின்றி பாடசாலையின் புகழ்சிறக்க மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் பணியாற்றினார்கள். வெறும் கற்றல் நடவடிக்கைகளுக்குரிய இடமாக மாத்திரமல்லாமல் மாணவர்களதும் ஆசிரியர்களதும் ஆற்றல்களை, ஆளுமைகளை வளர்க்கின்ற நிகழ்வுகளைக் கொண்ட களமாகவும் இருந்ததனால் இங்கு காலடி எடுத்துவைத்த ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்கின்ற பொழுது அல்லது இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற பொழுது பாடசாலையை விட்டு பிரிய மனமில்லாதவர்களாக சென்றனர் என்பது உண்மையாகும்.

ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக சிந்தனைச் சிற்பியான அதிபர் பிரபாகரன் சேர் அவர்களின் எண்ணங்களில் ஊற்றெடுத்த செயற்றிட்டங்கள் பல. அவற்றுள் அதிபரால் முன்மொழியப்பட்ட "வாரம் ஒரு பாடம்" செயற்றிட்டம் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிகண்ட செயற்றிட்டமாகும்.

இதன் மூலம் இலைமறை காயாக இருந்த மாணவர்களின் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டதுடன் ஐந்து நாட்களும் புதிதுபுதிதாக நிகழ்ச்சிகள் மேடையேற்றப்படுவதனால் அதிகளவான மாணவர்கள் பங்கேற்கக்கூடிய வாய்ப்பேற்பட்டது. இச் செயற்றிட்டமானது இந்நிகழ்வுக்கு வரவழைக்கப்பட்ட அதிதிகளினாலும் கல்வியதிகாரிகளினாலும் புகழ்ந்து பாராட்டப்பட்ட விடயமாக இருந்தது.

பகலவனின் திருநாமத்தைக் கொண்ட அதிபர் அவர்கள் "ஞாயிற்றின் ஒளிக்கீற்றாக" பாடசாலையின் பல துறைகளையும் பிரகாசிக்கச் செய்த பெருமைக்குரியவர். சிறந்த ஆளுமையும் தலைமைத்துவமும் நிர்வாக ஆற்றலும் மிக்கவர் என்பதற்குச் சான்றாக: சிறந்த அதிபர்களுக்கு வழங்கப்படுகின்ற ஜனாதிபதி விருதான "குரு பிரதீபா பிரபா" விருதினைத் தொடர்ந்து ஆறு தடவைகள் பெற்று சாதனை படைத்தமையைக் குறிப்பிடலாம். இவ்வாறான சிறப்புமிக்க அதிபர் பாடசாலைக்குக் கிடைக்கப்பெற்றமை உவெஸ்லி அன்னைக்குக் கிடைத்த பாக்கியமாக கருதுகின்றேன்.

கல்லூரியின் முதல்வராக கடமையாற்றிய தசாப்தகாலத்தில் அறிவுப்பசிக்குத் தேவையான சகலவளங்களையும் பெற்றுக் கொடுத்து பலமான கல்விச் சமூகத்தை கட்டியெழுப்பிய கண்ணியமிக்க அதிபர் தமது சேவையில் இருந்து ஓய்வு பெறுவது இப்பாடசாலைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அதிபர் பதவியில் இருந்த போது ஆன்மீகப் பணியிலும் ஈடுபாடு கொண்டிருந்த அதிபர் அவர்கள் ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் இப்பாடசாலையின் ஆலோசகராக இருந்து மாணவ சமூகத்தின் கல்வி வளர தமது பணியை தொடர்வார் என்ற நம்பிக்கையும் உண்டு.

தான் நினைத்ததுபோல் பாடசாலையை புதிய பாதையில் பயணிக்கச் செய்து அதன் எழுச்சிக்கும், உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்போடு அளப்பெரிய சேவை செய்த அதிபர் அவர்கள் தனது குடும்பத்தாருடன் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த மனிதன்




**திரு. வை. சுந்தரராஜன்**
ஆசிரியர், கல்முனை.

*வெள்ளை நிற ஆடை*
*நிமிர்ந்த நடை, உயர்ந்த உருவம்*
*பள்ளியில் பவனி வந்த*
*பிரபாகரன் ஐயா !*
*நல்லிதயம் கொண்ட அதிபர்*
*நயமுடன் உறவாடி*
*நற்செயலாற்றத் தூண்டிய*
*பன்முக ஆளுமை கொண்ட*
*மனிதன் !*

*தற்பெருமையற்ற சுபாவம்*
*தாங்கு சக்தியுள்ள திறமை*
*நற்கரும மாற்றுவதில் முன்னோடி*
*நன்குயர்ந்த மனிதன்*
*நூற்றுக் கணக்கான மாணவரின்*
*நுண்ணிய விபரங்களை*
*நுனி விரலில் வைத்திருந்து*
*கண்ணியமாய் பாதுகாத்த அதிபர்*

*வெவ்வேறு குணமறிந்து*
*வேறுபாடு காட்டாமல்*
*அவ்வாறே அனுசரித்து*
*அவரவர்க்குப் பணி கொடுப்பார்*
*நையாண்டி செய்தேனும் - தான்*
*நினைத்ததைச் செய்திட*
*நீண்ட கதை பேசி*
*நிச்சயமாய் செய்விப்பார் !*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அக்கினிக் குழம்பான அதிபருடன்
அருகிலிருந்து பணியாற்றி தக்கவாறு
தகவமைத்து நெருப்புக்குள் நீச்சலடித்தவர்
"சகித்திருத்தல்" பற்றிக் கேட்டால்
சந்ததிக்கு சரியாக
வழிகாட்ட வேண்டுமென்பார்
அது பசித்திருந்து நோன்பதனால்
பயனடைதல் போலென்பார் !



பொன் பொருளை விரும்பார்
போக விட்டுப் புறங் கதையார் - ஆனால்
பகிடிக்காக கதை விடுவார்
நகைச் சுவையின் சின்னம்
சுள்ளென்று ஜோக் கடிப்பார்
சூடானால் சட்டம் பேசுவார்
உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசாத வெள்ளை உள்ளம் !

அர்ப்பணிப்பு அயராச் சேவை
ஆழ்ந்த ஆன்மீகம்,
கற்பித்தல் சிறப்பு,
கல்வி முகாமை
அனைத்தும் கொண்ட ஆளுமை
நீடுழி காலம் நிறைவான வாழ்வுடன்
நிலைத்த பணிகள் செய்து
பல்லாண்டு காலம் பாரில் சிறக்க
பணிவுடன் வாழ்த்துகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உங்கள் வற்றாத வளமான சேவைக்கு எனது புகழ் பூத்த பாராட்டு

**திரு. மூ. மன்மதராஜா**
ஓய்வு நிலை அதிபர்,
பெரியகல்லாறு.

அகவை 60ல் ஓய்வு பெறுவது பொதுவான ஒன்றுதான். ஓய்வு வயதுக்குதான், உடலுக்கும் உள்ளத்துக்குமல்ல. திரு. வ. பிரபாகரன் அதிபர் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். அவரின் சேவை நலனைப் பாராட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இதனை எழுதுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லீம் சமூகங்களால் இன்றும் புகழாரம் பூத்து நிற்கின்ற பாடசாலையாகும். இப் பாடசாலையில் பல கல்வி மான்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கல்வி பயின்று சேவை செய்துள்ளார்கள். ஜனாப். அஷ்ரப் அவர்கள் இப்பாடசாலையிலே கல்வி கற்று பாராளுமன்ற உறுப்பினராகவும், மந்திரியாகவும் இருந்திருக்கின்றார். இவர் இப்பாடசாலையில் ஒரு விழாவிற்கு வந்திருந்தபோது அவர் பேசிய சில வார்த்தைகளை இங்கு நினைவு கூறுகின்றேன். “இந்த பாடசாலையில் எனக்கு மூன்று இரத்தினங்கள் கல்வி கற்பித்துள்ளார்கள் ஒன்று திரு. ஞானரெத்தினம், இரண்டு திரு. செபரெத்தினம், மூன்று திரு. குணரெத்தினம்”



என்று அந்த ஆசிரியர்களுக்கு புகழாரம் சூட்டினார். அடுத்தது “எனது தாயாருக்கு என்னனென்ன நான் செய்யவேண்டுமென நினைக்கிறேனோ அதைபோல் இந்தப் பாடசாலைக்கும் நான் பல உதவிகள் செய்யக்காத்திருக்கிறேன்” என்றும் கூறினார்.

இந்த உவெஸ்லி உயர்தர பாடசாலையில் தம்பி திரு. வ. பிரபாகரன் ஆசிரியராக பணியாற்றி, அதிபராக சேவை செய்து, ஓய்வு பெற்று இருக்கின்றார். இவருக்கு புகழ் பூத்த பாராட்டு தேவைதானா? என எவரும் கேட்பார்களாயின் அதற்கு பதில் ‘ஆம்’ என்பதே. திரு. வ. பிரபாகரனைப் பற்றி புரிந்து கொண்டவர்களுக்கும், பாடசாலையின் வரலாற்றை ஆழமாக அறிந்து கொண்டவர்களுக்கும் இப்பதில் விளங்கும் என நான் அறிவேன். கிழக்கு மாகாணத்தில் கல்வி என்னும் மூன்று எழுத்து அழகியை கொண்டு வந்தவர்கள் கிறிஸ்தவ சபையென்பது எல்லோருக்கும் தெரியும். இந்தப்பாடசாலையில் நானும் இருபத்தியிரண்டு வருடங்கள் சேவை செய்யக் கிடைத்தது யேசுபிரான் எனக்குத்தந்த பாக்கியம் என கருதுகிறேன். தம்பி பிரபாகரனும் இப்பாக்கியத்தை அனுபவித்தார். அவரின் சேவையால் உவெஸ்லி உயர்தர பாடசாலை உயர்ந்து நிற்கிறது. அவரின் சேவைக்கு பாராட்டு மலராக்கம் முக்கியமானதாகும். இனி தம்பி திரு. வ. பிரபாகரனைப் பற்றிப் பேசுவோம் . . .

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அறிவில் | - | தெளிவு |
| அறத்தில் | - | நம்பிக்கை |
| அன்பில் | - | நெகிழ்வு |
| உழைப்பில் | - | ஓய்வின்மை |
| வாழ்வில் | - | எளிமை |
| கொள்கையில் | - | உறுதி |
| பதவியில் | - | பகட்டு இன்மை |
| புகழில் | - | மயங்கா நிலை |
| விளம்பரத்தில் | - | விருப்பமின்மை |
| யேசுவில் | - | பக்தி வடிவம் |

இவை அனைத்தும் திரு. வ. பிரபாகரன் தம்பிக்கு பொருந்தும்.

## அறிவு முதிர்ந்த முகாமைத்துவம்

ஒற்றுமையின் உறைவிடமாய் ஆசிரியருடன் அன்பாகப் பழகி கற்றல், கற்பித்தல் நெறியை கையாள்வதற்கு ஒரு திறமைசாலியாகத் திகழ்ந்தார். திரு. வ. பிரபாகரன் அவர்களிடம் சாணக்கியமுள்ள நிருவாகத் திறமை இருந்தது. வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல் சொல் வடிவத்தை ஆசிரியர் உள்ளத்தில் புகுத்தி வேலை செய்விப்பதில் இவருக்கு நிகர் இவர்தான். மறுநாள் பாடசாலையில் என்ன செய்ய வேண்டுமென்பதை திட்டமிட்டு வேலையை நிரல்படுத்தி சேவை செய்வதில் தம்பி பிரபாகரன் திறமையுள்ளவராக இருந்தார். மேடையிலேறி பிரசங்கம் செய்யும்போது சொற்பிரயோகத்தை ஒழுங்காகவும் சரியாகவும் பிரயோகிப்பதில் திறமையுள்ளவர்.

செல்வத்தில் பெருஞ்செல்வம் கல்வியாகும். இதை மாணவர் உள்ளத்தில் ஊட்டி வளர்ப்பதில் ஒரு திறமைசாலியாகக் காணப்பட்டார். அதிபர் யோகம் வேலுப்பிள்ளைக்கு பின் பல அதிபர்கள் சேவையாற்றி இருந்தாலும், ஆக்கத்தில் ஊக்கமாக சேவை செய்வதில் மற்ற அதிபர்களைவிட ஒருபடிமேல் என்று நான் கருதுகிறேன். இவர் தோழமையுள்ள ஆசானாகவும், உவெஸ்லி உயர்தர பாடசாலையின் மண்ணின் மைந்தனாகவும் நிலை நின்ற பெருமை இவரைத்தான் சேரும். பிறந்த மண்ணுக்கும் பெருமை தேடிக்கொடுத்த பெருந்தகையும் இவரே.

இவர் பாடசாலையில் புறக்கிருத்திய வேலைகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும், கலை கலாசார நிகழ்ச்சிகளிலும் மிக அக்கறையுடன் நேர்மை மிக்க நிருவாகியாக கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோருடன் உறவின் ஊற்றாக தொடர்பு கொண்டு O/L, A/L பரீட்சை முடிவுகளை பல்கலைக்கழகம் செல்வதற்கேற்றவாறு ஊக்குவித்த பெருமையும் தம்பி பிரபாகரனையே சாரும்.

**சமூக சமய சேவைகள்**

"உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது என்பது வல்லவன் வகுத்ததடா" என்று கண்ணதாசன் வரியமைத்தான். " கருணை இருந்தால் வள்ளலாகலாம், கடமை இருந்தால் வீரனாகலாம், பொறுமை இருந்தால் மனிதனாகலாம்" இந்த மூன்றும் இருந்தால் தலைவனாகலாம். என்று கண்ணதாசன் வரியமைத்துள்ளார். இவை அத்தனைக்கும் தம்பி பிரபாகரனே பொருத்தமானவர்.

இவர் நல்லதொரு கிறிஸ்தவனாக தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். பெரிய கல்லாற்றில் நடைபெறும் ஒவ்வொரு கிறிஸ்தவ நிகழ்விலும் திரு. வ. பிரபாகரன் அதிபர் அவர்கள் பங்குகொள்வதை நான் அறிவேன்.

உலகில் வாழ்ந்தவர்கள் பலகோடி, மாண்டவர்கள் பலகோடி, ஆனால் மக்கள் மனதில் நிற்பவர்கள் ஒரு சிலர்தான். கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் பல அதிபர்கள் சேவையாற்றி சென்றாலும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளத்தில் நிற்பவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில அதிபர்கள் மட்டும்தான். அந்த வகையில் திரு. வ. பிரபாகரன் அதிபர் அவர்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார். திரு. வ. பிரபாகரன் அதிபர் அவர்களின் வாழ்க்கையின் முன்னேற்றப் பாதைக்கும், அவரின் செயற்றிறமைக்கும் துணையாக நிற்பவர் அவரின் மனைவி "வினோ" ஆசிரியை தான். உலகம் போற்றும் மகாத்மா காந்தி "மகாத்மா" ஆவற்கு துணையாக நின்றவர் அவரின் மனைவி கஸ்தூரிபாய் என்று மகாத்மா காந்தி அவரின் சத்திய சோதனையில் எழுதியுள்ளார். திரு. வ. பிரபாகரன் அவர்களின் அதிபர் சேவையை ஒழுங்காகவும், திறமையாகவும் செய்வதற்கு பக்க பலனாக இருந்த அவரின் அன்பு மனைவி வினோ என்பதை மறக்க முடியாது. வினோ உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வி கற்ற மாணவி. இவர் ஒரு ஆங்கில ஆசிரியை. உத்தமன் பரதன் எனும் நாட்டுக்கூத்து அரங்கேற்றப்பட்டு அந்த நாட்டுக்கூத்தில் பரதனாக ஆடி, இலங்கை வானொலிக்கு அதைக்கொண்டு சென்றதும் எனக்கு இப்பொழுது ஞாபகம் வருகிறது. இந்த நாட்டுக்கூத்து அரங்கேற்றப்பட்டது திரு. பா. வெங்கடாசலம் அதிபர் அவர்களின் காலத்திலாகும்.

திரு. வ. பிரபாகரன் அவர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டாலும் கூட இவரின் சமூக, சமய தொண்டுகள் தொடர வேண்டுமென்றும் அவரின் உள்ளமும், உடலும் என்றும் நல்ல சுகமுடன் இருக்க வேண்டுமென்றும் இறைவனை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனக்கொரு வழிகாட்டி

**திரு. த. பூவேந்திரன்**
ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,
கார்மேல் பற்றிமா கல்லூரி (தே.பா),
கல்முனை.

கமு/கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபர் திலகமாக இருந்து ஓய்வு பெற்ற எனது பெருமதிப்பிற்குரிய திருவாளர் வ. பிரபாகரன் சேர் அவர்கள், 34 வருட காலக் கல்விச் சேவையில், 10 வருடங்கள் அதிபராகவும் சேவையாற்றியுள்ளார். அவரது கல்விப் பணிக்கான, அர்ப்பணிப்பு, தியாகம், போராட்டம், விடாமுயற்சி போன்ற வற்றை எண்ணிப் பெருமிதம் கொள்கின்றேன். அத்துடன் இணைந்த சேவையாக ஆன்மீகத் துறையில் பயிலும் அருத்தொண்டாற்றியமையை பெரிதும் வரவேற்கின்றேன். அவரது சேவைக்காலத்தில், அவருடன் பழக்கம் ஏற்பட்டதிலிருந்து அவரது அன்பு, அரவணைப்பு, பண்பு, பணிவு, நட்பு, அறிவாற்றல் சார்ந்த நடத்தைகள் அனைத்தும் என்னைக் கவர்ந்திருக்கின்றன.

கல்முனை வலயப் படசாலைகளின் அதிபர் சங்கத் தலைவராக இருந்து, அனைவராலும் தலைவர் என்று அழைக்கப்பட்டு, வலயத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய பல திட்டங்களைச் சமர்ப்பித்து செயற்பட்டமை, அதிபர்களுக்கான சகல கூட்டங்களிலும் தவறாமல் சமூகம் தந்து அவரது அதிபர் பதவியை மென்மேலும் உயர்வடையச் செய்தமை, அவரின் நிர்வாகம் சார்ந்த ஆளுமையை வெளிக்காட்டியமை, ஏனைய அதிபர்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாகச் செயற்பட்டமை போன்றவற்றால், அவர் எனக்கொரு வழிகாட்டியாக அமைந்தமையை நான் பெரிதும் வரவேற்கின்றேன்.

கல்முனை, தமிழ் கோட்டப் பாடசாலைகளில் நடைபெறுகின்ற அனைத்து இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஒவ்வொரு பாடசாலையின் அதிபர்களின் அழைப்பிற்கேற்ப தவறாது சமூகம் கொடுத்து அந்நிகழ்ச்சியைப் பெருமைப்படுத்துகின்றமை அவரது பெருந்தன்மையின் சிறப்பு. அவ்வகையில் எனக்கொரு வழிகாட்டியாக இருந்து என்னையும் ஊக்குவித்தமையை உணர்வு பூர்வமான நன்றிகளுடன் இத்தருணத்தில் பெருமைப்படுத்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலும், அவர் உவெஸ்லி உயர் தரப் பாடசாலையில் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலையில் நிகழ்த்தப்படுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பிரதேசத்திலுள்ள ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் ஏனைய அரச ஊழியர்கள், கல்விமான்கள் அனைவரையும் அழைத்து அன்பு பாராட்டி கௌரவித்திருந்தார். அவரின் இப் பண்பினை மனதார வாழ்த்துகின்றேன். அடியேன், உவெஸ்லி உயர் தரப் பாடசாலையின் பழைய மாணவனும் க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவு முதன்முதலில் இப்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டபோது, க. பொ. த (உ/த) கணிதப் பிரிவில் கல்வி கற்று சித்தியடைந்து கணித ஆசிரியராக நியமனம் பெற்றதுடன், சம்மாந்துறை வலயத்தில் சேவையாற்றி, அதன் பின்னர் கணிதபாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றினேன். பின்னர் இலங்கை அதிபர் சேவையில் இணைந்து கொண்டு, சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்தில் அதிபராகச் சேவையாற்றிய காலத்தில் (2018ம் ஆண்டு) என்னைக் கௌரவிக்கும் நோக்குடன் க.பொ.த (சா/த) மாணவர் தின விழாவிற்கு ஒரு அதிதியாக அழைத்து என்னைப் பெருமைப்படுத்தி இருந்தார். அவரது உயர்வான சிந்தனை எனக்கொரு வழிகாட்டியாக இருந்தமையை ஏற்றுக்கொண்டு எங்களது நட்பின் மகத்துவம் நலம் பெறவும், அவரும் அவரது குடும்பத்தாரும் இறையாசியுடன் இன்புற்று பல்லாண்டு காலம் வாழவும் வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவாநந்த நினைவுகள்...


நட்புடன்,
**திரு. சபாரெத்தினம் பிரணவசோதி**

வங்கக் கடலோரம் வடிவேலன் வந்தமர்ந்து
தெங்கு பனைகமுகு தேன்பலா வாழையொடு
தங்க நெல்விளைத்து தரணியோர் பசியாற்றும்
மங்காப் புகழடைந்த திருக்கோவி லுன்ஜனனம்.

விண்ணிற் பிறந்தவொளி விரைவாக விரவியது
மண்ணில் மாந்தருக்காய் மந்தைக் குடில்பிறந்து
எண்ணில் உபதேசம் எத்தனையோ அற்புதங்கள்
விண்ணகத்துத் தேவனவன் விவிலியத்தி லுன்பயணம்.

வித்தகன் விபுலனவன் நித்திய தரிசனத்தின்
சொத்தான சிவானந்த வித்தியா லயந்தன்னில்
வித்தாக நாமிருந்து விளைந்திட்ட காலங்கள்
எத்தனையோ என்றாலும் அத்தனையும் நிழலாடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தண்டவாள மணியோசை தாமரைக் குளத்துமணம்
உண்ட களைப்பாற உயர்ந்தோங்கு தருநிழல்கள்
கண்டு கதைத்தாற கள்ளமில்லா நண்பர்குழாம்
என்றும் மறக்கவொணா எத்தனையோ சித்திரங்கள்.

மணியடிக்க எழுந்தோடி துணிகட்டி 'ரப்'பிடித்து
பனியென்றும் மழையென்றும் பாராது குளித்தாறு
மணியாயின் 'பிளேன்டீ' அதன்பின்னே 'மோணிங் ஸ்ரடி'
அணியாக நடைபயின்று அடைவோமே கலைக்கூடம்.

காலைப் பிரார்த்தனையில் 'தினசரி தியானம்'படித்து
காலை பகலிரவுப் போசனத்துப் பொழுதுகளில்
'கைலை மலையானின் வேற்றாகி விண்ணாகி'
மாலையா ராதனையில் 'கருணாகரப் பரம்பொருளே'

'எக்ஸிற்' காட்டினிலே 'ஹோம்'என்று நாமெழுதி
எக்கசெக்கப் பொய்சொல்லி அதிலொப்பம் பெற்றதன்பின்
எட்டி நடைபோட்டு மட்டு நகரடைந்து
'எக்ஸ்பிறஸ் பஸ்'பிடித்து ஏகியநாள் மறந்திடுமோ?

முந்திரியங் குலைகளுக்கு முத்தல்கள் கல்லெறிய
பின்வீட்டு 'வேமரையா' கொம்பிக் குதித்தாடல்,
முட்கம்பி வேலியிடை பற்றீசு சுருட்டப்பம்
அஞ்சு சதத்துக்கு வாங்கியதை மறப்போமோ?

எட்டுமுழ வேட்டிதனைக் கட்டத் தெரியாமல்
சட்டெ னதையிரண்டாய் மடித்திறுக்கிக் கட்டியபின்
குட்டி நடைபயின்று குருகுலத்து 'ஷிறெயின்'முடித்து
கட்டிப் பாயாசம் கைநிறைத்த நாள்வருமோ?

ஆறில் மாணவனாய்ப் புகுந்துகல்வி கலைபயின்று
பேறாயோர் ஆசிரியத் தொழிலுமங்கு பெற்றுவந்து
அறுபதி லேயோய்வு பெறுவதைத்தான் ஆன்றோர்கள்
ஆறிலிருந் தறுபதெனக் கூறி மொழிந்தனரோ?

உரமோடு திடமாக உளமாரப் பணிசெய்தாய்
தரமாயிக் கலைக்கூடம் தலையோங்க வழிசெய்தாய்
அறவோர்கள் முதலாக மரமீறாய் அவைபேசும்
வரலாறு ஒருபோதும் மறவாதுன் திருநாமம்!

இறைநிகரும் ஆசிரியம் அதிபரெனப் பணிமுடித்தாய்
குறைவேது மில்லாத குடும்பத்து நலங்கொண்டாய்
நிறைவான மனமுனக்கு நிலைத்தபுக ழுமுனக்கு
மறைவாழ்வு தனைவாழும் உனக்கேது பணியோய்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் நாட்குறிப்பிலிருந்து

**செல்வி. இராசையா புஸ்பாவதி**
ஓய்வு பெற்ற ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

கிழக்கு மாகாணத்தில் - அம்பாறை மாவட்டத்தில் - கல்முனை நகரின் ஓர் அழகுப் பெட்டகம் உவெஸ்லி உயர்தர பாடசாலையாகும். இது மிஷனரிமார்களின் எண்ணத்திலும் அவர்களின் அயராத அர்ப்பணிப்புடனான உழைப்புடனும் கட்டியெழுப்பப்பட்ட ஓர் மணி மகுடமாகும் . இந்த அழகிய கல்விக்கூடத்திற்கு அழகுக்கு அழகு சேர்ப்பது போல் அதன் இயற்கை வனப்புகள் அழகு சேர்க்கின்றன. ஆனால் இதிலுள்ள ஆச்சரியம் என்னவென்றால். அந்த இயற்கை வனப்புக்கள் இன்றும் அதே பொலிவோடு அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன. இந்த அழகிய பாடசாலை அண்மையில் தனது 136வது ஆண்டு நிறைவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடி விட்டது. இந்த வகையில் ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர் திரு. வ. பிரபாகரன் சேர் அவர்களின் தரவுகளின்படி கி.பி. 1883 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையை இருபத்து இரண்டு அதிபர்கள் 136 வருடங்களை வெவ்வேறு காலங்களில் கச்சிதமாக வழி நடத்திச் சென்றுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். காலங்கள் கடந்தாலும் எதிர்காலத்திலும் எமது சந்ததியினரின் அரும்பெரும் சொத்து பாதுகாக்கப்படுவது காலத்தின் தேவையாகும். அந்த வகையில் நான் ஒரு ஆசிரியராக இருந்த அந்தக் காலத்தில் என் நாட்குறிப்பின் சில பக்கங்களைப் புரட்டிப் பார்க்கின்றேன்.

அன்று நான் எனது நான்காவது பாடசாலைக்கு அதாவது உவெஸ்லி உயர் தர பாடசாலைக்கு இடமாறிச் சென்ற அந்த நாள்.... அங்கு மூன்றாவது தவணைப் பரீட்சை ஆரம்பமாகிவிட்டது. இந்த நிலையில் எனது மூன்றாவது பாடசாலையில் வந்த இடமாற்றத்தை எண்ணிப் பார்க்கின்றேன். ஏனெனில் அப்பாடசாலையில் அதிபர் வெற்றிடம் இருந்தது. அந்த பாடசாலையிலிருந்து அதிபர் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய ஒரேயொரு ஆசிரியை நான் மட்டும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தற்காலிக அதிபராக இருந்தவருக்கும் அவரது விசுவாசிகளுக்கும் ஒரு கலக்கமாக இருந்தது. இதனால் என்னைத் திட்டமிட்டு இடமாற்றம் செய்வது அவர்களது நோக்கமாக இருந்தது. எனவே நான் இடமாற்ற விண்ணப்பப் படிவம் நிரப்புவது போல் அன்றைய தற்காலிக அதிபர் கல்விக் காரியாலயத்திற்கு இடமாற்ற விண்ணப்பத்தை ஒப்படைத்திருந்தார். ஏதோ ஒரு காரணத்திற்காக காரியாலத்திற்குச் சென்ற என்னிடம் அவ்விண்ணப்பத்திலுள்ள குறைபாடுகளை சம்பந்தப்பட்ட எழுது வினைஞரால் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது தான் எனக்குச் சங்கதி விளங்கியது. அடுத்த நாள் இடமாற்றக் கடிதம் எனது கைக்கு எட்டியது. எனது உள்ளம் சலனங்களால் அலைந்தது. 2008 நவம்பர் 14ம் திகதி நான் உவெஸ்லி உயர்தர பாடசாலை வளாகத்துக்குள் நுழைந்தேன். தேவாலய வளவின் ஊடாக நான் நடந்து செல்கின்றேன். நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் எனக்குள் அறியாத இனம் புரியாத ஒரு நடுக்கமாக இருந்தது. எனது குடும்பத்தில் இடை நடுவில் ஏற்பட்ட பல துன்பங்களுக்கு முகம் கொடுத்தவள் நான். அந்த வகையில் எனக்குள்ளே பெண்மையும் மென்மையும் குடிகொண்டிருந்ததால் எனக்கு வரும் சடுதியான கோபம், ஓடி மறைந்திருந்தது.

ஓ...... இறைவா என்ன கொடுமை இது, அதிகாரப் போட்டிக்காக சோடிக்கப்பட்ட செய்திகள் அதிபர்கள் மத்தியிலும் உலாவியது என்று எண்ணி வேதனைப்பட்டு, காலை ஆறு முப்பது மணிக்கு அந்தப் பாடசாலைக்குள் வந்து சேர்ந்தேன். அப்பாடசாலை இயற்கை எழில் கொண்டதொரு வனப்பு.

ஆல மரத்திலிருந்துவரும் புள்ளினங்களின் கீச்...கீச் என்ற ஓசையும் எனது மனதிற்கு ரம்மியமாக இருந்தது. அதன் பின்னர் கால்கள் தட்டுத் தடுமாறியது இறைவா...... எனக்குத் தைரியத்தைக் கொடு என்று இறைவனை வேண்டிக் கொண்டேன். அதன் பின்னர் எனது கால்கள் பிரதி அதிபரின் காரியாலத்தை நோக்கி நடக்கின்றன. அப்போது அங்கே ஒருவர் என்னைக் கண்டுவிட்டு வருகின்றார். நன்றாக தூரத்திலிருந்து உற்று நோக்குகின்றார். பின்னர் அருகே வந்து வாங்க...... வாங்க நீங்கள் யார்...... எங்கிருந்து வருகின்றீர்கள் என்று கேள்வி கேட்டார்.

அப்போது நான் உணர்ந்து கொண்டேன் இவர் ஒரு கல்வி சாரா ஊழியர் என்று

பதிலுக்கு அண்ணன் .. நான் இப்பாடசாலைக்கு இடமாற்றத்தில் வந்த புதிய ஆசிரியர் என்றேன் அவரது பெயரைக் கேட்டேன் பதிலுக்கு அவர் நேசராசா என்றார்.

உடனே அவர் குட்மோனிங் ரீச்சர் என்றார். நானும் பதிலளித்தேன். சிறிது நேரதின் பின்னர் நான் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

அண்ணன் என்னைப் பற்றி ஏதாவது அறிந்தீர்களா? இங்கே என்னை யாராவது சொன்னவர்களா? என்று மீண்டும் கேட்டேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பதிலுக்கு நேசராசா ஓம் ரீச்சர் நீங்க ஒரு குட் ரீச்சராம் என்றார்.

மீண்டும் நான் யார் சொன்னார்கள் என்று கேட்டேன். எங்களுடைய பிறின்ஸ்பல் முருகையா சேர் என்றார்.

என்னை தூக்கி வாரிப் போட்டது போல் இருந்தது. பொறுத்திருந்து பார்க்கலாம் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டு இருந்தேன். நேரமாக ஒவ்வொருவராக வந்து கையொப்பம் இட்டுச் செல்கின்றார்கள். சரியாக ஏழு இருபது அதிபர் வந்தார். அதிபரைக் கண்டவுடன் சட்டென்று எழுந்து நின்று குட்மோனிங் சேர் என்றேன். பதிலுக்கு அதிபர் குட்மோனிங் என்று கூறிவிட்டு. "உடனே நீங்களா மகள் இங்கு இடமாற்றத்தில் வந்தவர்" என்று கேட்டார்.

பதிலுக்கு நான் "ஓம்" என்று தலையசைத்தேன். ஏனெனில் அதிபர் முருகையா சேர் எனக்கு உயர்தர வகுப்பிற்கு லொஜிக் பாடம் கற்பித்த அந்த நாள் ஆசிரியராவார்.

அடுத்த நாள் பரீட்சைக் கடமைக்குச் செல்லும் படி ஒரு சேதி வந்தது. நான் அங்கு சென்று ஒரு மணி நேரமாகவில்லை ஒருவர் வந்து ரீச்சர் உங்களைப் பிரபாகரன் சேர் வரட்டுமாம் என்று கூறிவிட்டுச் சென்றார். நான் மூன்றாவது மாடியிலிருந்து இறங்கி வந்தேன். அங்கே ஆலமர முற்றத்தில் பிரபாகரன் சேர் நிற்கின்றார்.

என்னைக் கண்டதும் ரீச்சர் இன்று ஆண்டு ஒன்றிற்குரிய ரீச்சர் லீவு. நீங்கள் அங்கே போய் கொஞ்ச நேரம் இருங்க என்றார். மறுப்பெதுவும் சொல்லாமல் அங்கு சென்றேன். பிஞ்சுக் குழந்தைகளின் வரவேற்பும் மழலை மாறாத பேச்சும் என் மனதிற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அடுத்த நாள் நான் கடமைக்கு வந்தேன். ஆசிரியர்களுக்கான ஓய்வறையிலிருந்த போது எனக்குத் தெரிந்த ஒரு ஆசிரியர் வந்தார். ரீச்சர் உங்களை பிரபாகரன் சேர் வரட்டுமாம்?

என் உள்ளம் "மீண்டும் ஓர் அழைப்பு மணியா?" என்று வினாவத் தொடங்கியது. ஆனாலும் துணிவுடன் சென்றேன். என்னைக் கண்டுவிட்ட பிரபாகரன் சேர் தனது குரலை உயர்த்திக்கொண்டு ரீச்சர்... நீங்கள் வந்த உடனே மீண்டும் வேறு பாடசாலைக்குச் செல்லப் போவதாகக் கூறியிருக்கின்றீர்கள் அது உங்கட விருப்பம் நாங்கள் அடுத்த வருடத்திற்கான ரைம் ரேபிள் போட வேணும். இன்றைக்கு பாடசாலை முடிவதற்கு முன்னர் உங்கள் தீர்மானத்தை சொல்லிற்றுப்போக வேண்டும் என்றார். தலையசைத்துத் திரும்பிய நான் மீண்டும் அதிபரின் அருகே சென்று சேர்... எனக்குத் தமிழ், இலக்கிய நயம் பாடங்களைப் போடுங்கள் என்றேன் உடனே சேர்...... ஆ....அப்பிடி இருக்க வேணும் என்றார்.

எனது நாட்குறிப்பிலிருந்த மற்றுமொரு சம்பவம் - பாடசாலை விட்ட பிறகு தரம் 10, 11க்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்ந்து ஒரு மணித்தியாலயம் கற்பிக்க வேண்டும். ஒரு நாள் நான் பாடசாலைக்கு முச்சக்கர வண்டியில் வரும்போது மறந்துபோய் பாடசாலையையும் கடந்து அயற் கிராமத்தின் எல்லைக்கு வந்துவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தொலைபேசி அழைப்பு மணி சிணுங்கியது. யாருடைய அழைப்பு என்று பார்த்தேன் பிரபாகரன் சேரின் தொலைபேசியிலிருந்தே அழைப்பு. அப்போது கூட எனக்கு மேலதிக வகுப்பு என்பது நினைவுக்கு வரவில்லை. ''ஹலோ'' என்றேன் .

கனத்த குரலில் அதிபர் பேசுகிறார். ரீச்சர் உங்களுக்கு வகுப்பல்லவா? உடனே வாங்க இரண்டு வார்த்தைகளோடு தொலைபேசி துண்டிக்கப்பட்டது. நான் ஓடோடி வந்தேன். என் வரவிற்காக நான்கு மாணவிகள் காத்திருந்தார்கள். இங்கே அதிபரின் கடமை உணர்வை நான் கண்டேன்.

என் நாட்குறிப்பிலிருந்து மற்றுமொரு சம்பவத்தை மீட்டிப் பார்க்கின்றேன். 2017ம் ஆண்டில் நான் தரம் ஏழுக்கு வகுப்பாசிரியராக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது எங்கள் வகுப்பறைக்கு அருகில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலமது. அங்கே சுவருக்கு மை பூசிக் கொண்டிருந்த இருபது வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞனால் பாடசாலையின் இடைவேளையின் போது எனது வகுப்பு மாணவன் தாக்கப்பட்டிருந்தான். செய்தியறிந்ததும் என்னால் எடுக்கப்பட வேண்டிய முதலுதவிகளைச் செய்துவிட்டு, அதிபரிடம் மாணவனை அனுப்பி வைத்தேன். அப்போது அந்த மாணவரிடம் அதிபர் அதிக விசாரணைகளை மேற்கொண்டு விட்டு, அந்த இளைஞனை வரவழைத்து ''என் பிள்ளைக்கு நீ ஏன் அடித்தாய் அடிப்பதற்கு நீ யார்?'' என்று கேட்டார். என் வகுப்பு மாணவர்கள் அப்படியே பூரித்துப் போனார்கள். இதுதான் ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய ஆளுமைப் பண்பு. அவரது நடை, உடை கம்பீரமான குரல்வளம் எல்லாம் அவரின் ஆளுமையை மேலும் அதிகரிக்கச் செய்த விடயங்களாகும். மேலும் சம்பவத்திற்கு ஏற்றாற்போல் அவர் நடந்து கொள்ளும் முறையும் சிறப்பானதாகும்.

அடுத்ததாக என் நாட்குறிப்பிலிருந்து ஒரு சுவாரசியமான சம்பவம் - அனைத்து ஆசிரியர்களையும் மகிழ்வித்த ஒரு சம்பவமும் கூட. எப்போதும் வகுப்பறைகளையும் சிற்றுண்டிச்சாலையையும் ஒரு வழிப்பாதையையும் அதிபரின் நேர்கொண்ட பார்வை நோக்கிய படியேயிருக்கும். அதே வேளை அவரால் அமைக்கப்பட்ட சிங்கராசா கொட்டகை ஒரு மரத்தோடு சேர்ந்து அமைக்கப்பட்டிருக்கின்றது. உழைத்துக் களைத்த ஆசிரியர்கள் அதிபரின் கண்ணுக்குள் அகப்படாமல் மறைந்திருக்கலாம். அன்று எனது ஓய்வான நேரத்தில் அங்கு நான் அமர்ந்திருந்தேன். எதிர்பாராமல் அதிபர் அங்குவந்தார் அவரைக் கண்டதும் நான் பயந்து விட்டேன். உடனே அதிபர் '' என்ன ரீச்சர் கவறேச் இல்லாத ஏரியாவில் இருக்கிறீர்கள் போல் என்று புன் சிரிப்போடு கேட்டார். இதனை நான் சக ஆசிரியர்களிடம் கூறிக்கலந்து மகிழ்ந்தேன். ஏனெனில் இது என்னால் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகும்.

என் நாட்குறிப்பிலிருந்து சில கசப்பான ஒரு சில சம்பவங்களும் இருக்கின்றன. ஏனெனில் ஓய்வு பெற்ற அதிபரின் தூரநோக்கு சரியான இலக்கு என்பவற்றிக்கு சிலரினால் எத்தி வைக்கப்பட்ட தவறான கருத்துக்களாலும் அவரது தனிப்பட்ட சிந்தனைக்கு அது இடை இடையே தொய்வை ஏற்படுத்தி விட்டது. அதில் ஒன்று 2016ம் ஆண்டு நான் தரம் 9க்கு வகுப்பாசிரியராகப் பணிபுரிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாடிக்கட்டடம். எனக்கு முழங்கால் உபாதையுண்டு. அதனால் முழங்காலுக்கு கவசம் அணிந்து தான் நான் 72 மாடிப்படிகளையும் ஏறி இறங்குவது. அன்று அப்படித்தான் முதலாவது பாடத்தை ஆரம்பித்துக் கொண்டிருந்தேன். திடீரென அதிபர் எனது வகுப்பறைக்குள் நுழைந்தார். அண்மையில் இருக்கும் வைத்தியசாலைக்கு தரம் - 09 வகுப்பு மாணவர்களை அழைத்துக் கொண்டு களப் பயணம் ஒன்றுக்குச் செல்லுமாறு கட்டளை இட்டுச் சென்றுவிட்டார்.

நானும் சக ஆசிரியரும் மாணவர்களை அதுவும் ஆண் மாணவர்களை, பொறுப்பெடுத்து எமது களப்பயணத்தை முடித்து விட்டு, சரியாகப் பதினொரு மணிக்கு பாடசாலைக்குள் அவர்களை அழைத்து வந்தோம். காரணம் எனது முழங்கால் வலி, கவசம் கழற்றப்படவில்லை. ஆனால் சக ஆசிரியர் பெண் மாணவர்களைப் பொறுப்பெடுத்தவர் நீண்ட நேரமாக வரவில்லை. காரணம் அவர் தனது சொந்த விடயத்திற்காக வைத்தியசாலையில் தனது நேரத்தை செலவிட்டு விட்டார். அதனால் பிந்தி வந்த சக ஆசிரியை தன்னை விட்டு, விட்டு நான் வந்ததாகப் போட்டுக் கொடுத்துவிட்டார் போலும். அது அதிபருக்கு எத்தி வைக்கப்பட்டு விட்டது. இது தெரியாத நான் இரு வாரங்கள் கடந்த நிலையில் அதிபரிடம் சென்று குறுகிய விடுமுறை ஒன்று கேட்டேன். தருணம் பார்த்துக் கொண்டிருந்த ஓய்வு பெற்ற அதிபர் பிரபாகரன் சேர் என்னிடம் "ஆ.... அன்று நீங்கள் பிள்ளைகளைக் கூட்டிச் சென்று உடனே ஓடி வந்து விட்டீர்களாமே" என்று கேட்டாரே ஒரு கேள்வி. பல போட்டிகளுக்கு தனித்து நின்று மாணவர்களை அழைத்துச் செல்லும் என்னைப் பார்த்து அதிபர் இப்படிக் கேட்டு விட்டாரே என்று பதிலுக்கு இல்ல... சேர் நான் பதினொரு மணிக்குத் தான் வந்தேன். மாணவர்களிடம் கேட்டுப்பாருங்கள் என்றேன். உடனடியாக அதிபர் மௌனமானார். இந்த மௌனம் என்னிடம் இருந்த நியாயத்தைப் அவர் புரிந்து கொண்டார் என்பதை எனக்கு உணர்த்தியது. இது பற்றி ஓர் இரு நாட்கள் நித்திரையின்றித் தவித்தேன். இது ஒரு சில மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் விளைவு. இங்கு ஒரு உவமானத்தை நான் கண்டேன். அதாவது ஒரு பச்சை மரத்தில் குருவிச்சை வளர்வதுபோல. நம் மத்தியில் வாழ்கின்ற சில மனிதர்களின் மனங்களிலும் நச்சுக்காற்று ஊடுருவி விடுகின்றது. இந்த உலகத்தில் மனசாட்சியை மறந்த பாவங்கள் மலிந்து விட்டன.

இதனால் தான் இன்று உலகமே அமைதியின்றித் தவிக்கின்றது என்று எண்ணி நான் ஆதங்கப்பட்டேன் மேலும் உண்மைகள் ஒரு போதும் மரணிக்காது என்று எனக்குள்ளே சமாதானத்தை ஏற்படுத்தினேன்.

இவ்வாறே என் நாட்குறிப்பிலிருந்து மற்றுமொரு சம்பவம். இச் சம்பவம் இன்று வரை எனக்குள் மறக்க முடியாத ஒரு மன உளைச்சலாக உள்ளது. அதாவது 2009ம் ஆண்டு முதலாம் தவணைப் பரீட்சை ஆரம்பமானது. ஆசிரியர்களுக்கான பரீட்சைக் கடமைகள் போடப்பட்டிருந்தன. அன்றைய நாள் எனக்கு தரம் பதினொன்றுக்கு பின்னேரக் கடமை. நான் காலையிலே எனது தனிப்பட்ட வேலைகளுக்காகச் சென்று அதனை முடித்துவிட்டு பின்னேரக் கடமைக்குச் சென்றேன். நானும் சக ஆசிரியரும் பரீட்சை தொடங்கும் முன்னர் நாம் இருவரும் உணவு விடயமாகப் பேசிக் கொண்டிருந்த வேளையில் இப்போதைய அதிபரும் அப்போதைய பிரதி அதிபருமானவர் கலையரசன் சேர் அவர்கள் அங்கு வந்தார். என்னைப் பார்த்து "ரீச்சர் நீங்கள் தரம் 10க்குள்ள செல்லுங்கள் " என்று கூறினார். நானும் மீண்டும் படி இறங்கி வந்து என் கடமையை முடித்து விட்டு அடுத்த நாள் காலையில் பணிக்கு வந்தேன். அதிபர் பிரபாகரன் சேருடன் கலையரசன் சேர் காரசாரமாகக் கலந்துரையாடிக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையொப்பம் இட்ட நான் அவர்களைக் கடந்து வந்துவிட்டேன் அன்று மு.ப. 10 மணிக்கு ஆசிரியர்களின் ஓய்வறையில் இருந்த போது ஆசிரியர்களிடையே ஓர் சலசலப்பு என்னவென்று நான் காது கொடுத்தேன். டியூட்டியும் லீவும்'' என்னும் தலைப்பிற்குள் பிரதி அதிபருக்கும் சக ஆசிரியருக்குமிடையே இருந்த கருத்து முரண்பாடு. இதனால் மனமுடைந்த ஆசிரியை அழுதிருக்கிறார். இந்த விடயம் வீடு வரை சென்றுவிட்டது போலும் இது சில ஆசிரியர்கள் தூண்டிவிட்ட செயலோ என்று அறிவதற்காக அதிபர் பாதிக்கப்பட்ட ஆசிரியையிடம் விசாரணைகளைத் நடத்தியிருக்கின்றார். இந்த விடயம் எந்த வித சம்பந்தமும் இல்லாத என்மீது ஏன் விழுந்தது என அன்று இரவு நான் மிகவும் வேதனையடைந்தேன். அடுத்தநாள் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் கேட்டறிந்து கொண்டேன். எய்தவன் எங்கோ இருக்க என்மீது வீணான சந்தேகம் விழுந்ததோ என்று எண்ணிக் கவலைப்பட்டேன். இதற்கு இன்றுவரை விடை கிடைக்கவில்லை. இனியாவது கிடைக்குமா? காத்திருக்கின்றேன்.

இப்போது என் நாட்குறிப்பிலிருந்து மீண்டும் சில விடயங்கள் சேர்க்கப்பட்டன. 2019ம் ஆண்டு அதிபரின் ஓய்வும். அவரின் பிறந்த நாளும் கொண்டாடப்பட்டன. அப்போது அவர் வரிக்கு வரி கூறிய வார்த்தைகள் உவெஸ்லியின் மாணவர்களையும் பௌதீக வளங்களையும் ஆளணிகளையும் பார்த்து "நான் போய் வருகின்றேன்; விடை கொடுங்கள்'' என்பதாகும். ஒவ்வொரு வார்த்தைகளும் என் உள்ளத்தை சுக்கு நூறாக்கியது. ஏனெனில் அவரின் தலைமைத்துவப் பண்புகளும் தூய சிந்தனைகளும், நல் நோக்கங்களும் என்னைக் கவர்ந்தன.

ஒரு கால கட்டத்தில் ஒரு சுற்றிக்கை எனக்குக் கிடைத்தது. அவ்வறிக்கையில் அறுபது வயதுக்குப் பிறகு சில அதிகாரிகள் தேவைப்படும் போது சேவையில் இணைந்து கொள்ளலாம் என்றிருந்தது. அந்தச் சுற்றறிக்கையை அதிபரிடம் கொடுத்தேன் பிரபாகரன் சேர் நினைத்திருந்தால் அவரது பதவியை ஆறுமாதம் அல்லது ஒரு வருடம் நீடித்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. ஓய்வுக் காலம் முடிந்து பதவியில் பேராசை கொள்ளாது மற்றொருவரிடம் பொறுப்பை ஒப்படைத்த விதம் பாராட்டப்படக் கூடியது. இது ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்பாகும். 2018ம் ஆண்டு யூன் மாதம் எனது ஓய்வைச் சிறப்பான முறையில் வழி நடத்திப், பாராட்டி, விடையனுப்பி வைத்த பெரும் பங்கு ஓய்வு பெற்ற அதிபர் பிரபாகரன் சேர் அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. ஏனெனில் அவர் வளர்ந்த சூழல், வளர்க்கப்பட்டவிதம் அவரது கல்விப் புலம் சிறப்பானதாகும். ஒருவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதில் கண்ணியம்மிக்கவர். இந்தப் பாடசாலைச் சமூகம் அவருக்குக் காட்டும் அன்பும் ஆதரவும் பாராட்டப்பட வேண்டியதாகும். ஆகவே மீண்டும் பிரபாகரன் அதிபர் போன்ற ஒருவர் உதயமாவாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துவோம் வாரீர்

**திருமதி. வ. திருநாவுக்கரசு**
ஓய்வு பெற்ற ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

*இளமையில் கல்வியை சிலையில் எழுத்தாய்
கற்கை நெறியில் கருத்தூன்றித் தேறிய
உயர் நிலை கண்டே ஓய்வு அடைந்த
உத்தமனை உளமார வாழ்த்துவோம் வாரீர்!*

*கருணை உருவாய் நெஞ்சிடை நிறைந்தாய்
வேகம் விவேகம் விழிகளாய்க் கொண்ட
வித்தகக் கூடமென்ற முத்திரை பதித்த
நிமலனை நித்தமும் வாழ்த்துவோம் வாரீர்!*

*சேர்ந்தாரைச் சாரும் சிறப்பைக் கொண்டவர்
சிகரமாய் உவெஸ்லி உயர்தர கூடம்
சிறந்து விளங்க அரும்பணி ஆற்றிய
அண்ணலை போற்றி வாழ்த்துவோம் வாரீர்!*

*ஒழுக்க நெறியில் விழுப்பம் கொண்டே
மாணவர் வாழ்வில் மகிமை கண்டிட
மாண்புடன் உழைத்து வாகைசூடிய
மாமனிதர் புகழை வாழ்த்துவோம் வாரீர்!*

*வேதாகமம் உணர்ந்து அதன் வழி செல்வோன்
அறிவுரை கூறும் ஆற்றல் மிகுந்தோன்
ஆசிரியர் குழாத்தை அன்பால் அணைத்த
செம்மலை பல்லாண்டு வாழ்த்துவோம் வாரீர்!*

*பல்லாண்டுகள் இணைவிலிருந்து பிரவகிக்கும் நினைவுகளுடன்……*

# பரந்த அறிவுடையவர்



**திரு. இ. இராசரெத்தினம்**
ஓய்வு நிலை உடற்கல்வி விரிவுரையாளர்,
தேசிய கல்விக் கல்லூரி, மட்டக்களப்பு.

முப்பத்துநான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்று செல்லும் திரு. வடிவேல் பிரபாகரன் அதிபர் அவர்களைக் கௌரவித்து உவெஸ்லி உயர்தர பாடசாலைச் சமூகத்தினால் வெளியிடப்படும் பாராட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குமாறு வேண்டிக் கொண்டதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. வடிவேல் பிரபாகரன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை திருக்கோவில் குமார வித்தியாலயத்திலும், தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயத்திலும் கற்றுத்தேறினார். பின்னர் தனது உயர் கல்வியை மட் / மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும், மட் / சிவானந்தா தேசிய பாடசாலையிலும் முறையாகக் கற்று பல்கலைக்கழகத்திற்கு தேர்வாகி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்திருக்கின்றார்.

திரு. பிரபாகரன் அவர்கள் தன் தாய் தந்தையர் செய்த புண்ணியப் பலனால் 26 வது வயதினிலேயே தன் அறிவை நன்கு பயன்படுத்தும் வகையில் தன்னைத் தேடி வந்த ஆசிரியப் பணியைத் தெரிவு செய்ததுடன் சமூகத்திற்கு தேவையான பல மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் உருவாக்கிய மாணவர்களில் பலர் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் நிருவாக சேவை உத்தியோகத்தர்களாகவும், ஆசிரியர்களாகவும் இன்று கடமையாற்றுவதுடன் அவர்களின் அதிபரான திரு. பிரபாகரன் அவர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணுபவர்களாகவும் உள்ளார்கள்.


இதற்கான உண்மைக் காரணம் மாணவர்கள் பாடசாலையில் கல்வி கற்கும் காலங்களில் எல்லோரும் ஒரு வகையான மனப்பாங்குடன் வருவதில்லை. ஒவ்வொருவரும் வெவ்வேறான மன நிலையுடன் வருவார்கள். பிரபாகரன் அவர்களை இனங்கண்டு அவர்கள் வழியில் சென்று அவர்களை கல்வி கற்கக் கூடிய மனநிலைக்கு மாற்றியுள்ளார். அத்துடன் மாணவர்களின் திறமைக்கு ஏற்ற துறைகளைத் தெரிவு செய்தல் முக்கியமானதாகும் என்ற நோக்கில் மாணவர்களுக்கு இயலுமான துறையை தேர்வு செய்யச் செய்து அவர்கள் அத்துறையில் முன்னேற்றம் அடையக் காரணமானவர்.

2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி இயற்கை அழிவினால் மக்கள் பாடசாலை வளாகத்தினுள் அடைக்கலமானார்கள். அக்காலகட்டத்தில் அங்கு தங்கிய மாணவர்களுக்கு மாலை நேரத்திலும் பல பாடங்களுக்கும் பல வகுப்புக்களுக்கும் ஆசிரியர்களை ஒழுங்கு செய்து கற்பிக்க உதவியதுடன் அவரும் கற்பித்ததை அறிவேன்.

மேலும் கல்வியுடன் விளையாட்டுத் துறையை ஊக்குவித்துள்ளார். மாகாண மட்டப் போட்டியுடன் அகில இலங்கை போட்டிகளிலும் பங்கு பெறுவதற்கும் பல வகையிலும் ஊக்குவித்துள்ளார். மேலும் காரைதீவு மத்திய மகா வித்தியாலயத்துடன் சினேகபூர்வ Hard Ball கிரிக்கட் போட்டியை தொடங்கிவைத்தமை மிகச் சிறப்பான விடயமாகும்.

திரு. பிரபாகரன் ஆசிரியர் அவர்கள் 2004ம் ஆண்டு உப அதிபராகவும், 2009ம் ஆண்டு அதிபராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது S.L.E.A.S சித்தியடைந்தார். இவர் விரும்பியிருந்தால் அப் பதவியைப் பெற்று கல்விக் காரியாலயங்களுக்கு பணியாற்றச் சென்றிருக்க முடியும். ஆனால் அதை அவர் விரும்பவில்லை. அவர் திருக்கோவில், பட்டிருப்பு வலய காரியாலயங்களுக்கு பணியாற்ற செல்லுமாறு கேட்கப்பட்டார். அதை மறுத்து ஓய்வு பெறும்வரை இப்பாடசாலையிலேயே அதிபராக கடமையாற்றினார். இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தினை வேறு எவரிடமும் எதிர்பாக்க முடியாது. இந்த தீர்மானத்தினை அவர் எடுத்ததற்கு காரணம் உவெஸ்லியையே மனதார நேசித்தவர் என்பதையேயாகும்.

ஒரு கிராமத்தின் அல்லது நகரத்தில் இருக்கும் ஆலயங்களுக்கு ஆலய நிர்வாகத்தை கொண்டு நடாத்துவதற்கு பொருத்தமானவர்களைத்தான் தேர்தெடுப்பார்கள். அந்த வகையில் திரு. பிரபாகரன் அதிபர் அவர்கள் கல்முனை மெதடிஸ்த திருச்சபையில் நேர்மையுள்ள, உண்மை நிறைந்த ஒரு உக்கிராணக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டார். இது பெருமைக்குரிய விடயமாகும். இவற்றுடன் இலங்கை மெதடிஸ்த திருச் சபையின் உப தலைவராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது அவருக்கு மட்டுமுள்ள பெருமை அல்ல அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயாமாகும்.




இவற்றுடன் பல ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட மெதடிஸ்த சிறுமியர் இல்லம் பல குடும்பங்களின் வறுமையினால் கல்வி கற்க முடியாதவர்களை கல்வியாளர்களாக மாற்றி அவர்களின் பொருளாதார தரத்தை உயர்த்தியது மிகப் பெரிய பெருமைக்குரியது. அப்படிப்பட்ட இல்லத்திற்குரிய நிருவாக சபையில் பல ஆண்டுகள் அங்கம் வகித்து சேவையாற்றியுள்ளார் என்பது போற்றத்தக்க விடயமாகும். அதிபர் அவர்களின் குடும்பத்தினரை இறைவன் ஆசீரவதிக்கும்படி மனதார வேண்டிக் கொள்கின்றேன்.

உலகில் ஒருவர் செய்த சேவையின் காரணமாகத்தான் அவரை மரியாதைக்குரியவர் பெருமைக்குரியவர், புகழ்மிக்கவர் என அழைப்பர். அந்த வகையில் திரு. பிரபாகரன் அவர்கள் "தோன்றின் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்குக்கு மிகப் பொருத்தமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தாலும் உயரத்தாலும் உயர்ந்தவர் அதிபர் வ.பிரபாகரன்

**திரு. கதிர் - கருணாநிதி**
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
பாண்டிருப்பு.



கல்முனை உவெஸ்லி என்பது கலங்கரை விளக்கம் போன்றது. உவெஸ்லி என்றால் உலகம் அறிந்த ஒரு பாடசாலை ஆகும். அன்று தொட்டு இன்று வரை இப்பாடசாலையால் உருவாகியவர்கள் உலகமெங்கும் பரந்து காணப்படுகின்றார்கள். பலதுறை சார்ந்த அறிஞர்களையும், அதிகாரிகளையும், கல்வி மான்களையும் இப்பாடசாலை உருவாக்கி உள்ளது. சகல மதத்தவர்களையும் தன்னகத்தே இணைத்துக் கொண்டு பல புத்தி ஜீவிகளை உருவாக்கி நிற்கின்றது. இவ்வாறான கல்விச் சேவையால் சுடர் விடுகின்ற பாடசாலைகளில் உவெஸ்லியும் ஒன்றாகும். இப்பெருமைக்குரிய பாடசாலையில் கல்வி கற்பது, ஆசிரியர், அதிபராக பணிபுரிவது ஒரு மகத்தான வரப்பிரசாதமாகும்.

அந்த வகையில் திரு. வ. பிரபாகரன் அதிபருடைய காலத்திலே ஆசிரியனாக கடமை புரிந்தவர் என்ற வகையில் அவருடைய கடமையையும் திறமையையும் எண்ணிப் பார்க்கின்றேன். இவர் காலஞ்சென்ற பொன். முருகையா அவர்கள் அதிபராக இருந்த போது பிரதி அதிபராக கடமை ஆற்றினார். அக்காலத்தில் கல்வித்துறைசார் நடவடிக்கை களுக்கு இவரே பொறுப்பாக இருந்தார். இக்காலத்தில் கல்வி அபிவிருத்தி சிறப்பாக காணப்பட்டது. இவர் மாணவர் நலன் மீது அக்கறை காட்டுபவராகவும் ஆசிரியர்களோடு அன்பாக பேசி கடமையை சரிவர ஆற்றுவதற்கு உதவி புரிபவராகவும் இருந்தார்.

இவர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி என்பதால் விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பளித்தார். அத்தோடு ஏனைய துறை மாணவர்களையும் சிறந்த முறையில் கவனிப்பதில் இவர் தவறவில்லை. இக்காலத்திலே விசேட வகுப்புக்கள் கொடுத்து மாணவர்களை ஊக்கப்படுத்துவதோடு ஒவ்வொரு மாணவர் மீதும் கல்வி நடவடிக்கையின் போது கவனம் செலுத்துவார். இவை மட்டுமின்றி பாடசாலை சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்தி கல்வி வளர்ச்சிக்கும் பௌதீக வள வளர்ச்சிக்கும் உதவி புரிந்தவர். இக்காலத்தில் விஞ்ஞானப்பிரிவு உயர்தர மாணவர்கள் அதிக சித்திகளை பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதிபர் வ. பிரபாகரன் அவர்கள் ஆசிரியர்களோடு பழகுவதில் சிறந்த பண்பாளனாக காணப்பட்டார். அவர்களின் மனம் புண்படாத வகையில் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை சரிவர ஆற்ற வேண்டும் என்று எதிர்பார்த்தவராக இருந்தார்.

அத்தோடு தனக்கு கீழ் கடமையாற்றும் அனைவரையும் சமத்துவமாகக் கருதுகின்ற தன்மை இவரிடம் காணப்பட்டது. யாரிடமும் பக்கச்சார்பாக நடந்து கொள்ளமாட்டார்.

பாடசாலையிலே ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களுடைய வரையறைக்குள் நின்று மாறுபடக் கூடாது என்ற கோட்பாட்டை கொண்டவர். யாரிடம் எந்த பொறுப்பை ஒப்படைத்தால் அது சரிவர நடந்தேறும் என்ற அளவுகோலோடு செயற்பட்டவர்.


இவைகள் மட்டுமன்றி இன்னும் பல பண்புகள் காணப்பட்டதை நான் அறிவேன். கல்வி அபிவிருத்தி இவர் காலத்தில் சிறந்து விளங்கியது. நேரசூசி தயாரிப்பதில் வல்லமை பெற்றவராகவும் நிருவாக கட்டமைப்பை ஒழுங்கமைப்பதிலும் இவருடைய திறமையை நாம் காணலாம். மேலும் இவருடைய திறமைகளை பலவாறு அடுக்கிக்கொண்டே செல்லலாம். பாடசாலையிலே கற்கின்ற அதிகமான மாணவர்களின் பெயர்களை இவர் உச்சரிப்பது வியப்புக்குரிய விடயமாகும். மாணவர்களை அழைக்கின்ற போது அவர்களது பெயர்களை கூறி அழைப்பார். இது இவரிடம் காணப்பட்ட ஒரு விசேட பண்பாகும்.

இவரிடம் சிறந்த ஆளுமை காணப்பட்டது. தோற்றத்திற்கு ஏற்ப அறிவு ஆற்றலும் இவரிடம் இருந்தது. பிரபாகரன் சேர் என்றால் கண்டிப்பானவர் என்ற உணர்வு எல்லோரிடமும் காணப்பட்டது.

ஆனால், தங்கள் கடமைகளை சரிவரச் செய்பவர்களுடன் அன்பானவராக காணப்பட்டார். இவரது ஒவ்வொரு செயலும் உயிரோட்டம் உள்ளதாக இருக்கும் எதைச்செய்ய வேண்டுமோ அதை செவ்வனே செய்து முடிக்கும் திறன் மேலோங்கி இருந்தது. இவ்வாறான பல திறமைகள் பிரதி அதிபராக இருந்த போது நான் கண்டு கொண்டேன்.

இதன் பிறகு அதிபராக இப்பாடசாலையை பொறுப்பேற்றார். இக்காலத்தில் சிறிய காலமே ஆசிரியராக நான் பணியாற்றினேன். அதன் பிறகு மாற்றம் பெற்று நான் சென்றுவிட்டேன். இக்காலத்தில் இவருடைய முழுத்திறமைகளையும் என்னால் காண முடிந்தது. பாடசாலை கூடிய வளர்ச்சியை அடைந்தது என்றே கூற வேண்டும். மாணவர் சேர்வு, தேவையான பாடங்களுக்குரிய ஆசிரியர் நியமனம், பௌதீகவள அபிவிருத்தி போன்ற விடயங்களில் முன்னேற்றம் கண்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தான் இப்பாடசாலை எவ்வாறு வளர்ச்சி அடைய வேண்டுமென்று நினைத்தாரோ அதன்படி சமூகத்தையும் இணைத்துக்கொண்டு செயற்பட்டார் என்றே கூற வேண்டும். இவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தபோதும் அனைத்து மதங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து பாடசாலையை வழிநடத்தி சென்றவர். இவ்வாறான பல விடயங்களை நான் அப்பாடசாலையிலிருந்து கண்டு கொண்டேன்.

இவர் உவெஸ்லி என்ற பாடசாலைக்கு அதிபராக இருந்து மகுடம் சூட்டியவர். இவ்வாறான ஒருவர் இன்று ஓய்வு பெற்று செல்வது கல்விச் சமூகத்திற்கு ஓர் இழப்பாகவே கருதுகிறேன். இதன் முற்றுப்புள்ளி ஆகவும் தொடக்கப்புள்ளி ஆகவும் இன்று பாடசாலையை பொறுப்பேற்றுள்ள திரு. செ. கலையரசன் அதிபர் அவர்களை பற்றியும் கூற நினைக்கின்றேன். இவர் இளம் வட்டத்தைச் சார்ந்தவர், துடிப்பானவர், எதையும் துணிச்சலோடு செய்யக்கூடியவர், பாடசாலையின் முன்னேற்றத்தை பல்வேறு கோணங்களிலும் சிந்தித்து செயற்படக் கூடியவர். அத்தோடு இப்பாடசாலையிலே பிரதி அதிபராக இருந்தபடியால் பாடசாலை பற்றி புதிதாக அறிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை. இவர் சிரித்துக்கொண்டே கடமைகளை செய்து முடிப்பவர். யாருடைய மனமும் புண்படாதவாறு நடந்து கொள்வார். அன்பு கலந்த கண்டிப்போடு நிருவாகத்தை முன்னெடுத்து செல்லும் திறன் கொண்டவர் என்பதையும் நான் அறிவேன். எனவே செ. கலையரசன் அதிபர் அவர்கள் உவெஸ்லி என்ற பாடசாலைக்கு மகுடம் சூட்டுவார் என்ற நம்பிக்கையோடு விடை பெறுகின்றேன்.



# மாபெரும் சபைகளில் உம்மை அலங்கரிக்கும் பூமாலைகள்...



**திரு. அ. நிமால்**

ஆயிரமாயிரம் சாதனையாளர்களை உருவாக்கியே ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் உவெஸ்லித் தாய் சாட்சிப்படுத்தும் சாதனைச் சிகரத்தின் சந்தோச வேளையிது. மீண்டுமொரு முறை ஒட்டுமொத்த சமூகமும் உலகறியச் செய்து உச்சரிக்க வைத்திருக்கும் இத்தருணம் கல்லூரியின் கௌரவத்தை காத்து நிற்கும் காவலனே வருக! வருக!

பல அர்த்தங்கொள்ளும் உயரிய நாமம் கொண்டு தரணியின் மீதேறி தலை நிமிர்ந்து பறைசாற்றும் வ.பிரபாகரன் எனும் உவெஸ்லிக் கல்லூரியின் முதல்வர் தன் கல்விக் காலத்தின் மொத்த நீளத்தையும் கல்வித்துறையில் களப்பணியாற்றிவிட்டு கல்லூரித் தாய்க்கு விடியல் தந்த பகலவன் போன்று கல்விச் சமூகத்தின் ஞானச்சுடரேற்றிய தங்களை எம் சமூகம் சார்பாக மலர்தூவி வாழ்த்துகிறேன்.

கிழக்கு மண்ணின் பெருமையை அழகுற புகழ்பாடும் கல்முனை மாநகரின் வரலாற்றுத்தடங்களில் வானுயர்ந்து தன் பெயரையே அகிலமெங்கும் அலங்கரிக்கும் கல்முனை உவெஸ்லிக் கல்லூரியின் கடந்த தசாப்தங்களின் சாதனைச் சிகரம் அதிபர் வ.பிரபாகரன் அவர்களின் கல்லூரிப் பாதையினில் பயணித்த காலங்களில் உங்கள் நினைவுகள் என்றும் மனதில் நிலைத்திருக்கும். கல்லூரியில் விட்டிருக்க இன்று பிரியாவிடை பெறும் உங்கள் மகத்தான பணித்தடம் வழியே ஓர் சிறந்த சமுதாயத்திற்கு அறிவை அறிமுகம் செய்து வைத்த பெருமைமிகு கல்வித் தந்தையாக உங்களை காணுகின்றேன்.

நேருக்கு நேராக தன் கடமைகளால் எதிர்த்து கேள்வி எழுப்பியவர். ஆனாலும் யாராலும் எதிர்த்துப் பேச முடியாத நேர்மைக்குச் சொந்தக்காரர். தன் வார்த்தைகளை கண்ணாடிப் பாத்திரங்கள் போன்று கவனமாகக் கையாண்ட புன்சிரிப்புக் காரர் ஐயா நீங்கள்.

கலையாத இலக்கும் குலையாத ஆளுமையும் தோற்காத பலமும் கொண்டு பார்க்காத வெற்றி கண்டு பவனி வரும் பாவலர்களாக கல்லூரித்தாய் இன்று புன்னகைக்கிறாள். தன் பிள்ளை சாதித்து நிற்கும் சாதனைக் கைத்தட்டல் சத்தங்களுடன் இம் மாபெரும் சபையில் உம்மை அலங்கரிக்கும் பூமாலைகள் வீசும் வாசனையால் பல சிறப்பியல்புகள் கொண்ட ஓர் புத்தகம் தான் தாங்கள் என்பதை பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். நானும் கற்றிருக்கிறேன். தாங்கள் எடுத்து வைக்கும் எல்லா அடிகளுக்குப் பின்னும் ஓர் எச்சரிக்கை உணர்விருக்கும் என்பதையும் அதன் வெற்றிக்குப் பின்னாலுள்ள நேர்மையான சூத்திரங்களையும் பலர் கடைப்பிடிக்கும் பாத்திரங்களாக்கி வைத்த பெருமைக்குரியவர் நீங்களே என வரலாறு சொல்லும். அவ்வகையில் கடமையை நேர்மையாக செய்த உங்கள் பெயரைத் தவிர்த்துவிட்டு இப்பாடசாலையின் வளர்ச்சியை எழுதிவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் அதிபர் பிரபாகரன்.



**திருமதி. கே. அருள்நேசன்**
ஓய்வுநிலை ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

கல்முனை உவெஸ்லி என்றாலே அங்கு ஆசிரியராக செல்வதற்கே பயப்பட்ட காலமொன்றிருந்தது என்றால் அது பொ.முருகையா சேர் அவர்கள் அதிபராகவும் வ.பிரபாகரன் சேர் அவர்கள் பிரதி அதிபராகவும் இருந்த காலம். முன்னாள் அதிபர் வெங்கடாசலம் சேர் அவர்களுடன் நேரடியாக உரையாடி இருக்கின்றேன். இறுதியாக நான் சந்தித்த கண்டிப்புடன் கலந்த அன்பும் கண்ணியமும் கரிசனையுமுடைய ஒரே அதிபர் வடிவேல் பிரபாகரன் சேர் என்றால் அது மிகையாகாது. ஓய்வுபெற்றுச் செல்லும் அவரின் கீழ் ஆசிரியராகப் பணியாற்றிய காலங்களை நினைவு கூருவதுடன் அவரின் சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன். மேலும் அவருடைய ஓய்வு காலங்கள் சிறப்பாய் அமையவும் அவர் நோய் நொடியின்றி மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை தொடரவும், இறைவனை வேண்டுகின்றேன்.

இங்கு நான் கண்ட அதிபர் பிரபாகரன் சேர் அவர்கள், நான் முன்னர் கேள்விப்பட்ட பிரபாகரன் அவர்களை விட சற்று வித்தியாசமானவராகவே காணப்பட்டார். அதாவது அதிபர் பிரபாகரன் சேர் அவர்கள் மிகவும் கண்டிப்பானவர் என்பதைவிட கடமை உணர்வு கொண்டவர் என்றே குறிப்பிடவேண்டும். அவரின் கம்பீரமான தோற்றமும் கணீரென்ற குரலும் அவரின் நிருவாக ஆயுதங்களாகும். நேருக்கு நேராக தனது கருத்துக்களை ஆசிரியர்களுக்கோ ஏனைய ஆளணியினருக்கோ கூறிவிடும் பண்பும், நம்பிக்கையுடன் பொறுப்புக்களை ஒப்படைக்கும் ஞானமும், ஒழிவு மறைவின்றி அனைவரோடும் உறவாடும் இயல்பும் என்னை மிகவும் கவர்ந்த அவரின் பண்புக்கோலங்களாகும். அவருக்கு எப்போதும் பக்கபலமாக செயற்பட்ட தற்போதைய அதிபரும் முன்னாள் பிரதி அதிபருமான திரு. செ. கலையரசன் சேர் மற்றும் உதவி அதிபர் திரு. ச. தேவச்சந்திரா சேர் ஆகியோரையும் பாராட்டுவது எனது கடமையாகும். அவர்களுடைய சேவை மாணவ சமூதாயத்தின் நலனுக்காக தொடர்ந்தும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


கல்முனை இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்தில் 1988.08.06 ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்றேன். நான் 2009.12.09 ஆம் திகதி இப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று கடமையை பொறுப்பேற்றுக் கொண்டேன். அப்போது எனக்கு ஒரு பயம் ஏற்பட்டது. அதிபர் மிகவும் கண்டிப்பானவர் என்பதால் அவருடன் பேசுவதில் மிகவும் அவதானம் தேவை என உணர்ந்து கொண்டேன். ''கடமையைச் செய், பலனை எதிர்பாராதே'' என்னும் கீதா உபதேசத்தை மனதில் பதித்தவளாக அங்கு அடியெடுத்து வைத்தேன். ஏற்கனவே தரம்-05 வகுப்பில் பணியாற்றிய அனுபவம் இப்பாடசாலையிலும் அதே வகுப்பினை பொறுப்பேற்க எவ்வித தயக்கமும் எனக்கிருக்கவில்லை.

கடந்த 9 வருடங்களாக இப்பாடசாலையின் தரம் - 05 மாணவர்களின் அடைவு மட்ட உயர்ச்சிக்காக என்னால் முடிந்தவரை உழைத்திருக்கின்றேன் எனக் கூறுவதில் பெருமிதமடைகின்றேன். இக் காலப்பகுதியில் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கினர்.

எனது கணவர் டபிள்யு. ஈ. அருள்நேசன் அவர்கள் இதே பாடசாலையில் சுமார் 17 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றிய காலங்களில் பலமுறை பாடசாலை நிகழ்வுகளுக்கு அவரோடு சென்றிருக்கின்றேன். குறிப்பாக வருட இறுதியில் நடைபெறும் ''ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல்'', ''கிறிஸ்து ஜெயந்தி விழா'' என்பன அதிபர் பிரபாகரன் சேர் அவர்களின் தலைமையில் வருடா வருடம் இடம்பெறும் நிகழ்வுகளாகும். இவைகளில் நாங்கள் குடும்பமாக பங்குபற்றிய இனிமையான நினைவுகள் என் மனக்கண் முன் இன்றும் நிழலாடுகின்றது.

அவரின் சேவைக் காலத்திலேயே அதாவது 2013 ஆம் வருடத்தில் ஆசிரியர்களுக்கான ''குரு பிரதீபா பிரபா'' தேசிய மட்டவிருதை என்னால் பெற்றுக்கொள்ள முடிந்ததென்றால் அதற்கு பக்கபலமாக இருந்தவர் அதிபர் பிரபாகரன் சேர் அவர்களே. நான் பொதுவாக மாணவர் நலன்கருதி லீவு எடுப்பதில்லை. இதன் பொருட்டு இவரின் கையாலேயே 2015 ஆம் ''வருடத்தில் குறைவாக லீவு பெற்ற ஆசிரியருக்கான விருதையும்'' பெற்றுக் கொண்டதையும் நினைத்து பூரிப்படைகின்றேன்.

இவ்வாறாக, ஆசிரியர், மாணவர் மற்றும் சமூக நலன்களுக்காக உழைத்து மக்கள் மனங்களில் இடம்பிடித்த அதிபர் பிரபாகரன் சேர் அவர்களின் அர்ப்பணிப்பான சேவை உவெஸ்லியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.




# நீங்காத நினைவுகள்

**திரு. எஸ்.அருள்குமரன்**
ஆசிரியர்,
கொத்தடி நமசிவாய வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

நான் 2007ம் ஆண்டு உவெஸ்லி உயர்தர பாடசாலையில் ஆசிரியராக கடமை ஏற்றவேளை பிரதி அதிபராகயிருந்து 2009ல் அதிபராகி 2019ல் ஓய்வு பெற்றுச் சென்ற திரு. வ. பிரபாகரன் அவர்களைப் பற்றி நான் அவரோடு பழகிய சில வருடங்களின் அடிப்படையில் எனது சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

பிரபாகரன் சேர் அதிபராகி சில நாட்களில் என்னை அழைத்து நீங்கள் எப்போது ஆசிரியர் விடுதிக்கு வரப்போகிறீர்கள் என்று கேட்டார். இந்த கேள்விக்கு வருகிறோம் என்று கூற முடிந்ததே தவிர அதை மறுக்க முடியவில்லை. எனவே, வருகிறோம் என்று கூறியதற்கு இணங்க நானும் எனது ஆசிரிய நண்பர் குமரனும் வந்து விடுதியிலே குடியேறினோம். நாங்கள் வந்ததன் விளைவாக விடுதி வளாகம் புதுபொலிவுபெற்றது. பாடசாலைக் காவல் இரட்டிப்பானது பாடசாலையும் விடுதியும் அதிபரின் இன்னொரு வீடாக மாறியது. இக்காலகட்டத்தில் பல ஓய்வு பெற்ற உவெஸ்லி அசிரியர்களைச் சந்திக்கின்ற வேளை "முன்பு ஒரு காலம் சிறப்பாக இயங்கிய விடுதி மறுபடியும் அதிபரால் மறுமலர்ச்சி அடைந்திருக்கிறது" என்று கூறி சந்தோசப்பட்டு பாராட்டினார்கள். அதை விட இன்னொரு செய்தி கூறுவார்கள்.

"முன்பு ஒரு காலம் விடுதியிலே அருளானந்தம் - இப்பொழுது அருள்குமரன்" என்று இவை தவிர அதிபரின் விருப்பத்திற்கு இணங்க விடுதியிலே ஆண் மாணவர்கள் உள்வாங்கப்பட்டு கல்வி கற்பதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட தூர இடங்களில் இருந்து வருகின்ற அநேக மாணவர்கள் இதில் பயன் அடைந்தார்கள். இவ்வாறு பாடசாலையும் விடுதியுமாக அதிபரும் நாங்களும் பணியாற்றினோம். ஓய்வு நேரங்களில் பல ஆசிரியர்கள் எங்களுடன் விடுதியிலே பொழுதைக் கழித்தனர். இதற்கு அதிபரும் விதிவிலக்கல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிடும் பணிகள் முடிந்ததும்

ஆசிரியர் நாம் என்பதை மறந்து

சுவைமிகு உணவுகள் சமைப்போம் இங்கு

நண்டு அடித்து

புறா பிடித்து

கோழி குழம்பு வைத்து

கொத்து ரொட்டி கொத்தி

கொள்ளைப் பிரியத்துடன்

உண்டு மகிழ்ந்தோம்.

அதிபரின் அனுமதியுடன் சில வீடுகளுக்கும் அனுப்பி வைத்தோம். இவற்றுக்கெல்லாம் அனுமதி தந்தவர் எங்கள் அதிபர்.

மற்றும் தமிழ் இலக்கியங்களிலே நாம் கண்ட வில்லுக்கு விஜயன், சொல்லுக்கு அரிச்சந்திரன் போல் அதிபரால் வழங்கப்பட்ட பொருத்தமான சில நியமனங்கள் பற்றி கூறுவது எனது கடமை ஆகும் அந்த வகையில்

| | | |
|---|---|---|
| உடைக்கு (சீருடை) | - | உதயன் |
| உணவுக்கு | - | தவஜீவன் |
| கணக்காளருக்கு | - | விஜயகுமார் |
| கணிதத்திற்கு | - | வில்வன் |
| சிலம்பாட்டத்திற்கு | - | சிறிதக்ஷன் |
| இலவச புத்தகத்திற்கு | - | சிறி |
| ஓடியோ வீடியோவிற்கு | - | யசார் |
| உதை பந்திற்கு | - | ஜலீல் |
| உறுக்குவதற்கு | - | கலை (கலையரசன்) |
| உத்தரவிற்கு | - | தலை (பிரபாகரன்) |
| O/L ற்கு | - | ருத்திரமூர்த்தி |
| A/L ற்கு | - | ராஜேந்திரன் |
| பாட்டுக்கு | - | தெய்வீகன் |
| கூத்துக்கு | - | விமல் |
| விடுதிக்கு | - | நான் |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இவ்வாறு சேவை முதிர்ச்சியை மட்டும் நோக்காது ஒருவரது செயல் திறனை அறிந்து காரியங்களை ஒப்படைப்பதும் கண்காணிப்போடு அவர்களை சுயாதீனமாக செயற்படவிடுவதும் ஒவ்வொரு சிறு காரியங்களும் நேர்த்தியாக அமையவேண்டுமென எதிர்பார்ப்பதும் அவரது பண்பாகும். மற்றும் அதிபர் அவர்கள் தனது சொந்தக் காரியங்களை விட பாடசாலைக் காரியங்களுக்கு முன்னுரிமை வழங்கி கால நேரம் பாராமல் பணியாற்றியதோடு அவ்வாறே ஒத்துழைக்கக் கூடிய சிறந்த முகாமைத்துவ அணி ஒன்றையும் உருவாக்கி செயற்படுத்தினார். இவ் அணி அதிபர் பிரபாகரன் படையணி என்பது மிகவும் பொருத்தமானதாகும்.

எட்ட நின்று நோக்குவோர்க்கு அணுக முடியாத ஒரு நபராகவும், இறுக்கமான ஒரு நபராகவும் தோன்றும் அதிபர் அவர்களை நெருங்கி நின்று பணியாற்றுபவர்களாலேயே அவரது உண்மைச் சொரூபத்தினை அறிய முடியும். இரக்க சிந்தையும், தாராள குணமும், கண்டிப்பும், அதைவிட மேலான அன்பும் நகைச்சுவை உணர்வும் உண்மைத் தன்மையும் அவர் தம் அணிகலன்களாகும்.

சேவைக்காலத்திலே பல்வேறு பணிகளை ஆற்றியுள்ள அவரது திறமையும், அர்ப்பணிப்பும் ஆச்சரியத்தைத்தருகிறது. கடமையை ஒழுங்காக செய்பவரை அவர் மிகவும் மதிப்பார். நியாயமான கருத்துக்களை எவர் முன் வைத்தாலும் தயக்கமின்றி ஏற்றுக்கொள்வார். அவரது மகத்தான பணிக்கு மதிப்பளித்து பல தடவைகள் சிறந்த அதிபருக்கான "குரு பிரதீபா பிரபா" தேசிய விருதுகள் வழங்கப்பட்டிருந்தன.

இத்தகைய பெருந்தகையுடன் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமையை நான் செய்த பெரும் பேறு என எண்ணுகின்றேன். அவர் மிகுந்த தேக ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் நிறைவான மகிழ்ச்சியுடனும் தனது குடும்பத்துடன் வாழ இறைவன் அருள்புரிவாராக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நான் கண்ட அதிபர்

**திருமதி. மந்தாகினி ரங்கராஜன்**
ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

நிமிர்ந்த நன்நடை, நேர் கொண்ட பார்வை, வெண்ணிற மேற்சட்டை, நீல நிறக்காற்சட்டை இப்படி தன் தோற்றத்தில் மாத்திரமல்ல தன் பண்பான பேச்சாலும், சிறந்த நன் நடத்தையாலும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் சமூகத்தையும் கவர்ந்தவர் தான் எம் அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்கள்.

உவெஸ்லி உயர்தர பாடசாலையில் ஆசிரியராக, பிரதி அதிபராக கடமையாற்றி இப்பாடசாலையின் உயர்ச்சிக்காக முழு மூச்சாகவிருந்து உழைத்த எமது அதிபர் இன்று ஓய்வு பெற்றுச் சென்றிருக்கின்றார். இவர் தனது சேவை காலத்தில் ஆசிரியர்களை மிகவும் கண்ணியமாகவும், மரியாதையாகவும் நடத்தியவர். ஒவ்வொரு ஆசிரியரதும் மாணவரதும் பின்புலம் அறிந்து அவர்கள் நலனில் அக்கறையாகவும் அவர்களுக்கு பக்க பலமாகவும் இருந்தவர். ஒரு ஆசிரியருக்கு சுகயீனம் என்றாலோ அல்லது அவரது குடும்பத்தார் எவருக்காவது சுகயீனம் என்றாலோ தான் மட்டுமல்லாது தனது துணைவியாரையும் அழைத்துச் சென்று ஆறுதல் கூறுவார். ஒரு ஆசிரியரின் குடும்பத்தில் மரணம் ஏற்பட்டால் முதலாவது ஆளாக வந்து நிற்பவர் எங்கள் அதிபர் தான். இவ்வாறாக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் ஒரு நல்ல உறவைப் பேணிய மாமனிதர்.

மாணவர்கள் பற்றி நாம் ஏதாவது முறையீட்டினைக் கொண்டு சென்றால் அம்மாணவர் பற்றிய சகல தகவல்களையும் எமக்கு அவர் கூறுவார். அந்த அளவுக்கு மாணவர்கள் ஒவ்வொருவரினதும் குடும்பநிலையை அறிந்து வைத்திருந்தார்.

கண்டிப்பான ஒரு அதிபராக இருந்தாலும் ஆசிரியர்களுக்கான கூட்டங்களில் இறுக்கமான சூழ் நிலைகளைத் தளர்த்துவதற்காக தனது நகைச்சுவைப் பேச்சால் கலகலப்பாக்குவார். பாடசாலை தவிர்ந்த ஏனைய இடங்களில் சந்திக்கும் வேளைகளில் ஒரு நல்ல உறவினராக, நண்பராக நடந்து கொள்வார்.

ஒரு ஆசிரியத் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்து அவர்களால் வளர்க்கப்பட்டதால் இத்தகைய அழகான பண்புகள் இவரிடத்தில் குடிகொண்டிருந்தன. இவரது காலத்தில் தான் இப்பாடசாலையில் பழைய மாணவர்களுக்கென ஒரு தனி இடம் கிடைத்தது. உவெஸ்லியின் வரலாற்றில் பழைய மாணவர்களின் உதவியுடன் பாடசாலைக்கு நிறைய வளங்களைப் பெற்றுக் கொடுத்த ஒரு அதிபர் இவராகத்தான் இருக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு அதிபருக்கு வேண்டிய அத்தனை குணங்களும் இவரிடத்தில் காணப்பட்டன. எந்த விடயமாக இருந்தாலும் அதனை ஆசிரியர்களுக்கு தெளிவாக விளங்கப்படுத்துவதுடன் ஆசிரியர்களைச் சரியாக வழி நடத்தும் பண்பை இவரிடம் நான் கண்டு வியந்திருக்கின்றேன்.

பாடசாலை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமல்லாமல் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஊக்குவித்தார். பாடல்களை இயற்றி ஆசிரியர்களை மேடையேற்றிப் பாடவைத்த பெருமையும் எங்கள் அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்களையே சாரும். தான் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு நாடகக் கலைஞர் என்பதை ஆசிரியர்களுடன் சேர்ந்து நாடகங்கள் நடித்ததன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆசிரியர்களிடம் இருக்கும் திறன்களை இனங்கண்டு அவர்கள் அதனை வெளிக்கொணர்வதற்கு உறுதுணையாக இருந்தார். நான் இன்று இப்பாடசாலையில் ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருப்பதற்கும் எங்கள் அதிபர் தான் காரணம். அந்த வாய்பை எனக்குத் தந்தவர் அவர்தான். எங்களுடைய குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட நன்மை தீமைகளிலெல்லாம் தம்பதிகளாக கலந்து கொண்டு எங்களுக்கு உறுதுணையாக இருந்தவர் அவர்.

தனது சேவையின் இறுதி நாள் வரை இப்பாடசாலைக்காகவே உழைத்த இவர் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்சென்றாலும் அவரது ஓய்வு காலத்தில் அவர் தனது மனைவியுடனும் தனது மகனுடனும் சிறப்பாக நீடூழி காலம் வாழ இறைவன் ஆசீரவதிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# A Towering Figure in Managerial Firmament

**' GOD will show the path of life'**




Utmost for the Highest
**Mrs. R. M. Mariyaraj Vaz**
(Teacher In-charge of Special Unit)

"Some are born great, some achieve greatness, and some have greatness thrust upon". William Shakespeare. But the greatness of former principal Mr. V. Prapakaran lives among 'WESLYITE' in his inborn qualities of heart and mind.

Two priceless principles, frugality and dome ration adores and governs his daily life. He has a flair for judging character, and it is his custom to hand picks his men. He is a man of wide learning and varied talents and possessed of a personality that compelled attention – teacher, churchman and devoted worker. His lucid comedies at staff meetings, sense of humor and his command of Tamil speech was something I admired and strove to copy. He is a veritable store house of rich and interesting anecdotes, apt and homely illustrations of sparking wit.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

The **SPECIAL UNIT or DEAF LINK** was founded by Rev. SJ. Gnanaraja and then Late Mr. Pon Murugiah and the past foremost Mr. V. Prapakaran rendered noble service to the element. I noticed that the chief theme of my previous main of this component is equalization of opportunities and its guiding philosophy for the achievement of full participation of individuals with disabilities in all aspects of social and economic life. He always emphasis that sympathy alone not enough, it is necessary to secure equal occasions and identical rights for people with incapacities.

He allows children of special unit to go to the stage to show case their incomparable talents despite of their natural physical infirmities. A **blind** can see with his/her heart while their sharp senses of hearing and touch empower them to experience and enjoy music.

A deaf is very concentrated on senses of touch and vibrations that he/ she performer exactly the rhythm which is an outstanding gift Mr. V. Prapakaran, who worked methodicaiiy and tirelessly to keep the special unit in efficient order and the classroom in attractive. He is a man whose life touched me at several points and I am the richer and lucky for having come in contact with him.

**I wish him happiness and long-life.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலத்தின் நியதி

**திருமதி. சுமதினி விஸ்வநாதன்**
ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

---

*உவெஸ்லியின் பூரண உயர்ச்சிக்காய்*
*பத்தண்டுகள் கடமை உணர்வுள்ள*
*அதிபராய் தன்னையே முயற்சித்து அர்ப்பணித்த*
*தன்னலமற்ற கலங்கரை விளக்கு.*
*இன்று கார்மேகமாய் கலைந்ததேனோ*
*திசை மாறும் உங்கள் ஒளியில்*
*தினம் தோறும் எங்கள் உள்ளம்*
*மனம் விட்டுத் தவிக்கின்றதே*
*உங்கள் காலத்தின் நியதியை*
*விரட்ட முடியாமல்*

*நல்ல வல்ல அதிபரென*
*சொல்லித் தினமும் நாங்கள்*
*பள்ளியின் புகழைப்பாட தடை தந்து*
*வழிவிட்டுப் போன தென்னவோ*
*நிலை மாறிய பாதையிலே !*
*எங்கள் கல்லூரி முதல்வரின்*
*காலத்தின் நியதியைத் தவிர்க்க முடியாமல் !*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக அறிவை ஊட்டி மாணவர்களை
கடமை உணர்வோடு தன்பக்கம் கவர்ந்து
பாடங்களை செப்பித்த உன்னத பணியோ !
ஒரு தனித்தவப் பணி !
தத்துவப் பேச்சுக்களால் அனைவரையும்
செவிமடுக்க வைக்கும் தன்மையோ !
ஒரு வல்ல சட்டத்தரணி.
முகாமைத்துவச் செயற்பாடுகளை முன் கூட்டியே
அறிந்து முன் நோக்கி நகர்த்தும்
கல்லூரியின் முகாமையாளர் இவரன்றோ !
பணியிலே ஏற்றம் காண,
பிரதி அதிபராக கடமை ஆற்றிய
நேரம் தனில் உயர்ச்சி மிக்க அதிபராக,
பொறுப்பை ஏற்று ஆசியை நேசித்தவராக,

குரு பிரதிபா பிரபாவை ஆறு தடவைகள்
பெற்று சாதனைகளை மேலோங்க வைத்த
சிறந்த கல்வி நிருவாகியான
எங்கள் வடிவேல் பிரபாகரன் ஐயாவை
துரத்தி வந்த காலத்தின் நியதியை
விரட்டமுடியாமல் போனதென்னவோ !

பௌதிக வளங்களையும், சுற்றுப்புறச் சூழலையும்,
பாதுகாக்கும் ஒரு பொக்கிஷ வாதி !
பாட விதானங்களைப் பகிர்ந்தளிக்கும்
ஒரு யதார்த்த வாதி
பல்கலைக்கழக அனுமதி ஏட்டினிலே
போட்டியாய் நின்றிடும் போட்டியாளர்,
இணைப்பாட விதானங்களுக்கு
ஊக்கம் கொடுக்கும் ஊக்குவிப்பாளர்.
கல்லூரி நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கும்
கதாநாயகன்
தூரத்துப் பார்வையிலும் தனது தோற்றத்தை
வெளிப்படுத்தும் உயர்ந்த மனிதர்.
இவரை பின் தொடர்ந்த
காலத்தின் நியதியை விரட்ட முடியவில்லை

இதுதான் காலத்தின் நியதியோ.
அறுபதை யாராலும் தவிர்க்க முடியாது.
விரட்டவும் முடியாது.
அறுபதைத் தாண்டியும் உங்கள் பயணம் செல்கின்றது
வேறொரு திசையின் பாதை மாறி
போதனைகளும் பலம் பெறுகின்றது
கல்லூரி வரலாற்றில் உங்கள் பெயர்
என்றும் பொறிக்கப்படும் பொன் எழுத்துக்களால்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆளுமையின் நாமம்

**திரு. கி. விஜயகுமார்**
ஆசிரியர்,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

*"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்"*

அன்று 2009ம் ஆண்டு காலை ஆசிரியர் குழுக்கூட்டத்திற்கான முகாந்தரம். அதில் வழமையான நிசப்தம். இதன்போது அமரர். பொன். முருகையா சேர் அவர்களின் ஓய்வுபெறுதல் செய்தியும் திரு.வடிவேல் பிரபாகரன் சேர் அவர்களிடம் அதிபர் பொறுப்பு கையளிப்பும் இடம்பெற்றது. பிரபாகரன் சேர் அவர்கள் பொறுப்பேற்று குறுகிய காலத்தில் துரதிஸ்டவசமாக வலயமட்ட ஆசிரியர் இடமாற்றம் நடைபெற்றது. அதன் காரணமாக 25இற்கு மேற்பட்ட சிரேஷ்ட ஆசிரியர்கள் பாடசாலையை விட்டகல, வேண்டியநிலை. இது பாடசாலை இயக்கச் செயற்பாட்டில் சற்று தாக்கம் செலுத்திய போதிலும் கனிஷ்ட ஆசிரியர்களின் துணையுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை நேர்த்தியாக செயற்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு உச்ச விளைதிறனைப் பெறுதல் என்ற முகாமைத்துவ விதியை அடிப்படையாகக் கொண்டு நீண்ட கால, குறுங்கால திட்டமிடலை மேற்கொண்டார். தீர்மானமெடுத்தலில் பாடசாலைச் சமூகத்துடன் ஜனநாயகத் தன்மையுடன் கூடிய பங்குபற்றுதலையும், வலயக்கல்வி அலுவலகத்துடன் ஆரோக்கியமான தொடர்பாடலையும் மேற்கொண்டார். பௌதீக, மனிதவள அபிவிருத்தியை இரு பரிமாணங்களாக சமாந்தரமாக கொண்டு சென்றார். இதன் வெளிப்பாடாக நல்ல தம்பி மண்டபம்,Trimmer Hall, Gabrial Leese Hall, Aesthetic Hall என்பவை புனரமைக்கப்பட்டதுடன், இரு வாயிற் கதவுகள் (Gateways), விளையாட்டு மைதானத்தை மண் இட்டு நிரப்புதல், விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் அரங்கு (Pavilion), விளையாட்டு மைதானத்தில் சுற்றுவேலி, Netball Court, Scout Room, காலை ஆராதனை மேடையின் கூரை (Stage-Roof), விசேட தேவையுடையோர் பிரிவுக்கான கட்டடம் போன்றவை பல்வேறு அரசு, அரசுசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் தாபிக்கப்பட்டன.

இணைப் பாடவிதான செயற்பாட்டினை மேம்படுத்தும் நோக்குடன் கடினப்பந்து துடுப்பாட்டம் (Hardball Team), கராட்டி போன்ற விளையாட்டுக்கள் அறிமுகம் செய்யப்பட்டதுடன் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியுடன் பெருஞ்சமர் (Big Match) நடாத்தியதும், இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளை வருடாந்தம் நடாத்தியமையும் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

கலைத்திட்ட மேம்பாட்டின் பொருட்டு மாலைநேர வகுப்புக்கள், மாதிரி வினாத்தாள்கள், தொடருறு மாதிரி பரீட்சைகள், PPA இன் இணை அனுசரணையுடன் பிரத்தியேக வகுப்புக்கள் போன்றவற்றினூடாக வைத்தியம், பொறியியல், சட்டம் மற்றும் பல்துறைசார் பட்டதாரிகளை வெளியீடு செய்தமைக்காக பல்வேறு தந்திரோபாயத்திட்டங்களை செயற்படுத்தினார்.

இப்பாடசாலை கல்முனை நகரத்தின் மத்தியில் அமைந்திருந்த போதிலும் மத்திய, குறைந்த வருமான மட்டத்தைக் கொண்ட குடும்பப் பிற்புலத்தையுடைய கணிசமான மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இச்சவாலை ஏற்று பாடசாலைச் சமூகத்தின் கூடுதல் ஒத்துழைப்புடன் சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்திய ஒருவராகவும், மாணவர்கள் விடயத்தில் இறுக்கமும் மெத்தனமும் கலந்த இரட்டைத் தன்மையினூடாக பிள்ளை நேயத்தின் காவலராகவும், கல்முனை வலயத்தில் குரு பிரதீபா பிரபா விருதை அதிக தடவை பெற்ற அதிபராகவும் போற்றப்படுகின்றார்.

ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பெயர்களை சுட்டி அழைப்பதிலும், பாடசாலையில் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களை மட்டும் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பைப் பேணியதுடன் தான் ஏலவே தீர்மானித்த விடயத்தை ஆசிரியர் குழாத்திற்கு தெரிவித்து பிரதிபலிப்பின்றி ஒப்புதல் பெறுவதிலும், கீழிருந்து மேல்நோக்கிய ஆலோசனை பெறுவதிலும் சாணக்கியம் பொதிந்தவர். ஆசிரியர் கூட்டங்களின் போது சில வேளைகளில் காட்டமாக நடந்து கொண்டாலும் ஈற்றில் தமக்குரிய பாணியில் நகைச்சுவையுடன் அவர்களை ஆசுவாசப்படுத்துவதிலும் சமயோசிதம் மிக்கவர். இவற்றிற்கு மேலாக கனதியான சொல் வாண்மை மிக்க சிறந்த மேடைப்பேச்சாளர். கடினமான சூழ்நிலைகளில் சலனமற்றவராகவும் பதட்டப்படாதவராகவும் தீர்மானமெடுத்தலில் சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்ததுடன் நிதி முகாமைத்துவத்தை மிகவும் நேர்மையாகவும் (True and fair view) செயற்பட்டு மேற்பார்வை செய்தமையை கோடிட்டுக்காட்ட முடியும். நல்லொழுக்கம், ஆளுமை, நேர்மை, ஆன்மிகம் போன்ற நற்பண்புகள் பொருந்தியவரின் நிர்வாகத்தின் கீழ் அதிக தடவை பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளராக பணிபுரிந்தமையை பெருமையாகக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் பதவிக்கு மேலதிகமாக அவருடைய உயிரியல் பாடத்தை மாணவர்களுக்கு கற்பித்தமை விசேட அம்சமாகும். பாடசாலை நேரசூசி தயாரிக்கும் பணியும் அவரையேசாரும். ஆசிரியர் குழாத்துடன் பாடசாலைக்கு வெளியே சினேக பூர்வமான நட்புறவைப் பேணியதுடன் அவர்களின் நலன்களை பேணுவதிலும் நாட்டம் கொண்டவர். Hostel Night,Get Together, A/L Day, O/L day, Wesley Walk, Farewell போன்ற நிகழ்வுகளை நேர முகாமைத்துவத்துடன் நடாத்துவதிலும், புதுமைகளை புகுத்துவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

EUSL இன் முதல் விஞ்ஞானப்பட்டதாரிகளில் ஒருவர், SLPS-I, SLEAS போன்ற உயர் பரீட்சைகளில் உச்சம் பெற்றவராகவும், கடிதங்களை தட்டச்சி செய்து வழங்கினால் மேலெழுந்த வாரியாகவே சொற்பிழை, பொருட்பிழை காண்பதில் அகரமுதலியாகவும் திகழ்ந்தார். பிரதி மாதந்தோறும் முதல் வாரத்தில் பாடக்குறிப்பை பார்வையிடுவதற்காக Attendance Register இற்கு முன்னால் அமர்ந்திருப்பதும் பின்னர் பாடக்குறிப்பு சமர்ப்பிக்காதவர்களுக்கு தகவல்கள் அனுப்பி நாசுக்காக எழுதுவிப்பதில் வல்லவர். மட்டுமன்றி, வகுப்பறைச்சுற்று வரும் போது ஆசிரியர்கள் ஆலமரத்தின் மறைவாக ஒதுங்குவதும், சுவாரசியமான சம்பாசணையின் போது இடைநடுவே சொல்லாமல் நழுவிக்கொள்வதும் பக்கத்தில் நின்றால் ஏதோ ஒரு வேலையை உருவாக்கித் தந்துவிடுவார் என்று கூறுவதும், காலையில் அருகில் நின்றால் காலை ஆராதனைக்காக நற்சிந்தனை கூற மேடையேற்றிவிடுவார் என்று பயப்படுவதும், விருந்தோம்பல் நிகழ்வுகளின் போது எழுமாறாக பாடவைப்பது, சிற்றுரையாற்ற வைத்தல் போன்ற செயற்பாடுகளினூடாக எல்லோரையும் மகிழ்விப்பார்.

திரு.வ.பிரபாகரன் சேர் அவர்கள் உவெஸ்லியில் தனக்கென்று ஒரு வரலாற்றுப் பதிவினை இட்டு சேவையினின்று ஒய்வு பெற்றாலும், அவரின் சேவை இப்பிராந்திய சமூக அபிவிருத்தியின்பால் மேலும் தொடர்ந்திடவும் ஆரோக்கியமாக வாழ்ந்திடவும் இறைவனை வேண்டிநிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு தலைமைத்துவம் விட்டுச் செல்கின்ற சுவடுகள்



**திருமதி. ஐனூன் மர்ஸூதா**

ஆசிரியை,

உவெஸ்லி உயர்தர பாடசாலை.

காலத்தால் அழியாத செல்வம் கல்வி, அந்தக் கல்வியைப் போதித்து வளர்த்து பல்வேறு வழிகளில் பயனடைந்த, பயனடைந்து கொண்டிருக்கின்ற ஏராளமானோர்களுக்கு மத்தியில் கல்வி என்ற முழுக் கோட்பாட்டுக்குள் தன்னை அர்ப்பணித்து அதுவாகவே மாறி நிற்கும் ஒரு சிறந்த தலைமைத்துவம் திரு. வ.பிரபாகரன் சேர் என்று கூறினால் அது மிகையல்ல.

33 வருட கல்விப் பணியில் அவருடைய வினையாற்றல் மிக்க செயற்பாடுகள் காரணமாக பாடசாலை பல சாதனைகளை எட்டியது. ஏழு வருடங்கள் ஆசிரியராகவும், பதினாறு வருடங்கள் பிரதி அதிபராகவும் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் இரண்டறக் கலந்து சேவையாற்றிய அவருடைய மாண்பு இன்று பலராலும் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது.

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியாகப் பட்டம் பெற்றதுடன், பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகளையும் பூர்த்தி செய்துள்ளார். இலங்கை கல்வி நிருவாக சேவைக்கான பரீட்சையில் தேர்ச்சிடையந்தவர். பலமுறை வலயக் கல்வி அலுவலகத்தில் பொறுப்பான பதவிக்கு அழைக்கப்பட்ட போதிலும் பாடசாலையையும் பாடசாலைச் செயற்பாடுகளையும் தனது இரு கண்களாக்கிக் கொண்டவரால் அப்பதவிகளை ஏற்க முடியவில்லை.

பாடசாலை தொடர்பான அனைத்து விடயங்களையும் முற்றுமுணர்ந்தவர். அங்குள்ள பௌதீக, தொழிநுட்ப ரீதியான, உயிரியல், உளவியல் ரீதியான எல்லாப் விடயங்களைப் பற்றியும் தெளிவான புரிதல்களை தன்னகத்தில் வைத்திருந்து, தேவைக்கேற்ப சரியான நேரத்தில் அவற்றைத் தானும் தவறின்றி அவற்றை பிரயோகிப்பதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் விளக்கி பொருத்தமான தீர்வுகளைக் காண்பதில் வல்லவராக இருந்தார்.

ஒரு சிறந்த நிருவாகிக்குரிய அனைத்து அம்சங்களையும் வரமாகப் பெற்று, இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார். அவரிடமிருந்த அதீத ஞாபக சக்தி, நிருவாகம் சார்ந்த பணிகளை சுலபமாக முகாமை செய்வதற்குத் துணையாக நின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதில் அவருடைய திட்டமிடும் ஆற்றல் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தது. விடயங்களை சரியான கோணத்தில் நுணுகி ஆராய்ந்து முறையாகத் திட்டமிட்டு முன்னோக்கிச் செலுத்துவதில் முன்மாதிரியாக இருந்தார். நேர முகாமைத்துவத்திற்கு இவரென்ன ஏகபோக உரிமையாளரா? என்று நினைக்குமளவுக்கு ஒவ்வொரு கூட்டத்தையும் ஒரு நிமிடம் முந்தாமலும் பிந்தாமலும் ஆரம்பித்து முடிப்பார். சிறந்த பண்பான சொல்லாடல் கொண்டவர். எப்போதும் வெளிப்படைத் தன்மையுடன் பேசுபவர். அதிருப்தியான விடயங்களையும், உறைப்பாக இருந்தாலும் எல்லை மீறாமல் நாகரீகமாக எடுத்துரைத்தார். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நிலைமைக் கேற்றவாறும், பிரச்சினைகளுக்கேற்றவாறும் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கினார். இக்கட்டான நேரங்களிலெல்லாம் சமயோசிதமாகப் பேசி அதிலிருந்து மீண்டுவரச் செய்தார்.

"யதார்த்தவாதி வெகுசன விரோதி" என்பர். அதிபர் பிரபாகரன் சேரும் ஒரு யதார்த்தவாதிதான். ஆனால் வெகுசன விரோதி அல்லர். மாறாக வெகுசனத்தின் நண்பராக இருக்கின்றார். எப்படி? தன்னுடைய மென்மையான, அன்பான, ஆதரவான பேச்சால் எல்லோருடைய மனங்களையும் வென்றிருந்தார். இன, மத பேதங்களுக்கு அப்பால் நின்று, ஒரு நிலைச் சிந்தனையாளராகவும், சகிப்புத் தன்மையுடையவராகவும் செயற்பட்டது, இவர் மீது கூடுதல் மரியாதையையும் அளவு கடந்த அபிமானத்தையும் ஏற்படுத்தியது. எந்த ஒரு இறுக்கமான சூழ்நிலையிலும் நகைச்சுவைத் துளிகளைத் தெளித்து இதயங்களை இலேசாக்கி விடுவார். தனிமனித உரிமைகளுக்கு மதிப்பளித்து ஒவ்வொருவரினுடைய திறமைகளை வெளிக்கொணரச் செய்வதில் சாமர்த்தியசாலியாக விளங்கினார். பாடசாலை நிதி விடயங்களைக் கையாள்வதற்கு ஒரு வலுவான கட்டமைப்பை உருவாக்கி நேர்மையாகவும், கறைபடியாத கரங்களோடும் அவர் இத்தனை வருடங்களில் பயணித்திருப்பது அவருடைய பரிசுத்தமான உள்ளத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

அதிபர் அவர்கள், மாணவர்களின் கலை, கலாசார விருத்திக்கு பெரும்களம் அமைத்துக் கொடுத்ததனால் பலதரப்பட்ட நிகழ்வுகளில் உவெஸ்லி மாணவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். விளையாட்டுத் துறைக்கு அவர் வழங்கிய ஊக்கமும் ஒத்துழைப்பும் பாடசாலையையும், இப் பிராந்திய கல்வி வலயத்தையும் புகழடையச் செய்திருக்கின்றது.

ஒரு பணிவுள்ள கிறிஸ்தவராக ஆலயப் பணிகளிலும், ஆழமான அமைதிப் பிரசங்கங்களிலும் தன்னை விருப்புடன் ஈடுபடுத்திக் கொள்வதோடு மரண வீடுகளில் ஆறுதலளிக்கும், சமூகச் செயற்பாடுகளிலும் ஆலோசனை வழிகாட்டலும், சமூகத்தோடு ஒன்றித்துப் பயணிப்பதும் அவருக்கு மிகவும் உவப்பான விடயங்கள்.

அதிபர் வ. பிரபாகரன் சேர் அவர்களுடைய ஓய்வு, உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு ஈடு செய்ய முடியாததொன்றாக இருப்பதுடன், அவருடைய ஆளுமை, ஆற்றல்கள் முன்மாதிரிகள், அனுபவங்கள், பண்பாடுகள் என்பன எதிர்காலத்திலும் உவெஸ்லியின் உயர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்தப்படும் என உவெஸ்லி பாடசாலைச் சமூகம் எதிர்பார்த்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்தில் நிறைந்தவர் . . .

**திருமதி. பவானி மனோகரன்**
ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

உயர்ந்து வளர்ந்த தென்னை போல்
உங்கள் சிந்தனையும் செயற்பாடுகளும்
இதுவரை பயன்தராது போனது இல்லை
உவெஸ்லித் தாயின் வளாகத்தில்

பதினான்கு வருடங்கள் நான் உங்களில் கண்ட
புதுமைகள் ஏராளம், ஏராளம் - அதில்
அறு சுவையும் கலந்திருந்து ஆனாலும்
இனிப்பான பல விடயங்கள் என்னுள் உங்களை உயர்த்தி வைக்கிறது.

உவெஸ்லியின் உயர்ந்து, பரந்த ஆலமரம் விருட்சம் போல்
உங்கள் ஆளுமை கொண்டு
உவெஸ்லியின் தரத்தை
உலகமறிய உயர்த்தினீர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காரணம் கூறி விடுமுறை பெற்று
மறுதினம் பாடசாலையில் எதிர் கொள்ளும் போது
அது பற்றி சுகதுக்கம் விசாரித்து மனம் நெகிழ
கருத்து கூறும் உங்கள் செயல் பாராட்டத்தக்கது.

உயர்வு தாழ்வு இன்றி அனைவரையும்
ஒன்றாக வழி நடத்திய பண்பாளன் நீங்கள்
ஆசிரியர்களின் குறை தனை நகைச் சுவை துணுக்குகளால்
கழைந்தெறியும் பக்குவம் தனிச் சிறப்பு

பல்வேறு பத்திரங்களில் கையொப்பம் பெறும் போது
கவனமாக வாசித்து பார்த்து கொடுத்தாலும்
எனது கண்ணுக்கு தெரியாத பிழைகளை சுட்டிக்காட்டி
புன் முறுவலுடன் கையொப்பம் இடும் ஆசான் நீங்கள்

சபையோரை அடக்கி தன் பேச்சாற்றலால்
சஞ்சலங்களின்றி சபையோரை கவர்ந்து
சொல்ல வந்த விடயத்தை கதையுடன் ஆரம்பித்து
சொல்லி முடிக்கும் சொல் வேந்தர் நீங்கள் அதில் நானும் அடிமையே

பக்குவமாய் பலதையும் கூறி
பாசமாய் பலதையும் செய்வித்து
பள்ளியின் நுழை வாயிலில் பலரையும் கரம் கோர்த்து
கண்ணியமாய் சேவை செய்த கருத்தில் நிறைந்த அதிபர் நீங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னிகரற்ற ஆளுமை

**திருமதி. கயல்விழி ஆனந்தி ஹென்றி அமல்ராஜ்**
ஓய்வுபெற்ற ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

உயர்ந்த உருவமுடைய பிரபாகரன் சேர் அவர்களை எல்லோராலும் அண்ணார்ந்து பார்க்க மட்டுமே முடியும். அவரால் தொட முடிந்த சில உயரங்களை இன்றுவரை இன்னொருவரால் நெருங்க முடியவில்லை. இவ் ஆளுமை மிக்கவரே எங்கள் அதிபர்.

உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு கிடைத்த அதிபர்களில் மறைந்த திரு யோகம் வேலுப்பிள்ளை அவர்களுக்கு அடுத்ததாக குறிப்பிடத்தக்கவர் திரு. பிரபாகரன் சேர் எனலாம்.

இவர் பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும், பௌதீக வள மேம்பாட்டிலும் திட்டமிட்டு செயலாற்றி தனது அர்ப்பணிப்பான நடவடிக்கைகளினால் மாணவர்களை மட்டுமன்றி ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என எல்லா தரப்பினரையும் கவர்ந்த ஆளுமைமிக்க ஒரு அதிபராகத் திகழ்ந்தார்.

இவர் ஆசிரியர்களின் தவறுகளை குறித்த ஆசிரியர்கள் மட்டுமே புரியக்கூடிய விதத்தில் நகைச்சுவையாக வெளிப்படுத்தி, அதனை அவர்கள் உணர்ந்து திருத்தக்கூடிய விதத்தில் ஒரு தனிப்பாணி வகுத்து வைத்திருந்தார். தொப்பி அளவானவர்கள் போட்டுக் கொள்ளுங்கள் என்ற வகையில் ஒவ்வொரு குறைபாடுகளையும் பக்குவமாக மனம் நோகாத வகையில் அவர்கள் தாமாகத் திருத்திக் கொள்ளும் வகையில் வெளிப்படுத்தும் தன்னிகரற்ற ஆளுமையை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ் அதிபர் அவர்கள் தனது காலப்பகுதியில் இவரது அயராத முயற்சியினாலும் பழைய மாணவர்களுடன் கொண்டிருந்த தோழமையான பண்பினாலும் இரண்டு பிரமாண்டமான பாடசாலை நுழைவாயிலை எமக்குப் பெற்றுத் தந்தவர். எமது பாடசாலை புதுப் பொலிவுடன் திகழ்வதற்கு இவை கம்பீரமாக வரவேற்கிறன.

விஷேட கல்விப்பிரிவு, மாணவர்களின் கற்றல், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தல் போன்ற வசதிகளை வழங்க ஏனைய பாடசாலைகள் முன்வராத நிலையில், மெதடிஸ்த திருச்சபையினூடாக சில உதவிகளை பெற்று, எங்கள் பாடசாலையில் அம் மாணவர்களுக்கான பகுதியை அமைத்து தந்த பெருமை இவரையே சாரும். இவர் பைபிள் படிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அதிலுள்ள நல்ல போதனைகளான எளிமை, கருணை, பிறரை நேசித்தல், மற்றவர்களுக்கு உதவுதல் போன்ற மனித நேயத்தை கொண்டவர்..

இவர் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தோழராகவும் இடைநிலை பிரிவு மாணவர்களுக்குச் சக்கரவர்த்தியாகவும் உயர்தரப் பிரிவு மாணவர்களுக்குச் சர்வாதிகாரியாகவும் இருந்தவர். இவ்வாறு மாணவர்களின் வயதுப் பிரிவுகளுக்கு ஏற்ற அணுகுமுறையைக் கொண்டிருந்தார். ஆரம்பப் பிரிவு மாணவர்களுடன் நெருங்கிப் பழகி அன்பாக அவர்களைப் படிக்கத் தூண்டுவதும் உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கு அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்கி அவர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரிப்பதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை அவர்கள் பெறுவதற்கு உதவியவர்.

அவரின் அபரிதமான அறிவுத்திறன், கடினமான விடயங்களைக் கூட எளிமையாகப் புரிந்து கொள்ளும் திறன், மாணவர்களுடன் பண்போடு பழகும் விதம் என்பன இவரின் சிறப்பியல்புகளாகும்.

அறிஞர் அண்ணா - சேவை, பணி என்பவற்றை சமையல் செய்ய உதவும் பாத்திரங்களோடு ஒப்பிட்டு எழுதியிருந்தார்.

“அடுப்பு எரிந்து கொண்டிருக்கிறது. சமையலுக்குத் தேவையான காய்கறிகளை அப்படியே அடுப்பில் போட்டு வேக வைக்க முடியுமா? முடியாது, அப்படிச் செய்தால் எல்லாக் காய்கறிகளும் கருகிப் போய்விடும். அவை வேகவேண்டுமானால் நெருப்பின் வெப்பமும் தேவை. ஆனால், அந்த வெப்பம் மூலம் அவை கருகிப்போகாதபடி போதுமான அளவில், சரியான முறையில் அளிக்கப்பட வேண்டும். இதற்காகத்தான் ஒரு பாத்திரத்தை பயன்படுத்துகின்றோம். அடுப்பின் நேரடி வெப்பத்தை பாத்திரம் ஏற்றுக் கொள்கிறது. பின்னர் அதிலிருந்து தேவையான அளவு வெப்பத்தை மட்டும் காய் கறிகளுக்குக் கொடுக்கின்றது. இதன் மூலம் அவை வெந்து சுவையான பண்டமாகி விடுகிறது.

எமது அதிபரும் இதே போல் மாணவர்களின் மேன்மை, பாடசாலையின் நலன், அதிலேற்படும் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு வெப்பத்தை ஏற்கும் பாத்திரம் போல பாடசாலை எனும் சமையல் காரியம் ஒழுங்காக, சீராக, மேன்மையாக, சரிவர நிகழ்வதற்கு அக்கறையுடன் நேர காலம் பாராமல் பணியாற்றிய செயல்வீரனாக விளங்கினார்.

இவ்வாறாக தனது கல்விப்பணியினை பூர்த்தி செய்த அதிபரை வாழ்த்தி அவர் மென்மேலும் பல வழிகளிலும் பலருக்கு முன்மாதிரியாக அமைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்லூரி வரலாற்றின் காத்திரமான அதிபர்



**திருமதி. சுதர்சினி மதியழகன்**
ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை,
கல்முனை.

ஓய்வு பெற்றுச் செல்லும்
உவெஸ்லியின் அதிபர்
உழைப்பை அறிவோம்
உயர் குணத்தை அறிவோம் - கல்லூரியை
தாய் போல் காத்த விதத்தை அறிவோம்.

நெட்டை உருவம் நிமிர்ந்த நடை
நினைக்க இனிக்கும் பேச்சாற்றல் - வெள்ளை
சட்டை அணியும் பழக்கமுள்ள
சாதாரண மனிதனவர்
திட்டம் தீட்டும் திறன் அறிவோம்
திருப்தியான சேவைதர - அவர்
பட்ட பாட்டை நாமறிவோம்

.

சிறப்பான நிர்வாகம் - புதுச்
சிந்தனைகள் நிறைந்த தன்மை
பொறுப்பான அதிபர் என்றால்
பொறுமைமிகு தலைவனென்றால்
மறுப்பாரோ யாரும் இங்கு
மதியுள்ளோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி வளாகத்தில் - அவர்
கால்படாத இடமுமுண்டோ அவர்
சொல்லுக்கு மறு வார்த்தை யாரும்
சொன்னதுண்டோ
வில்லுக்கு விஜயனென்றால் - எங்கள்
வெஸ்லிக்கு பிரபாகரன்

ஆலம் விருட்சங்கள் - நிதம்
அழகாக போடுகின்ற
கோல நிழல்களின்
குளிர்மை ஒத்த குணமவர்க்கு
பாலங்கள் போல
பண்பான உறவமைத்து - சேவைக்
காலங்கள் முழுதும்
கண்ணியமாய் சேவை செய்தார்

மாணவர் முன்னேற்றம் ஒன்றே அவர்
மனதினில் பதிந்ததனால்
வீணாக காலம் தள்ள - அவர்
விளைந்ததில்லை ஒருபோதும்
தானாக உணர்ந்து
தக்க பணி செய்து ஓய்வு பெற்றார்

நுழைவாயிற் கோபுரங்கள்
நுட்பமாக அமைப்பதற்கு
பழைய மாணவர்களைப்
பக்கபலம் சேர்த்தவர்
விலைமதிப்பு மிக்க கட்டடங்கள்
வெயில் போக்க
நிழல் மரங்கள் - என
நிலைபெறச் செய்தவர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எல்லோரின் மனதிலும் - அழியாத
இடம்பிடித்து
கல்லூரி வரலாற்றின்
காவியத் தலைவனானார்
வாழ்க அவர் புகழ் என்றும்.

மாணவர்கள் பெயரறிவார் - அவர் மனதறிவார்
கோணங்கி வேலை பார்ப்பவரைக்
குறிப்பறிவார் - அவர்
குடும்ப நிலையறிவார்
ஆனபல அறிவுரைகள்
அத்தனையும் வழங்கிடுவார்

கலையும் விளையாட்டு
கற்பனைத் திறன்களும்
குலையாத சிந்தனையும்
குழு வேலைகளில் மனப்பாங்கும்
விலைபோகாத் தனித்துவமும் - கொண்டு
வீறுநடை போட்ட எங்கள்
விருப்புமிக்க அதிபரவர்.

கல்லூரி சிறக்க - நற்
காரியங்கள் செய்வித்து
எல்லோரின் மனதிலும் - அழியாத
இடம்பிடித்து
கல்லூரி வரலாற்றின்
காவியத் தலைவனானார்
வாழ்க அவர் புகழ் என்றும்.




ஓவியம் உ.K.நவமணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிபரும் நானும்

**திரு. யோ. தவஜீவன்**
ஆசிரியர்,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

நான் பிரபாகரன் அதிபரை முதன்முதலில் சந்தித்தது தம்பிலுவில் மகா வித்தயாலயத்தில் அவர் ஆசிரியராகவும் நான் மாணவனாகவும் இருந்தபோது. தொண்ணூறாம் ஆண்டு எமது பகுதியில் யுத்தம் வெடித்தவேளையில் எங்கள் குடும்பமும் திருக்கோவில் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்திருந்தது. அப்போது நான் தரம் - 06 இல் படித்துக்கொண்டிருந்தேன். அதேவேளை எனது தந்தைக்கு விநாயகபுரத்தில் ஆசிரியராக கடமையாற்ற இடமாற்றம் கிடைத்தது. இதனால் அப்பிரதேசத்திலேயே சிலவருடங்கள் தங்கியிருக்க வேண்டியிருந்ததால் கல்வியை தொடர்வதற்காக தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் நான் சேர்க்கப்பட்டேன். அப்பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர்களுக்குள் உயர்ந்த உருவமும் கம்பீரமான குரலும் நேர்கொண்ட பார்வையுமுடைய ஒரு ஆசிரியராக பிரபாகரன் அவர்களைக் கண்டேன்.

மீண்டும் எனது தந்தைக்கு இடமாற்றம் கிடைத்த காரணத்தினால் கல்முனைக்குத் திரும்பியிருந்தோம். எனது பள்ளிப் பருவம் நிறைவடைந்த பின்னர் எனக்கு 2006ஆம் ஆண்டு உவெஸ்லியில் ஆசிரிய நியமனம் கிடைத்து இப்பாடசாலைக்கு வந்தபோது அதே பரிச்சயமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த உருவமும் கம்பீரமான குரலும் நேர்கொண்ட பார்வையுமுடைய பிரபாகரன் சேர் பிரதி அதிபராக வலம் வந்து கொண்டிருந்தார். பெரிய பாடசாலை இப்போதைக்கு வேண்டாம் என எண்ணிக்கொண்டிருந்த எனக்கு அவரைப் பிரதி அதிபராகப் பார்த்ததும் பெரும் ஆறுதலாக இருந்தது.

இரண்டாயிரத்து ஆறு தொடக்கம் அவரது ஓய்வுவரை அவரின் ஆக்கபூர்வமான சிந்தனை, செயற்பாடுகள் அனைத்திலும் பங்குபற்றிய ஆசிரியர்களுள் நானும் ஒருவன் என்ற வகையில் மாணவர்களின் நலன்களுக்காகவும் உவெஸ்லியின் மேன்மைக்காகவும் அவர் அயராது உழைத்ததை அவருக்கு அருகில் இருந்தபடியே உணர்ந்திருக்கின்றேன், பல தடவைகளில் வியந்திருக்கின்றேன். குறிப்பாக பாடசாலையின் ஒவ்வொரு விடயத்திலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று முனைந்தவர் அவர்.

இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு கட்டட நிர்மாணத் தொழில்நுட்பம் எனும் பாடத்தினை ஆரம்பிக்க அனுமதி கோரியபோது அப்போது அதிபராகவிருந்த திரு. பொன். முருகையா சேர் அவர்களிடம் சென்று அதற்கான அனுமதியைப் பெற்றுத்தந்தவர்.

இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டில் மீண்டும் ஒரு சுனாமி அடித்ததுபோல் துயரச் சம்பவம் ஒன்று எமது பாடசாலைக்கு ஏற்பட்டிருந்தது. ஒரே தடவையில் இருபத்தெட்டு சிரேஸ்ட ஆசிரியர்கள் எமது பாடசாலையிலிருந்து வெவ்வேறு வலயங்களுக்கு இடமாற்றப்பட்டனர். அந்த இக்கட்டான நேரத்திலும் கூட சிறு தயக்கமுமின்றி பாடசாலையில் அப்போதிருந்த ஆசிரியர்களைக் கொண்டு குறைநிரப்பு வேலைகளை கவனமாகத் திட்டமிட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரத்தி பத்தாம் ஆண்டில், வரலாற்றில் மிக நீண்ட இடைவெளியின் பின்னர் கடின பந்து, கிரிக்கட்டை ஆரம்பிக்க பூரண ஒத்துழைப்பை பெற்றுத்தந்து மாணவர்களை பல்வேறு மட்டங்களுக்கும் கொண்டு செல்ல வழிப்படுத்திய அதிபரின் பங்களிப்புகள் மறக்கமுடியாதவையாகும். இதன் தொடர்ச்சியாக எமது பிரதேசத்தில் முதல் முறையாக பாடசாலைகளுக்கு இடையிலான Big Match எனும் கிரிகட் போட்டியினை எமது பாடசாலைக்கும், காரைதீவு விபுலானந்தர் வித்தியாலயத்திற்கும் இடையில் "டெலிகொம்" நிறுவனத்தின் அனுசரணையுடன் வெகுவிமரிசையாக இடம் பெறுவதற்கு அடி கோலியவர்.




இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டில் தொழிற்கல்வி வளர்ச்சியால் பாடசாலைகளில் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் எமது பாடசாலையிலும் தொழிநுட்ப பிரிவினை ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்துக்கள் வெளிபட்ட வேளையில், பல போராட்டங்களுக்கு மத்தியில் மாகாண கல்வி திணைக்களத்திலிருந்து அனுமதியினைப் பெற்று, எமது பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டு சிறப்பாக இத்துறையினை முன்னெடுத்தவர். இதன் மூலம் பல மாணவர்களைப் பல்கலைக் கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கொண்டு சேர்த்த பெருமை இவரைச் சாரும்.

இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு அவா் ஓய்வு பெற்றுச் சென்றபோது ஆசிரியா்கள், மாணவா்கள் என கல்லூரியே மிகுந்த கவலையிலிருந்தது. ஒவ்வொரு மனிதனின் உள வளா்ச்சி என்பது சூழலிலிருந்தே நிகழ்கின்றது என உளவியல் கூறுகின்றது. அவ்வகையில் என்னை அறியாமலேயே அவரது செயற்பாடுகளை நானும் பின்பற்றி வந்திருக்கின்றேன். அவரது ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் எங்களைச் செதுக்கியிருக்கின்றன. எனக்குள் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் வளா்த்திருக்கின்றன. நானும் அவரது காலடிக்குள் சுழன்று கடமையாற்றவில்லையாயின் பத்தோடு பதினொன்றாக ஏதோ ஒரு மூலைக்குள் காணாமல் போயிருப்பேன். ஆசிரிய சேவையில் என்றும் அவா்தான் எனக்குத் துரோணா். அந்த நன்றி உணா்வுடன் அவரை மனதார வாழ்த்துகின்றேன்.



# சிந்தித்து செயலாற்றும் அதிபர் . . .



**திருமதி. நளினாதேவி ஜீவானந்தம்**
ஆசிரியை

பிரபாகரன் அதிபர் என்றாலே ஆளுமை கொண்டவர்.
ஆளுமை என்பதற்கு இலக்கணம் சொன்னவர்
ஆசிரியர் குழாத்துக்கு முன்னிலை வகித்தவர்.
முறையான கலைத்திட்டம் வகுத்துக் கொடுத்தவர்.

கொடுத்தவர்க்கு எங்கும் குறையேதுமில்லை.
அன்பைக் கொடுத்து அன்பை வாங்கும் அருள்நேசர்
உங்களை மறவாத அன்பர்கள் மறைவாக பேசிடும்
வாழ்த்துரைகேட்டு மலைத்து நின்றேன்

நான் உங்களிடம் படிப்பினைகள் கற்றேன்
கற்றவற்றை இரைமீட்டு மனப்பெட்கத்துள் வைத்தேன்
வைத்தவற்றை முத்து மாலையாகக் கோர்த்தேன்

சிங்க நடைபோட்டு பள்ளி வளாகம் முழுதும்
நீங்கள் பவனிவரும் போது
பாடசாலையே நிமிர்ந்து நிற்கும்
உங்கள் நிருவாகத் திறமையினால்
உயர்ந்து விட்ட பலரும்
உங்களை பாராட்டி பேசிகின்றார்.

நீங்கள் பேசுகின்ற வார்த்தைகளோ
பொருள் பொதிந்த பொக்கிசங்கள்
சிந்தித்து செயலாற்றும் அதிபர்
உங்களைப் போல பார்த்ததுண்டோ
வாழ்க உங்கள் புகழ்



# சிறந்த முகாமையாளர்

**திரு. க.ருத்திரமூர்த்தி**
ஆசிரியர்,
உ வெஸ்லி உயர்தர பாடசாலை.

உலக நாடுகளிலே பரப்பளவிலும் உள்ளடக்கத்திலும் விரிவடைந்து செல்லும் கல்வி மனித வாழ்வில் சகல துறைகளிலும் ஊடுருவி நிற்கிறது. இத்தகைய கல்வியின் முழுப்பயன்பாடுகளையும் மாணவர்கள் பெற்று உயர் அடைவுகளையும், ஒழுக்க சீலங்களையும் உடைய நற்பிரஜைகளாக மிளிர வேண்டுமாயின் பாடசாலை முழு சமூகத்தையுமே தளமாக கொண்டு இயங்க வேண்டியுள்ளது. பாடசாலையின் இத்தகைய இயங்கு நிலையை சிறப்பாகக் ஒழுங்கமைப்பதில் தீர்க்கதரிசனமான தலைமைத்துவம் பாடசாலைக்கு அவசியமாகிறது. அந்த வகையில் உ வெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபராக கடமையாற்றி தீர்க்கதரிசனமாக செயற்பட்டவர் திரு. பிரபாகரன் அவர்கள்.

இவர் பாடசாலையை வளர்த்தெடுப்பதில் பல்வகை திறமை கொண்ட, கல்வியுலகம் பற்றிய ஆழ்ந்த அறிவுள்ள, நேரிய மனப்பாங்குள்ள ஒரு முகாமையாளராகவும், உலகளாவிய கருத்துத் தெளிவும், தூரநோக்கும், நிறுவனம் தொடர்பான விளக்கமும். செயற்றிறனும் கொண்ட புதிய சிந்தனையோடும், புதிய உத்தியோடும் பாடசாலை நிர்வாகத்தை முன் கொண்டு சென்ற அதிபராக திகழ்ந்தார்.

ஒரு அதிபரிடம் இருக்கவேண்டிய பண்புகளான உண்மைத் தன்மை, நம்பகத் தன்மை, தூரநோக்கான சிந்தனை, தொடர்பாடல் திறன், ஏனையோர்களுடன் சுமுகமான உறவு, சமூகத்தில் செல்வாக்கு, நெகிழ்வுத் தன்மை, குழுவாகச் சேர்ந்து வேலை செய்யும் பண்பு, பயிற்சியளித்தலும் விருத்தி செய்தலுமான தன்மை, தீர்மானிக்கும் ஆற்றல், திட்டமிடல், கலந்துரையாடல் என்பவற்றைக் கொண்ட அனுபவமும் வாண்மைவிருத்தியும் கொண்ட அதிபாராக செயற்பட்டார்.


பாடசாலையை இலகுவாக முகாமைத்துவம் செய்ய உள்ளும், வெளியும் நடைபெறும் விழாக்கள், விருந்து உபசாரங்கள், விளையாட்டு நிகழ்வுகள், கலை விழாக்கள், சோக நிகழ்வுகள் ஆகியவற்றில் தலைமை வகிப்பதிலும், பங்குபற்றுவதிலும் முதலாளாக செயற்பட்டு தலைமைத்துவத்துக்கான பண்பை வெளிக்கொணர்ந்தார்.

ஆளிடைத் தொடர்பின் கீழ் மாணவர், ஆசிரியர், பெற்றோர், சமூகத்தொடர்பு போன்ற ஒவ்வொன்றிற்கும் இடைவினைத் தொடர்பு உற்றவராக காணப்பட்டதுடன், அதிபர் சங்க தலைவராகவும் செயற்பட்டார். சக அதிபர்களுக்கு அறிவுரை வழங்குவதிலும், ஆலோசனை வழங்குவதிலும் விற்பன்னராக செயல் பட்டு அதிபர்களுக்கு அதிபராக திகழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை

சூழலை இடைவிடாது கண்காணிப்பதிலும் தகவல் சாதனங்கள் மூலமாகவும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மூலமாகவும் தகவல்களைப் பெற்று சிறப்பான தொடர்பாடல் மூலம் ஆசிரியருக்கு உரியநேரத்தில் தகவல்களை கொடுப்பதிலும், தகவல்களை சரியாக பெற்று காரியாலயத்தில் ஒப்படைப்பதிலும் முதல் அதிபராக செயல் பட்டவர்.

மாணவர்களிடையே உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதில் சிறந்து விளங்கினார். பிரச்சினைகளை வகைப்படுத்தி அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒன்றின் பின் ஒன்றாக அணுகி முடிவுக்கு வருதல். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தனது சக்தி, நேரம் என்பவற்றை முடிந்தவரை செலவிட்டு மாணவர்களை விசாரணைக்கு உட்படுத்தி, அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டால் அவற்றை தீர்ப்பதில் கவனம் செலுத்தி, மாணவர்களிடையே உண்மைத் தன்மையை வெளிக்கொணர்வதில் வல்லவராகச் செயற்பட்டார். பிரச்சினையை கையாளும் வகையில் சூழ்நிலை அழுத்தங்களையும் கவனத்தில் கொண்டு நிலைமாறும் சூழ்நிலைக்கு ஏற்ப பிரச்சினைகளை தீர்ப்பதிலும், பாடசாலையில் நடைபெறும் அபிவிருத்தி, கற்றல் கற்பித்தல், மற்றும் பாடசாலையில் நடைபெறும் பிரச்சினைகள் என்பவற்றில் சிலர் அழுத்தங்களையும், இடையூறுகளையும் விளைவித்தபோதும் தன் திறமையான முகாமைத்துவம் மூலம் அதை சரி செய்வதில் வல்லவராக இருந்தார். நாளைய பிரச்சினையை இனங்கண்டு இன்றே சிந்தித்து, முடிவெடுக்கும் ஒரு அதிபராக செயற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறிப்பிட்ட சூழ்நிலையில் முடிவு எடுத்தல், முடிவுக்கு பொறுப்பெடுத்தல், நிர்வாகம் பற்றிய முடிவுகள் உண்மையிலையே நிர்வாக உறுப்பினர்களுக்கு திருப்தியளிக்காவிட்டாலும் அவரது முடிவு நிலைப்பாடுகளை நிறைவேற்றி வைப்பதில் திறம்பட செயற்பட்டார். மேற்பார்வையாளர் என்ற வகையில் தம் பொறுப்பின் கீழ் நடைபெறும் கடமைகள் பற்றிய நுட்ப அறிவை வைத்துக் கொண்டு மேற்பார்வை செய்தல். ஆசிரியரிடம் நேருக்கு நேர் தொடர்பு கொண்டு விரிவு படுத்தல் என்பவற்றின் மூலம், ஆசிரியர்களை நன்கு அறிந்து அவர்களிடம் உரிய பொறுப்புக்களை அளித்து, அவ்வாசிரியர்களிடம் இறுதிவரை நம்பிக்கை கொண்டவராக தனது நிர்வாகத்தை திறம்பட செயற்படுத்தினார். பாடசாலை ஒரு சிறந்த நிறுவனம் என்ற வகையில் அவர் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் சிறந்த தகுதியும் அர்பணிப்பும், நம்பிக்கையும், கீழ்ப்படிவும் கொண்ட ஆசிரிய குழாம் ஒன்று அவருடன் செயற்பட்டமையும் அவரது சேவை மேலும் மேம்படுவதற்கு காரணமாகும்.

இவ்வகையான உயரிய சேவையாற்றிய அதிபர் அவர்களுடன் நானும் ஒருவனாக சுற்றுலாக்கள், பாடசாலையின் விசேட நிகழ்வுகள், பல்வேறு இன்ப துன்ப நிகழ்வுகள், ஆசிரிய விடுதியில் சந்திப்புக்கள், உணவுகள் தயாரித்து உண்ணுதல், ஆண்டு இறுதி நிகழ்வுகள், ஆசிரிய கூட்டங்கள், நிர்வாக கூட்டங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்டங்கள், மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கு பற்றிய பசுமையான நினைவுகள் எம் கண்முன்னே நிலைத்து நிற்கின்றன.

***அதிபர் பிரபாகரன் அவர்களுடன் அவர் அதிபராக கடமையாற்றிய காலம் முழுவதும் பயணித்தவன் என்ற வகையில் நானும் பெருமையடைகின்றேன்.***

# பரந்த எண்ணங்களோடு பயணித்த கல்லூரி முதல்வர்



**திரு. சிவ வரதராஜன்**

பாண்டிருப்பு.

நான் உவெஸ்லியில் கல்வி கற்ற காலத்தில் பிரபாகரன் சேர் என்ற ஒரு ஆளுமை அறிமுகமாகியிருக்கவில்லை. நாங்கள் பாடசாலையிலிருந்து வெளியேறிய பின்னர்தான் அவர் அங்கு இடமாற்றம் பெற்று வந்திருந்தார். இதனால் அவருக்கும் எனக்கும் இடையே ஆசிரிய - மாணவ உறவு அமைந்திருக்கவில்லை. பல்கலைக் கழகப் படிப்பு முடிந்த பின்னர் தொழில், வருமானம் எதுவுமின்றி அலைக்கழிந்து கொண்டிருந்தபோது எனக்குப் பொருளியில் கற்பித்த ஆசான்களில் ஒருவரான திரு.மு.புவனேந்திரராஜா அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் சில மாதங்கள் இப்பாடசாலையில் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு தினமும் ஒரு சில மணித்தியாலங்கள் கற்பித்துக்கொண்டிருந்தேன். அப்போதுதான் பிரபாகரன் சேர் உவெஸ்லியின் பிரதி அதிபராக எனக்கு அறிமுகமாகியிருந்தார்.

பிரபாகரன் சேர் அவர்களை அவதானித்த ஒரு சில நாட்களிலேயே அவர் உவெஸ்லி என்ற இராட்சதக் கப்பலை பனிப்பாறைகள் நிறைந்த கடலில் கவனமாக ஓட்டிச் செல்வதற்குப் பொருத்தமான மாலுமிதான் என்ற நம்பிக்கை எனக்குள் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே அவர் உவெஸ்லியின் பாரம்பரியங்களை இறுதிவரை கரைசேர்க்கும் விதத்தில் போராடினார் என்பதும் 'பந்தா' இல்லாத எளிமையான அவரின் வாழ்க்கை முறையும் அவர் மீதான மரியாதையை ஒருபடி மேலும் அதிகரிக்கச் செய்திருக்கின்றது.

இக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற உரிமையோடும் ஆர்வங்களோடும்தான் பிரபாகரன் சேர் எனது அவதானத்துக்குரிய ஒருவராக இருந்து வந்திருக்கின்றார். இல்லையேல் எனது கவன எல்லைக்கு அப்பாற்பட்ட யாரோ ஒரு மனிதனாக அவர் இருந்திருக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் ஆளுமையை, அவர் அடைந்த வெற்றிகளை, எதிர்கொண்ட தோல்விகளை, சிக்கலான சூழ்நிலைகளில் அவர் எடுத்த தீர்க்கமான முடிவுகளை தூர இருந்தபடியே அறிய முயற்சித்திருக்கின்றேன். ஒரு பரீட்சை முடிவு வெளியாகிய செய்தி அறிந்ததும் உவெஸ்லியில் எத்தனை பேர் சித்தி? என்ன உயர்ச்சிப் பெறுபேறு? என்ற கேள்விகளுக்கு நானும் விடையறியத் தவித்துக்கொண்டிருப்பேன். விளையாட்டு மைதானத்தில் எனைச்சார்ந்த ஓட்டவீரன் போட்டியாளர்களை முந்திக்கொண்டு ஓடமாட்டானா என்ற எதிர்பார்ப்பு மிக்க பரபரப்பு அது.

அந்த வளாகத்தில் நான் காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு பொழுதும் பிறந்து வளர்ந்த தாயதி வீட்டுக்குள் நுழைகின்ற உணர்வு எனக்கு ஏற்பட்டு விடுகின்றது. நான் பாடசாலைக்கு வேறு ஏதேனும் நோக்கத்திற்காக நுழையும் தருணங்களில் கூட அந்த நோக்கத்திற்கப்பால் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றுள்ள மாற்றங்களை, அபிவிருத்திகளை அவதானிக்கத் தவறுவதில்லை. நாங்கள் கற்ற வகுப்பறைகளைத் தேடுவேன். அனேகமாக அவையெல்லாம் உடைக்கப்பட்டு விட்டன.

எங்கள் பழைய வகுப்பறைகள் இருந்த இடங்களில் இன்று புதிய கட்டடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவை பார்க்க அழகாகவும் கம்பீரமாகவும் இருந்தாலும் என்னை அலட்சியம் செய்கின்றன. எங்கள் பழைய நினைவுகளை என்னுள் கிண்டிக் கிளற அவை முயற்சிக்கவில்லை. அதே போன்றே அறிமுகமில்லாத புதிய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள். ஆனால் மிக நீண்டகால நட்புபோல இந்த ஆலைகள் என்னையும் முகம் மலர வரவேற்கின்றன. குளிர்மையான ஆகாரத்தை அருந்தத் தருகின்றன. தனது மஞ்சள் இலைகளை உதிர்த்தி ஆசீர்வதிக்கின்றன. விழுதுகளால் தோள்களைத் தடவி ஆறுதல் சொல்ல முனைகின்றன. நான் அவற்றின் மடிக்குள் கிடக்கும் ஒரு குழந்தை போல அவற்றினை அண்ணாந்து பார்த்து வியக்கின்றேன். அந்த விருட்சங்களே உவெஸ்லியின் குறியீடு. புத்தருக்கு வெள்ளரசை போதிமரம் என்றால் 'உவெஸ்லியன்'களுக்கு அந்த ஆலைகளே போதிமரங்கள்.

நான் இந்தப் பாடசாலைக்குள் நுழைந்த போதெல்லாம் அந்த ஆலைகள் போன்றே பிரபாகரன் சேர் அன்பாக வரவேற்று, ஆறுதலாக உரையாடினார். பாடசாலையின் சில பக்கங்களைத் திறந்து காட்டினார். சமூகம், அரசியல், பிரதேச இலக்கிய முயற்சிகள் என்று அவர் பேச்சின் மையப் புள்ளிகள் மாறிக்கொண்டேயிருக்கும். Fruit and Nut - Ice Cream போல அவரது பேச்சில் வரிக்கு வரி நகைச்சுவையும் நையாண்டியும் கலந்திருக்கும். அவர் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கும் தருணங்கள் ரசிப்புக்குரியன. அவருடைய பகிடிகள் சிந்தனைக்குரியவை; கோபங்கள் நியாயமானவை; அவருடைய மேடைப்பேச்சுக்கள் கிருஸ்தவ பாதிரிமாரின் பிரசங்கத்திற்கு ஒப்பானவை. அநேகமான உரையாடும் தருணங்களில் அவர் ஓர் ஆசானாகவும் நான் கீழ்ப்படிவுள்ள ஒரு மாணவனாகவும் ஆகியிருப்போம். சிலநேரங்களில் சமாந்தரமாக இருந்து பேசும் எனது சமவயதுடைய நண்பன் போலவும் அவர் மாறிவிடுவார். ஆனாலும் குரு - சிஷ்ய பாத்திரங்களே அவருக்கும் எனக்கும் கச்சிதமாகப் பொருந்தியிருந்தது. ஒரு சிஷ்யனுக்குரிய எல்லைக் கோட்டைத் தாண்ட நான் ஒருபோதும் விரும்பியதில்லை.

பிரபாகரன் சேர் இயல்பாகவே பல நற்பண்புகளைக் கொண்ட ஒருவர். தனது கடமைப் பொறுப்புக்கு விசுவாசமாக இருந்தவர். சமூக அக்கறையுடன் செயற்பட்டவர். வெளிப்படைத் தன்மை மிக்கவர். திறமைக்கு மதிப்பளித்தல், குழு வேலைகளில் நம்பிக்கை கொள்ளுதல். சமூகத்தோடு பிணைந்திருத்தல், சேவையாளர்களை ஊக்குவித்தல் போன்ற நல்ல முகாமைத்துவச் சிந்தனைகளோடு இக் கல்லூரியை நிருவகித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதற்கான பரந்த மனமும் தகுதியும் அவரிடமிருந்தது. நாமறிய அவர் யாரையும் இருட்டடிப்புச் செய்ய முனைந்ததில்லை. வேறு யாருடைய வெற்றிகளையும் தனது வெற்றிகளாக அவர் கொண்டாடியதில்லை. தன்னை முன்னிலைப்படுத்தி புகழ் மாலைகளுக்கான வியூகங்களை அவர் அமைத்ததில்லை.

பிரபாகரன் சேர் அவர்களால் இந்தப் பாடசாலையின் பெருமட்டான பாரம்பரியங்களைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது. தொலைந்து போன உவெஸ்லியின் அடையாளங்கள் சிலவற்றையும் மீட்டெடுக்க இயன்றிருக்கின்றது. காலத்திற்கு ஏற்ற பல நல்ல மாற்றங்களை உருவாக்க முடிந்திருக்கிறது. இருந்தபோதிலும், மாணவர்களின் பல்கலைக் கழக நுழைவு விடயத்தில் அதிலும் குறிப்பாக பொறியியில், வைத்தியத் துறைகளுக்கான நுழைவு தொடர்பில் தங்கள் பிள்ளைகளின் எதிர்கால கனவுகளைச் சுமந்த இப் பிரதேச பெற்றோரின் பெருவாரியான நம்பிக்கைகள் இக் கல்லூரியை நோக்கித் திருப்பவில்லை. எனினும் பெற்றோரின் இந்த மனோபாவத்தை போக்கும் விதத்தில் தனது மகனை இக் கல்லூரியிலேயே ஆரம்பம் முதல் இறுதிவரை இணைத்து முதலாவது அமர்விலேயே வைத்தியத் துறைக்கு தெரிவாகும் படி செய்தவர்.

ஒரு பாடசாலையின் முன்னேற்றம் என்பது என்னதான் நிருவாக ஆளுமையும் தூய நேர்மையும் உடைய அதிபர் ஒருவரால் கணப்பொழுதில் நிகழ்த்திவிடக்கூடிய மந்திரக்கோல் வித்தையல்ல. "வரலாற்று ரீதியாக நோக்கும்போது அது ஒன்றுக்கு மேற்பட்ட வீரர்கள் ஒன்றிணைந்து வெற்றிபெறும் அஞ்சலோட்டத்திற்கு ஒப்பானது". அதாவது கடந்த கால நிருவாகங்களின் ஓட்ட வேகங்களோடும் தொடர்புடையது. சமகாலம் என்று நோக்கும் போது பலரின் உச்ச பலம்கள் ஒன்றிணைந்து வெற்றிபெறும் ஒரு கயிறுழுத்தல் போட்டிக்கு இணையானது. உவெஸ்லியைப் பொறுத்தவரை இந்த யதார்த்த நிலையில் எங்கோ சமநிலையின்மைக்கான ஒரு குழப்பம் நிகழ்ந்திருக்கிறது.

இருப்பினும் அவர் அதிபராக கடமையாற்றிய இந்தப் பத்தாண்டுகளில் இக்கல்லூரியை முன்னேற்றுவதற்காக தனது முழுத் திறமையையும் நேர்மையையும், நற்குணங்களையும் அர்ப்பணித்தார் என்பதை நாம் மறுக்க முடியாது. வேறொரு வார்த்தையில் சொன்னால், அவரது எந்தப் பலவீனமும் இக்கல்லூரியின் வளர்ச்சி வேகத்தைத் தடுத்ததில்லை. அவரது பலவீனங்கள் என்று நாம் சுட்டுவதற்கும் எதுவும் இருந்ததில்லை. "குறித்த காலத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு, அக்காலத்திற்கான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, உச்ச வெளியீட்டைப் பெறுவதே உத்தம உற்பத்தி" என்ற பொருளியலில் கோட்பாட்டுக்கிணங்க அவர் அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் இருந்த வளங்கள், சூழ்நிலைகள், பெற்றோர்களிடமிருந்த நம்பிக்கைகள், அவர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில் அந்தக் காலத்திற்கான உவெஸ்லியின் உத்தம வெளியீட்டை அவர் அடைந்தார் என்பதில் திருப்தி கொள்ளலாம். அவருக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலையின் முன்னேற்றம் தொடர்பில் அஞ்சலோட்டக் கோலை திரு.செ.கலையரசன் சேர் அவர்கள் இப்போது பெற்றிருக்கின்றார். அவர் இப்பாடசாலையை எந்த இடத்துக்கு நகர்த்தப் போகின்றார் என்பது எதிர்பார்ப்பும் சாவால்களும் நிறைந்த ஒன்றுதான். எனினும் தேசிய பாடசாலை என்ற தற்போதுள்ள மகுடம் அவரைத் தலைமையாகக் கொண்ட இப்பாடசாலையின் அபிவிருத்தி வேகத்தை அதிகரிக்கக்கூடும் என்று நம்பலாம். அவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து மலர் தூவுகின்றோம்

**இதயராஜா பிரகவி**
மாணவி,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.



ஆழி கிழித்து அருணன் வெளிப்பட்டு
என்முன் அமர்ந்திருக்கும்
ஒளி வீசும் இந்த காலைப் பொழுதினிலே

அனைத்து உள்ளங்களுக்கும்
என் இதயம் கனிந்த
இனிதான வணக்கங்கள்!

கல்முனை மாதாவின்
கவினுறு பெட்டகம்
உவெஸ்லி யாம்
உயர்தர வளாகம் - அது!
மிசனரிமார்களின் எண்ணத்தில்
மிளிர்ந்ததொரு நந்தவனம்.

அந் நந்தவனத்தினிலே
அதிபர் ஆசிரியர்களின்
அரும்பணிகள் ஏராளம்!.... ஏராளம்...!
அது எங்கள் வாழ்வில் என்றும் பூபாளம்!

ஆரம்பப் பிரிவில் நான்
கல்வி கற்ற நாட்களினை
எண்ணிப் பார்க்கின்றேன்.
இதயத்தில் வைக்கின்றேன்

காலையில் வகுப்பறை தரிசனம் செய்திடுவோம்
அதன் பின்னர்,
உந்துருளியில் உருண்டுவரும் அந்த
உயர்ந்ததொரு அன்பின் உருவை
தரிசிக்க நண்பர் குழாம் காத்திருப்போம்!

முட்டி மோதி குட்மோனிங் சொல்வதும்
கைலாகு கொடுத்து மின்மினிப் பூச்சிகள் போல்
அவரைச் சுற்றி நாம் வட்டமிடுவோம்.!
பிங்கர்பிறின்ற் கையெழுத்திட்ட பின்னர்
மறக்காமல் எங்கள் மழலைமொழி
கேட்க வந்திடுவார் அதிபர் திலகம்

இப்போது நாங்கள்
இடைநிலைப்பிரிவில்
கண்டிப்பான அதிபரைக் கண்டோம்! ஆனாலும்
கதைகள் பல கேட்டிடுவார் சொல்லிடுவார்

அரசாங்க சுற்றுநிருபம்
யாரைத்தான் விட்டது
அதிபர் பிரபாகரன் சேர்
அகவை அறுபதைக் கண்டார்
அதிபர் அவர்களின் ஓய்வினால்
அனைவரும் வாடிவிட்டோம்
ஆனாலும்
அகங்களில் அமைதிதனை நிறுத்தி
அவர் நோய் நொடிகளின்றி
நீடுழி காலங்கள் வாழ்ந்திட வேண்டுமென வாழ்த்துகின்றோம்!
வாழிய எங்கள் அதிபர் திலகம்
வாழிய! வாழியவே!
வளங்கள் கொழித்து வாழியவே
நன்றி வணக்கம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு பெரும் ஆலமரமும் அதன் விழுதுகளும்

**பிரமோதித் தயா**
மாணவன்,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.



கல்முனை நகரத்தின் மத்தியில் 138 வருடங்களுக்கு மேலாகத் தடம் பதித்து தனது அடையாளத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கும் எமது உவெஸ்லி உயர்தர பாடசாலையானது பலரின் வாழ்க்கையைப் பிரகாசம் நிறைந்ததாக மாற்றியுள்ளது. பலர் மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, கட்டட வல்லுனர்களாக, அரசியல் பிரபலங்களாக சமூகத்தில் சிறந்து விளங்குகின்றனர். இவ்வாறு வரலாற்றுச் சிறப்புமிக்க இப் பாடசாலையில் நானும் கல்வி கற்றதையிட்டுப் பெருமையடைகிறேன்.

எங்கள் பாடசாலையில், காலத்திற்குக் காலம் திறமையான ஆளுமைமிக்க அதிபர்கள் பலர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார்கள். அந்தவகையில் எனது பாடசாலைக் காலத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அதிபர் திரு. வ. பிரபாகரன் சேர் அவர்களும் ஒருவர். எனது ஆரம்பக்கல்விக் காலத்திலிருந்தே அவர் எங்களுக்கு ஒரு ஆசானாகவும், நிர்வாகத் திறன்கொண்ட அதிபராகவும் இருந்துள்ளார்.

தான் ஏற்றுக்கொண்ட அதிபர் ஸ்தானமானது ஒரு பதவியல்ல அது ஒரு பொறுப்பு. என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமை எங்கள் அதிபர் திரு. வ. பிரபாகரன் ஐயாவுக்கு உண்டு. அவரோடு சேர்ந்து பணியாற்றுபவர்களையும், மாணவர்களையும் தந்தையின் ஸ்தானத்திலிருந்து அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை இலாவகமாகத் தீர்த்து வைப்பதில் வல்லவர்.

எந்தவொரு பிரச்சினை ஏற்பட்டாலும் அவசரப்படாமலும் உன்னிப்பாகக் கண்காணித்து தீர ஆலோசித்து முடிவெடுககும் அவரின் ஆளுமை வியப்புக்குரியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவரின் மேடைப் பேச்சு அதன் சிறப்புப்பற்றி இங்கு குறிப்பிடவேண்டியது எனக்கு முக்கிமாகப்படுகிறது. அவரின் மேடைப்பேச்சு மற்றவர்களின் பேச்சைவிட வித்தியாசமாக காணப்படும். சபையில் அமர்ந்திருக்கும் சபையோரின் தன்மைக்கேற்ப பொருந்தமான நேரத்தில் பொருத்தமான விடயத்தை எப்படி என்னவிதமாக எவ்வளவு நேரம் பேசவேண்டும் என அவர் புரிந்து வைத்துள்ளார். அத்துடன் தேவையான கருத்தை சுருக்கமாகவும் நகைச் சுவையாகவும் பேசும் பேச்சுத்திறன் அவருக்கே உரிய தனிச்சிறப்பு. மாண்புமிகு மனிதன் அப்துல்கலாம் ஐயா சொன்னதைப்போல "பேசும் குரலை உயர்த்திப் பேசுவது தலைமைத்துவம் அல்ல ஆரம்பிக்கும் போது மற்றவர்களின் குரல் அடங்க பேசுவதே சிறந்த தலைமைத் துவமாகும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் எங்கள் அதிபர்.

அவர் எங்கள் பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவர் காட்டிய வழிகள் அவரின் ஆளுமைகள் கொண்ட இலக்கை அடைய அவர் மேற்கொண்ட செயற்பாடுகள், பின்பற்றிய கட்டுப்பாடுகள், கடைப்பிடித்த நேரமுகாமைத்துவம், ஒழுக்கம், வயது வித்தியாசம் பாராது எல்லோருடனும் சகஜமாகப் பழகும் தன்மை என்பன மறக்க முடியாதவை.

அவரின் ஆளுமையின் கீழ் வளர்ந்த நாங்கள் இவற்றைக் கருத்திற் கொண்டு எங்களை நாங்களே வளப்படுத்தி, சமூகத்தில் நல்ல பிரஜைகளாக எதிர்காலத்தில் எம்மை ஆக்கிக்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை முன்னெடுத்து, ஒரு நல்ல சமூக மாற்றத்திற்கு எம்மை தயார்படுத்திக் கொள்வதே நாம் அவருக்குச் செய்யும் நன்றியும் மரியாதையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் அதிபர்

**ஜே. துஷாலினி**
மாணவி,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

வாட்ட சாட்டமும்
வாய் நிறைந்த புன்னகையும்
காட்டும் கருணையும்
கலந்து நிற்கும்
எங்கள் அதிபர் பிரபாகரன்

உவெஸ்லி உயர்தர
பாடசாலை
உயர்வுக்கு உயிர்கொடுத்து
பல ஆண்டுகள் அவர் பணிகள்

ஓய்வு பெறும் நாள் இன்று
அவருக்கு அல்ல அவர் பணிக்கு - அவர்
உடலுக்கு இல்லை ஓய்வு - ஏன்
எமக்குள் ஓர் ஆய்வு

நேர் கொண்ட பார்வையும்
நேர்மையும் நீதியும்
யார் யார் என்றில்லை
யாவர்க்கும் உதவிடும் பண்பும்
யாமறிந்த உண்மை

நல்ல ஆசானாய் நல்ல அதிபராய்
நல்ல நண்பராய் நல்ல உறவினராய்
நாங்கள் நல் வழி செல்ல
நல்மனதுடன் பல் ஆண்டுகள்
அர்ப்பணிப்புக்கள் செய்தவர்

ஓய்வு பெற்றுச் சென்றாலும் - அவரை
ஒரு போதும் மறவோம் நாங்கள் என்றென்றும்
நன்றியுடன்
இன்னும் பல ஆண்டுகள்
வாழ்க வாழ்க என
வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அவர்களைப்பற்றி என் மனதில் தடம்பதித்த நினைவலைகள்




**கே.ஷேபிகா**
மாணவி,
உவெஸ்லி உயர்தர பாடசாலை.

நான் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து தற்போது இடைநிலைப் பிரிவில் தரம் பதினொன்றில் கல்வி பயின்று கொண்டிருக்கின்றேன். எங்களது அதிபர் அவர்களைப் பற்றி நிறைய விடயங்களைத் தெரிந்து வைத்திருக்கின்றேன். நான் முதன் முதலில் இப் பாடசாலையினுள் காலடி எடுத்து வைத்த போது அதிபர் யார் என எனக்குத் தெரியாது. நான் எல்லோரையும் கவனித்துப் பார்த்தேன். பிரபாகரன் சேர் அவர்களைக் கண்டவுடனே இவர்தான் அதிபர் என்பதை உணர்ந்து கொண்டேன். அதன் பின் அம்மாவிடம் எனக்கு அதிபர் யாரென தெரியுமென்று சொன்னேன். அம்மா எப்படித் தெரியும் எனக் கேட்டார். அவரது தோற்றத்தையும் உடையையும் பேச்சையும் வைத்துத் தெரிந்து கொண்டேன் என்று சொன்னேன். உடனே சிரித்தார். அவர் தோற்றத்தில் உயர்ந்தவராக இருப்பதைப் போன்றே அவரது எண்ணங்களும் செயற்பாடுகளும் உயர்வாக இருக்கும் என எண்ணிக்கொண்டேன். அன்று நினைத்தது உண்மை என்பதை காலப்போக்கில் அவரது செயற்பாடுகளிலிருந்து தெரிந்து கொண்டேன். அதிபர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஆசிரியர்களால் நெறிப்படுத்தப்பட்டு தற்போது தரம் பதினொன்றில் கல்வி கற்று வருகின்றேன்.

அரசாங்க பொதுப் பரீட்சைகள் மூன்று. அதில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அதிபரின் ஆசீர்வாதங்களுடன் சித்தியடைந்தேன். மீதமுள்ள இரண்டு பொதுப் பரீட்சைகளையும் அதிபர் அவர்களின் தலைமையின் கீழ் அவரது ஆசீர்வாதங்களுடன் எடுக்க வேண்டும் என்பது எனது ஆசை. ஆனால் காலம் அதற்கு இடம் தரவில்லை. இதனை நினைக்கும் போது மிகுந்த கவலையாக உள்ளது. இருப்பினும் எங்கள் அதிபர் அவர்கள் பாடசாலையில் எம்மோடு இல்லாவிட்டாலும் அவர் ஒவ்வொரு மாணவரினதும் நலனிலும் கண்ணாய் இருப்பார் என நம்புகின்றேன். "அதிபர் அவர்கள்" ஓய்வு பெற்றாலும் அவரது ஆசீர்வாதங்களும் பாராட்டுக்களும் எப்போதும் எனக்கு உண்டு என்றும் அவர் திறமைகளுக்கு மதிப்பளிப்பவர் என்றும் பாராட்டி ஊக்குவிப்பதில் சிறந்தவர் என்றும் என் அம்மா கூட சொல்வார்.

நானும் இதனை என் அனுபவ ரீதியில் கண்டு உணர்ந்துள்ளேன். நான் தரம் மூன்றில் கல்வி பயின்று கொண்டிருக்கும் போது ஆங்கில மொழி தின மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றேன். இப் போட்டிக்கான சான்றிதழ் காலம் தாழ்த்தித்தான் வந்தது. இதனை எல்லோரும் மறந்துவிட்ட நிலையில் எங்கள் அதிபர் அவர்கள் என்னை கட்டாயம் மேடையேற்றி பாராட்ட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு ஆரம்பப் பிரிவில் கல்வி பயின்று கொண்டிருந்த என்னை வரவழைத்து எல்லோரும் அறியும் வண்ணம் பாராட்டி, ஊக்குவித்தமையை என்னால் என்றும் மறக்க முடியாது. அன்று அளித்த ஊக்குவிப்புக்களும் பாராட்டுக்களும் என்னை மேலும் தொடர்ச்சியாக பல போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்து சான்றிதழ்களையும், பரிசில்களையும் பெறுவதற்கு வாய்ப்பளித்தது. எங்கள் அதிபர் அவர்கள் புன்னகை பூத்த கைகுலுக்கல்களுடன் கூடிய ஆசீர்வாதங்களுடன் மாணவர்களை போட்டி நிகழ்ச்சிகளுக்கு அனுப்பி வைப்பது தனிச் சிறப்பாகும்.

காலைக் கூட்டங்களின் போது மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அவருக்கே உரித்தான பாணியில் கேள்விக் கணைகளைத் தொடுப்பார். அது மாணவர்களின் ஆர்வத்தையும், ஆற்றலையும் சிந்தனா சக்தியையும் தூண்டும் வகையில் அமைந்திருக்கும். அது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். மேலும் பெற்றோர்கள் அதிபர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். மாணவர்களது நெறி பிறழ்வான செயற்பாடுகளையும் இரகசியமான நடத்தைகளையும் ஏனையோர் அறிய முன் தானே கண்டறிந்து அதற்கான பரிகாரங்களைச் செய்வார்.

பொதுவாக அதிபர் என்றால் எல்லோரும் பயப்படுவார்கள். ஆனால் ஆரம்பப் பிரிவு மாணவர்களைப் பொறுத்தமட்டில் அவர் ஓர் நெருங்கிய தோழன். ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பட்டாம் பூச்சிகள் போல் அதிபரை சூழ்ந்து கொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் கைகுலுக்கிக் கொள்வார்கள். எங்கள் அதிபர் அவர்கள் மிகுந்த கலை ஆர்வம் மிக்கவர். இதற்கு பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகள் சான்று பகரும். மேலும் எங்கள் அதிபர் அவர்கள் இரசனை உள்ளம் படைத்தவர். சிந்தனையில் தெளிவுள்ளவர். சிறந்த சிந்தனா சக்தியுடையவர். திட்டமிட்டு செயற்படுபதில் வல்லவர். இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த காந்தித்தாத்தா உத்தம புருஷராக போற்றப்படுவது போல் எங்கள் அதிபர் எமது கல்லூரியில் உத்தமராகப் போற்றப்படுகிறார். எமது அதிபர் வெள்ளையும் கருநீலமும் கலந்த ஆடையில்தான் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார். அது அவருக்கு மிகவும் எடுப்பாகவும் அவரது தலைமைக்கு வலுவூட்டுவதாகவும் அமைந்திருக்கும். இதனை என் சக மாணவர்கள் தங்களுக்குள்ளே பேசிக் கொள்வதை நான் கேட்டிருக்கின்றேன்.

அடிமரம் உறுதியாக இருந்தால் தன் கிளைகளும் உறுதியாகவிருக்கும். இதே போல எங்கள் அதிபர் அவர்கள் அடிமரமாகவும் ஆசிரியர்கள் கிளைகளாகவும் இருந்து செயற்பட்ட விதத்தை எந்தவொரு மாணவனாலும் மறக்க முடியாது. இத்தகைய பெருமையும் மேன்மையும் வாய்ந்த அதிபர் இன்று மணிவிழா கண்டது போல நூற்றாண்டு விழாவும் காண வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உவெஸ்லியின் விழாக்களுக்காக

அதிபர் திரு. வ. பிரபாகரன் அவர்கள்

இயற்றிய பாடல்கள் . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தாபகர் தினப் பாடல்

திரு. வ. பிரபாகரன்

பயணம் பயணம் கல்விப் பயணம்
பணியை நோக்கிய புதுப் பயணம்
வாழ்வு தருகின்ற பயணம் இது – புது
வாழ்க்கை காட்டும் பயணம் இது

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து மூன்றில்
கல்முனைப் பிரிவில் பெண்களின் கல்வி
றிம்மர் குருவால் புத்தெழில் பெற்றதே
குத்து விளக்காய் இன்றும் ஒளிருதே



பெண்கள் விடுதிப் பாடசாலை வந்ததே
பெண்களின் அடிமை விலங்குகள் ஒழிந்ததே
ஆங்கிலக் கல்விக்கு லீசும் திறந்ததே
அனைத்தும் இன்று வெஸ்லியாய் மின்னுதே

அதிபராய் ஆசானாய் பணிகள் செய்தாரே
அடக்கம் எளிமை பொறுமை காட்டினாரே
சிந்திக்க செயற்பட ஆளுமை தந்தாரே
சிறப்பான வாழ்வுக்கு வழியும் காட்டினாரே

நாடுகள் கடந்து இங்கு வந்தீர்
நற்பணி புரிய தேடி வந்தீர்
ஸ்தாபித்த உம்மை என்றும் மறவோமே
ஆண்டுகள் கடந்தும் நினைவில் வைப்போமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றுத்திறன்

திரு. வ. பிரபாகரன்

பிறந்த நாங்கள் வாழ்ந்து காட்டுவோம்
சவால்கள் தாண்டி சாதனை படைப்போம்
முயற்சி செய்தே வெற்றி பெறுவோம்
வளமான வாழ்வுக்கு வழி சமைப்போம்

குறைவுகள் உண்டு எம் குணத்தில் அல்ல
குறைவுகள் உண்டு ஆற்றலில் அல்ல
குறைவுகள் உண்டு அன்பில் அல்ல
குடும்பத்தில் நாங்கள் சுமையாய் அல்ல

சைகை மொழி எங்கள் சிலருக்கு
வெள்ளைப் பிரம்பு வாழ்க்கைத் துணைக்கு
ஊன்று கோல்கள் எழும்பி உயர்வதற்கு
மற்றும் பலவும் எங்கள் துணைகளே


இறைவன் படைப்பில் நாங்கள் அங்கம்
இதயம் கனக்க சோர்வுகள் வரினும்
மாற்றுத் திறனை துணையாய்க் கொண்டு
இணைந்து வாழ முயன்றே நிற்போம்

# முருகையா அதிபர் அவர்களுக்கான வரவேற்புப் பாடல்

திரு. வ. பிரபாகரன்

*வந்தனம் தந்தோம் ஐயா முருகையா*
*நன்றிகள் சொல்வோம் உளமனதார*
*பணிகளைச் சொல்வோம் பாமாலை சூட்டிடுவோம்*
*விஞ்சிடும் உம் சேவை நானிலம் தனிலே*

*கலையுணர்வும் அழகுணர்வும் உன் இருப்பிடங்கள்*
*கல்வியோடு முன்னேற்றம் உன் சிந்தனைகள்*
*வாழ்வோடு வளமுறவே வாழ்த்துகின்றோம்*
*மகிழ்வோடு பூமாலை சொரிகின்றோம்*



*என்றும் உயர்ந்த ஆலமரம் நீங்கள்*
*நிழல் தந்தீர் தங்கி விட்டோம் நாங்கள் இங்கு*
*ஆசானாய் அதிபராய் உளமான பணியாற்றி*
*வாசமுடன் மணம் பரப்பும் சேவை தந்தாய்*

*விருட்சமாம் உவெஸ்லியின் நல்வரலாறு*
*விரிந்து விட்ட பாராட்டு எந்நாளும்*
*பதித்து சென்றார் முன்னோர் மிஷனரிகள்*
*எழுப்பி விட்டீர் அதனை உயர்வோடு*

*முத்தெடுக்க ஆழத்தில் இறங்கிச் சென்றீர்*
*தத்தெடுத்தீர் பள்ளியினை உயர்வாய் முன்னேற்ற*
*கடைந்தெடுத்தீர் வெண்ணெயினைப் பாகாக*
*வெஸ்லியில் பொற்கால அதிபரானீர்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அமைதி வேண்டும்

திரு. வ. பிரபாகரன்

*அமைதி வேண்டும்..*
*உலகத்தில் அமைதி வேண்டும்*
*வேற்றுமை வாழ்வில் ஒற்றுமை வேண்டும்*
*தனிமனித அமைதி தரணியை ஆளட்டும்.*

*பாருலக மாந்தரெல்லாம்*
*பகிர்ந்துண்ணும் நிலை வேண்டும்*
*மண்ணுக்கும் பொன்னுக்கும் சண்டையிடும்*
*மனிதரில்லா உலகம் வேண்டும்.*

*மொழிகள் எல்லாம் புரிதலுக்கே*
*பெரிது சிறிது என்றில்லையே*
*பெருமை கொள்ள இடமில்லையே*
*அன்பு மொழியே பிரதானம்.*

*எதிரும் புதிரும் வாழ்வென்றால்*
*உள்ளத்திலேது அமைதி வாழ்வு*
*மதமும் இனமும் மனிதனில் இருக்கும்*
*மாறா அன்பே இறைவன் விருப்பம்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உவெஸ்லியின் அதிபராக கடமை புரிந்த
காலங்களில் தன்னோடு பணிபுரிந்த ஆசிரியர்கள்,
ஊழியர்களை நினைவுகூரும்
திரு. வ. பிரபாகரன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் இவர்கள்...

| | |
|---|---|
| 1.திரு.S.கலையரசன் | : என் கண் அசைவையும் கை அசைவையும் புரிந்து கொண்டவர் |
| 2.திரு S.தேவசந்திரா | : பழக்கமில்லா ஆங்கிலச் சொற்களுக்குச் சொந்தக் காரர். |
| 3.திரு S.சிவாகரன் | : காரில் கடுகதி வேகக்காரர். |
| 4.திரு.P. கமலதாசன் | : கொடுக்கின்ற வேலைகளைத் திறம்பட முடிப்பவர். |
| 5.திருமதி P.ருத்ரா | : படிவங்களும் தகவல்களும் இவர் கைக்குள் அடக்கம். |
| 6.திருமதி V.இலங்கநாதன் | : மனம் நோகாமல் காரியம் ஆற்றுபவர். |
| 7.திருமதி S.Z.M அபூபக்கர் | : இரசாயனவியலுடன் மனித மனங்களையும் இரசனையுடன் கலக்கத் தெரிந்தவர். |
| 8.திருமதி.S.தயாபரன் | : பதறிப்போகும் பதட்டக்காரராயினும் வரலாறையும் புவியியலையும் அர்ப்பணிப்புடன் கற்பிப்பவர். |
| 9.திருமதி S.பரமலிங்கம் | : தமிழ்த்தினப் போட்டிகளில் பொங்கி எழுந்து வெற்றி பெற்ற தங்க மங்கை. |
| 10.திருமதி P.பாலசுப்ரமணியம் | : எப்படியும் செய்து விடமுடியும் என்று காரியமாற்றுபவர். |
| 11.திருமதி Y.செல்வராஜா | : பாடத்திலும் நடையிலும் விரைவுப் போக்கு. |
| 12.திருமதி.S.சாந்தகுமார் | : மாணவரைக் கட்டியாளத் தெரிந்தவர். |
| 13.திருமதி.K.A.H. அமல்ராஜ் | : கருத்திலும் கடமையிலும் தந்தையின் பிரதி பலிப்பு. |
| 14.திருமதி.MT. அழகுராஜா | : இருபதையும், அறுநூறையும் பக்குவமாய் அணுகத் தெரிந்தவர். |
| 15.திருமதி.M.கோபாலசிங்கம் | : எண்ணையும் எழுத்தையும் நேசிப்பதுடன் சுவையான உணவுக்கும் சொந்தக்காரர். |
| 16.செல்வி K.அன்னநேசம் | : கணிதத்தைக் கரும்பாக்க முனையும் நேர முகாமைத்துவக்காரர். |
| 17.திருமதி R.அருள்ராஜா | : நண்பிகளின் வட்டத்தைத் தொடர்ந்து பேணுபவர். |
| 18.திருமதி S.மகேந்திரராஜா | : தானாகப் பொறுப்பெடுத்துச் செய்யும் பல்வேறு கோலக்காரர். |

19.திருமதி.V.திருநாவுக்கரசு : உறவுக்காரரையும் சமய கலாசாரங்களையும் நேசிக்கத் தெரிந்தவர்.

20.திருமதி JR. ஜீவகடாட்சம் : மைதானத்தைக் கட்டுப்படுத்தத் தெரிந்த இவருக்கு நாவைக் கட்டுப்படுத்தத் தெரியாது.

21.திருமதி AJ.கிறிஸ்ரோ றெக்ஸ்: அமைதியுடனும் தன்னடக்கத்துடனும் பணியாற்றுபவர்.

22.திருமதி.S.சிவா : துணிந்து கருத்தைச் சொல்லத் தயங்காதவர்.

23.திருமதி.N.அமலநாதன் : கைப்பக்குவமும் மனப்பக்குவமும் நிறைந்தவர்.

24.திரு.S.ரவிந்திரகுமார் : அமைதியாகப் பேசும் சகலதுறை ஆட்டக்காரர்.

25.திருமதி.I.குலேந்திரன் : பாலரின் துடிப்பை கண்ணறிந்து செயற்படுத்துபவர்.

26.திரு.MAM.றிஸ்மி : இது ஓடும், பாயும், எழுதும், பேசும், வில்லுப்பாட்டும் பாடுமாம்.

27.திருமதி.R.சயதரன் : இனிமைக் குரல் கொண்ட ஆரம்பப் பிரிவுக் குயில்.

28.திருமதி.V.கணேசன் : விடுமுறை விண்ணப்பப் பத்திரம் இல்லாத குருபிரதீபா ஆசிரியர்.

29..திருமதி.V.சந்திரகுமார் : மணலிலும் மனதிலும் விதைக்கத் தெரிந்தவர்.

30..திருமதி.P.இதயராஜா : புதியவற்றை ஆர்வத்தோடு தெரிந்து கற்றுக்கொடுப்பவர்.

31.திருமதி.R.அல்லீஸ் : வாழ்த்துக்கும் அஞ்சலிக்கும் பழக்கமான கைக்கு மேடையேற்றவும் தெரியும்.

32.திரு.T.வில்வராஜா : கொந்தளித்து வெளிக்காட்டும்மனவேதனைகளுக்கிடையே சிந்திக்க சிரிக்கவைக்கும துணுக்குகளுக்கும் சொந்தக்காரர்.

33.திருமதி.M.ரங்கராஜன் : ஆடவும் பாடவும் ஒலிவாங்கி பிடிக்கவும் மாணவரை நேசிக்கவும் தெரிந்தவர்.

34.திருமதி.T.கோவிந்தசாமி : இவருக்குத் இங்கு தடைசெய்யப்பட்டது ஒலி வாங்கிதானோ என்னவோ.

35.திருமதி.M.சுரேஸ்குமார் : அமைதியாக இருந்து பெயரை வெளிக்காட்டாது மாணவரை ஆடவைத்து தன் எலும்பை முறித்தவர்.

36.திரு.S.உதயராஜா : ஒலி வாங்கி பிடிக்காத ஒலிபரப்பாளர்.

37.திரு.K.ருத்ரமூர்த்தி : பாண்டிருப்பில் அந்நியனாகத் தெரிந்தவர் இங்கு அனைத்திலும் அன்னியோன்னியமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 38.திருமதி.I.அருள்ஞானமூர்த்தி | : | ஊர்க் கதைகளும் நோயையும் சொல்லி லீவுக்கு அனுமதி பெறும் முகப்புத்தகக்காரி. |
| 39.திருமதி.K.சனாதனன் | : | எப்பாடத்தையும் கற்பிக்கத் தெரிந்த முணுமுணுப்புக்காரி. |
| 40.திருமதி.S.வாதமன் | : | அமைதியாக இருந்து வேலை முடிப்பபவர். |
| 41.திரு.S.இம்தியாஸ் | : | அனைத்துத் துறைகளும் இவர் கைக்குள் அடங்கும் ஆனால் வெளியில் அமைதிப் பூங்கா. |
| 42.திருமதி.K.உமாவரன் | : | சமூகவியலுக்குள்ளும் வணிகவியலுக்குள்ளும் தன்னை நிலைநிறுத்தியவர். |
| 43.திருமதி.V.விஜயகுமார் | : | மாணவர்களோடு ஐக்கியமாகி ஐந்தினுள் புதைந்தவர். |
| 44.திரு.G.அல்பிரட்கரன் | : | மாணவர்களை ஊக்குவிக்கத் தெரிந்த உளவியல் ஆலோசனைக்காரர். |
| 45.திருமதி.U.நிமால் | : | ஆரம்பப் பிரிவில் மாணவரை நேசிக்கத் தெரிந்தவர். |
| 46.திரு.MSM.நக்கீப் | : | சமையலறையுடனும் ஆய்வு கூடத்துடனும் ஒன்றித்துவிட்ட ஜிப்பாக்காரர். |
| 47.திருமதி.CP.ஜஸ்டின் | : | அனைத்துப் பாடங்களையும் கற்பிக்கத் தெரிந்த பொறுமைசாலி. |
| 48.திருமதி.J.சிவாகரன் | : | கதிர்காமத்தையும் நேசித்து வைத்தியசாலையும் நேசித்தவர். |
| 49.திருமதி.L.அருள்கந்தராஜா | : | நேரசூசி இடம்கொடுக்காத அளவு கற்பிக்கக்கூடியவர். |
| 50.திருமதி.R.மறில் மரியராஜ் வாஸ் | : | ஆங்கிலத்தினுள் கலந்துவிட்ட மாணவரை நேசிக்கத் தெரிந்த மாற்றும் திறனாளி. |
| 51.திரு.V.இந்திரகுமார் | : | உவெஸ்லியில் சங்கமித்து வெளியேற முடியாதவர். |
| 52.திருமதி.R.குமாரதீபன் | : | கவிதாயினியாய் உவெஸ்லியினுள் உறைந்து பிரியமுடியாதபடி பிரிந்தவர். |
| 53.திருமதி.P.மனோகரன் | : | பாடத்தில் பதவியைப்பெற்று ஆசிரியர் அறையைச் சுழல வைத்தவர். |
| 54.திருமதி.S.விஸ்வநாதன் | : | எப்போதும் எதற்கும் தயாரான இவரை ஒலிவாங்கி எதிர்பார்க்கும். |
| 55.திருமதி.J.மோகன் | : | மூன்று நாட்களானாலும் பாடசாலையை நேசிக்கத் தெரிந்தவர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 56.திருமதி.N.தயாபரன் | : நடனத்தினுள் மாத்திரம் தன்னை மட்டுப்படுத்தாதவர். |
| 57.திருமதி.S.மோகன் | : வகுப்பறையைக் கட்டியாள்வதுடன் பெற்றாருடனும் நல்லுறவைப் பேணுபவர். |
| 58.திரு.K.விஜயகுமார் | : பட்டங்கள் பல பெற்று விட்டோட முயல்பவர். |
| 59.திருமதி.S.மதியழகன் | : வதந்திகளைப் பரப்புவோருக்கு ஆயுள் தண்டனை நிச்சயமாம். |
| 60.திருமதி.K.ஜெயரூபன் | : தனியாக மைதானத்தினுள் சுழன்று அடையாள அட்டையையும் பொறுப்பெடுத்தவர். |
| 61.திருமதி.S.சுபராஜன் | : பெற்றோர் தொடர்புகளைச் சிறப்பாகப் பேணுபவர். |
| 62.திருமதி.S.பார்த்தீபன் | : பல்வேறு ஆற்றல் கொண்ட இவருக்கு மேடைகள் பல காத்திருக்கின்றன. |
| 63.திரு.S.சுதாகரன் | : குறுகியகாலமேயாயினும் பலரின் மனங்களில் இடம்பிடித்தவர். |
| 64.திரு.P.றஞ்சன் | : நாற்றுமேடை தயாராவது எப்போது? மரம் காய்ப்பது எப்போது? |
| 65.திரு.T.கார்த்தீபன் | : தீபனின் தம்பியாய் அறிமுகமாகி பாடசாலையின் 136வது வருட நிறைவில் கூடுதலாக இணைந்தவர். |
| 66.திரு.Y.தவஜீவன் | : எப்பக்கமும் இழுத்தாலும் இழுபடக் கூடிய இறப்பர் இவர். |
| 67.திரு.S.விமல்ராஜ் | : பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விடயங்களும் மாணவர்களுக்கான ஆலோசனைகளும் அத்துப்படி. |
| 68.திருமதி.T.பாஸ்கரன் | : மனக்கவலைகளை மறந்து பாடம் நடத்தும் பக்குவக்காரர். |
| 69.திருமதி.N.சுதர்சன் | : உதவி செய்யும் மனப்பாங்குடைய அக்கறையுடன் செயற்படுகின்ற ஒருவர். |
| 70.திருமதி.V.சிறிதக்சன் | : என் வரிகளுக்கு உயிர் கொடுத்தவர். |
| 71.திரு.S.சிறிதக்சன் | : கலையரசனின் பென்சனுக்கு முன்னராவது சாரண பாசறை நடக்குமா. |
| 72.திரு.A.பிறின்ஸ்லி பேனாட் | : சிறப்பான உயிரோட்டமான செயற்பாடுகளும் தகவல் பரிமாற்றங்களும். |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

73.திரு.MSS.யசார் : உவெஸ்லியின் இன்னொரு றியாழ் சேர், பாடத்திட்டமும் பாடக்குறிப்பும் விரைவாக...

74.திருமதி.S.தர்மேந்திரா: ஆரம்பப் பிரிவுக்கும் நடனம் கற்பித்தால் நல்லது.

75.திரு.S.பிரதீபதாசன் : மேலதிக கடிகாரம் ஒன்று என்னிடம் உண்டு.

76.திருமதி.K.தேவரஞ்சன்: மாணவரின் தகவல்களை சரியாக இனங்கண்டறிய உதவுபவர்.

77.திருமதி.S.தசரதன் : சிறுவர் விளையாட்டு விழாவில் அதிக பங்களிப்பு.

78.திரு.K.ராஜு : வெள்ளை சேட் தைத்து முடிந்து விட்டதா.

79.திருமதி.J.சிறிதரன் : பாணமை போய் மீண்டு வந்து இங்கு இடம் பிடித்தவர்.

80.திருமதி.S.ருசிகரன் : குடும்பமாய்க் குழந்தை வளர்ப்பு.

81.திருமதி.AL.பாத்திமா றிஸ்னா : உவெஸ்லியில் கலந்துவிட்ட இவர் பாடகர் குழுவில் இணைய வேண்டும்.

82.திருமதி.N.தூபன் : மழலைகளை நேசித்து உவெஸ்லியில் உறைந்தவர்.

83.திருமதி.MGF.நஸ்றியா: கிழக்குடன் ஒன்றித்து வேலைகளைச் செய்ய முன்வருபவர்.

84.திரு.S.சிவரஞ்சன் : தபால் திணைக்களம் இலாபத்தில் இயங்க உதவுபவர்.

85.திருமதி.I.மர்சுதா சமட் : எக்காரியத்திலும் எங்கும் எதிலும் விரைவும் நிறைவும்.

86.திரு.NM.ஜலீல் : சமயம் கற்பிக்க வந்திருந்தாலும் தக்க சமயத்திற்கு தோள் கொடுப்பவர்.

87.திருமதி.DG.இனுக்கா பிரியந்தி : வந்தார் சென்றார் என்றில்லாமல் தன் நாமம் பதித்தவர்.

88.திருமதி.K.சிப்ரா : வீட்டில் சொகுசு என்றால் வேறு என்ன வேலை.

89.செல்வி.K.நிதர்ஷிகா : ஆரம்பப் பிரிவில் குறைநிரப்பி அதனை மீளச்செய்தவர்.

90.திரு.MIM.நிஸ்மி : விருப்பமின்றி வந்து செல்லும் வரை பணி நிறைவு.

91.திருமதி.MBM.சுஜா : உளவியல் ஆலோசனைக்கு வந்து ஆளில்லாப் பாடத்தை கற்பித்துக் கொண்டிருப்பவர்.

92.திரு.MSM.ஜிகாத் : அட்டாளைச்சேனை செல்வதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

93.திரு.MVM.சஜாத் : தற்காலிகமாக வந்து தடம் பதித்து நிரந்தரமானவர்.

94.திருமதி.M.தயாபரன் : ஐந்துக்கு வந்து முகவரி கொடுத்தவர்.

95.திருமதி.S.சேகர் : மீண்டும் வந்து ஆரம்பப் பிரிவுக்குள் நுழைந்தவர்.

96.திரு.S.சதீஸ்குமார் : பிள்ளையின் பிறந்த நாளுக்குக்கூட சுகயின லீவா.

97.திருமதி.M.சண்முகராஜா : சமையலாலும் அமைதியாலும் பலர் மனங்கவர்ந்த ஆரம்பப் பிரிவு ஆசிரியர்.

98.திருமதி.மு.விஜயராகவன் : சங்கீதத்தை இங்கிதமாய்க் கற்பிக்கக் கூடியவர்.

99.செல்வி.N.தனுசியா : அப்பா நமசிவாயம் பெயரைக் காப்பாற்ற வேண்டும்.

100.திருமதி.S.குமணன் : இருமொழி மூலக்கல்வியின் உயிர்ப்பு உங்களிடம்தான்.

101.திருமதி.N.நிதர்ஷன் : தற்காலிகமானாலும் இங்கு பணி செய்வதில் ஆர்வம் இவருக்கு.

102.திருமதி.பிரபாகரன் : கற்பிக்கக் கூடிய ஆர்வம் உள்ளவர்.

103.திருமதி.T.குமுதன் : முன்னைய பாடசாலையில் சிறப்பான சேவையை இங்கும் தர நினைப்பவர்.

104.திருமதி.T.சிவகுமார் : அலுவலகப்பணி தொடக்கம் அனைத்திலும் ஆர்வமுடையவர்

105.செல்வி.J.கிறேஸ் : அன்பு, பணிவு, பேச்சு அனைத்திலும் சிறப்பு.

106.திரு.J.பாலசுந்தரம் : சுகயீன லீவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

107.திரு.T.ரவீந்திரன் : உரிய நேரத்திற்கு முன்னரே வந்து பணி செய்ய ஆரம்பிப்பவர்.

108.திரு.SM.பர்சாத் : என்னை மேலதீக நேரம் வேலை செய்ய விட்டவர்.

109.திரு.N.திவ்வியகுமார் : தப்பிப்பிழைத்து இங்கு வந்து பலனை அனுபவிப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை
உவெஸ்லி உயர்தர பாடசாலையின்
ஓய்வு பெற்ற அதிபர்
திரு .வ. பிரபாகரன் அவர்களுக்கான
பிரியாவிடை நிகழ்வின்
சிறப்பு மலர்

விக்டரி அச்சகம், கல்முனை. 0771597347

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org